வெகுஜன அரசியல் மாத இதழ்
Registered as a Newspaper in Sri Lanka
முரசம் 03
முழக்கம் 10
விலை ரூபா.30
ஒகஸ்ட்-செப்டெம்பர் 2014

# புதிய நீதி

புதிய நீதி (Sinhala)
PUTHIYA NEETHI

# காஸா இன அழிப்பில்

## தமிழர் தரப்புகளின் மௌனம்!

கடந்த மாதம் (யூலை) நடுப்பகுதியிலிருந்து இம்மாத நடுப்பகுதி வரையான ஒரு மாத காலத்தில் பலஸ்தீனத்தின் காஸா மீது இஸ்ரேலிய சியோனிச ஆட்சியினர் மிலேச்சத்தனமான தாக்குதல்களை வான், தரை வழிகளால் நடத்தினர். இதில் இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் இறந்தனர். அவர்களுள் ஐந்நூறு குழந்தைகளும் முதியோரும் கர்ப்பிணித் தாய்மார உட்பட பெண்கள் அடங்குவர். இக் கொடூரத் தாக்குதல்கள் உலக மக்களின் கண்களில் நீரைப் பெருக்கின.

பல நாடுகளின் அரசாங்கங்கள் கண்டனங்களைத் தெரிவித்து இஸ்ரேலின் மூர்க்கத்தனத்தை உடன் நிறுத்துமாறு வற்புறுத்தின. அதேபோன்று உலக நாடுகளின் இடதுசாரி, ஜனநாயக, முற்போக்குக் கட்சிகளும் அமைப்புக்களும் வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு காஸா மீதான தாக்குதல்களை கண்டித்து அவற்றை நிறுத்துமாறு வற்புறுத்தின. இலங்கையிலும் அவ்வாறு ஆர்ப்பாட்டங்கள் இடம் பெற்றன.





ஆனால் மகிந்த சிந்தனை அரசாங்கமோ ஜனாதிபதியோ இஸ்ரேலியத் தாக்குதல்களைக் கண்டிக்கவோ எதிர்க்கவோ இல்லை. ஐக்கிய தேசியக் கட்சியும் ஒதுங்கி நின்றது. பேரினவாத அமைப்புகளும் பொதுபலசேனாவும் இஸ்ரேலின் பக்கத்திலேயே இருந்தன. இங்கே கவனத்தில் கொள்ளவேண்டியது என்னவெனில் தமிழ் இன விடுதலைக்காக முன் நிற்கும் கட்சியினர் எனக் கூறிக்கொள்ளும் தமிழ்த் தேசியவாதத் தரப்புக்கள் அனைத்துமே மௌனம் காத்து நின்றமையாகும். இவர்களது நிலைப்பாடு அரசாங்கத்தினதும் பேரிவாத, அடிப்படைவாத அமைப்புக்களினதும் நிலைப்பாட்டுடன் இணங்கிப் போவதாக அமைந்திருந்தது. அதாவது இஸ்ரேலிய சியோனிசவாத ஆட்சியையும் அதன் கொடிய வான், தரைவழித் தாக்குதல்களையும் கண்டிக்கவோ எதிர்க்கவோ கூடாது. அது இஸ்ரேலியர்களை

பக்.02>>

## நரேந்திர மோடியும் நமது மோடுகளும்

சில விடயங்களில் இந்தியாவின் அரசியல் நிகழ்வுகள், குறிப்பாகப் பிற்போக்கான மாற்றங்கள், இலங்கை நிகழ்வுகட்குப் பிற்பட்டு அமைகின்றன. பிரித்தானிய எசமானர்கள் பரீட்சார்த்தமாக அறிமுகப்படுத்திய சர்வசன வாக்குரிமையும் தேர்தல் அரசியலையொட்டி விருத்திபெற்ற இனவாத அரசியலும் இந்தியாவிற் காலந்தாழ்ந்தே நிகழ்ந்தன. இலங்கையின் இடதுசாரி இயக்கம் காலத்தாற் பிறப்பட்டதாயினும் இடதுசாரிகளின் சீரழிவில் இலங்கை முந்திக்கொண்டதெனலாம். எனினும், மாக்சிய லெனினிய புரட்சிக்கரக் கட்சியின் உருவாக்கம் இலங்கையிலேயே முதலில் நிகழ்ந்தமை முக்கியமானது.

1956இல் பண்டாராநாயக்காவின் தலைமையில் ஸ்ரீ.ல.சு.கட்சியின் வெற்றியைப் போல ஒன்று இந்தியாவில் நிகழவில்லை. இந்தியாவை 1947 முதல் 1977 வரை ஆண்ட காங்கிரஸ் சில வகைகளில் ஸ்ரீ.ல.சு.கட்சியைவிட முற்போக்கானதாக இருந்தாலும் காங்கிரஸ் பெருமுதலாளிகளதும் நிலப் பிரபுக்களதும் ஆதிக்கத்திற்குட்பட்ட சீர்திருத்தக் கட்சியாகவே இருந்தது. இந்திய அரசு இந்தியப் பொருளாதாரத்தின் மீது செலுத்திய ஆதிக்கம் இந்தியப் பெருமுதலாளியாய அந்நிய மூலதனத்துக்கும் அதிருப்தியை

பக்.14>>

## ஊவா மா.சபைத் தேர்தலும் மலையகத் தலைமைகளின் வாக்கு வேட்டையும்

மலையகத்தில் பதுளை, மொனராகல மாவட்டங்களை உள்ளடக்கிய ஊவா மாகாண சபைத் தேர்தல் திருவிழா தொடங்கிவிட்டது. அடுத்த மாதக் கடைசி வாரத்தில் வாக்களிப்பு நாள் வரப்போகிறது. வழமைபோன்று ஏமாற்றுக்கள், மோசடிகள், பொய் வாக்குறுதிகள் லஞ்சம், மிரட்டல், வன்முறைகள், பணவீசல்கள் போன்றவற்றின் மூலம் ஜனநாயக வாக்களிப்பு இடம்பெறும். இவற்றுடன் அந்த ஜனநாயகத்திற்கு உரமூட்ட இனம் மொழி மதம் சாதி என்பன தாராளமாக பார்க்கப்படும்.

ஊவா என்பதால் மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் வாக்குகள் முக்கியம் பெறும். எனவே அரசாங்கத் தரப்பும் எதிர்த் தரப்புக்களும் மலையகத் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெறத் தேர்தல் வியூகம் அமைத்துச் செயற்படுகின்றன. அதற்கு அமைய மலையகத் தமிழ் மக்களின் அரசியல், தொழிற்சங்கத் தலைமைகள் இரு தரப்பிலும் இருந்து வருகிறார்கள். எந்தவொரு மலையகத் தலைமையாவது மலையக மகக்ளின் அடிப்படை வாழ்வாதாரப் பிரச்சினைகளை முன்னிறுத்தித் தனது தனித்துவத்துடன் இத் தேர்தலில் போட்டியிடவில்லை. குறிப்பாகப், பெயர் சுட்டக் கூடிய இ.தொ.கா, தொ.தே.சங்கம், ம.ம.முன்னணி. வடிவேல் சுரேஷ் ஆகிய நான்கு தரப்பினரும் அரசாங்கத்தின் வெற்றிலைச் சின்னத்திற் போட்டியிடுகின்றன. இவர்கள் தங்களுக்குள் கடும் மோதலில் இருந்து வந்தாலும் பேரினவாத பெருமுதலாளித்துவ ஆட்சியாளர்கள் முன்னே பணிவான சேவகர்கள்.

பக்.14>>

# சனநாயகத்தின் எதிரிகள்!

மதங்கள் யாவும் தனிமனித உய்வைப் பேசினும் சமூக நிகழ்வுகள் மதங்களின் போக்கைத் தீர்மானிக்கின்றன. ஒவ்வொரு மதமும் அதனதன் சமூகச் சூழலினதும் காலத்ததினதும் குழந்தையே. மக்கள் மதங்களை நம்பிக்கையின் அடிப்படையிற் பின்பற்றுகின்றனர். நிம்மதியற்ற சமூகச் சூழலில் மதங்கள் மனிதருக்குத் தற்காலிக ஆறுதலளிப்பன என்பதால், மாக்சியர்கள் மதத்தை மனித இனத்தின் எதிரியாகவோ அழிக்கப்பட வேண்டிய ஒன்றாகவோ கருதவில்லை. மாறாக, மதச் சுதந்திரத்தையும் மதமில்லாதிருக்கும் சுதந்திரத்தையும் அரசின் மதச்சார்பின்மையையும் அவர்கள் வலியுறுத்துகின்றனர்.

மதங்கள் அரசியலுக்கு அப்பாற்பட்டனவல்ல. ஒவ்வொரு மதமும் கூறும் அரச விசுவாசம், பொறுமை, தலைவிதி பற்றிய நம்பிக்கைள் போன்றவை முதலாளிய முறைக்குப் பாதுகாப்பானவை. எனவே தனது பிறப்பின்போது தன்னை மறுத்த மத நிறுவனங்களுடன் முதலாளியம் நட்புப் பேணியது. இவ்வாறு, முதலாளிய சனநாயகம் நாடுகளில் மதச் சகிப்புக்கான சூழலை இயலுமாக்கியது.

எனினும், மத நிறுவனங்கள் தமது இருப்பிற்காகக் குறிப்பிட்ட சமூகப் பிரிவுகளின் அதிகார வர்க்கங்களுடன் நெருக்கம் பேணியதால், மத முரண்பாடுகள் அரசியல் முரண்பாடுகளாயின. ஏகாதிபத்தியத்தின் கொலனிய யுகத்தில் கொலனி ஆட்சி மதப் பாகுபாட்டைக் கடைப்பிடித்ததால் விடுதலை இயக்கங்களில் மதமும் பங்குவகித்தது. ஆனாற் கொலனி ஆட்சி நீங்கிய பின்பு ஒவ்வொரு மதமும் தான் சார்ந்த பிரபுத்துவ-முதலாளிய வர்க்க நலன்களுடன் தன்னை இறுகப் பிணைத்துக்கொண்டது. அச்சுரண்டும் வர்க்கங்கள் மதத்தைத் தமது ஆதிக்க அரசியலின் கருவியாக்கின. இப் போக்கிற்கான அடிக்கல் கொலனிய ஆட்சியின் போதே இடப்பட்டதையும் கொலனி ஆட்சி மதப் பகையை மறைமுகமாக ஊக்குவித்ததையும் நாமறிவோம்.

ஏகாதிபத்தியம், தனது இன்றைய நவகொலனியக் கட்டத்தில், ஒரு புறம் தனது உலகமயமாதல் திட்டத்தின் கீழ் உலகைத் தனது ஒன்றிணைந்த கட்டுப்பாட்டுக்குட் கொண்டுவர முயல்கிறது. அதேவேளை, அம் முயற்சிக்குத் தடையாக இருக்கக்கூடிய மக்களைப் பிளவுபடுத்திப் பிரிப்பதற்கான சூழ்ச்சிகளையும் வகுக்கிறது. எனவே ஒரு காலத்தில் ஏகாதிபத்தியத்துக்குச் சவாலாக இருந்தவையான இன, மொழி, மத, தேசிய உணர்வுகளை அது தனக்கு வாய்ப்பாக்கி ஊக்குவிக்கிறது.

ஜூன் மாத நடுவில் அளுத்கமவில் தொடங்கி அதன் அயலில் இருந்த பல ஊர்களிலும் பரவிப் பொதுக் கவனத்துக்கு வந்த பின்பும் ஒரு பெரிய முஸ்லிம் வணிக நிறுவனத்தை இரண்டாம் முறையாக இலக்குவைத்த சிங்கள-பவுத்த வெறியாட்டத்திற்குப் பொதுபல சேனா என்ற அமைப்பு மட்டும் பொறுப்பல்ல. அதற்கு நேரடி ஆதரவும் ஊக்குவிப்பும் சிங்கள-பவுத்தப் பேரினவாத ஜாதிக ஹெல உருமயவிடமிருந்து மட்டும் வரவில்லை. நாட்டில் சட்டத்தையும் சமூக ஒழுங்கையும் அமைதியையும் பேணும் பொறுப்பில் உள்ளவர்களின் அசமந்தமான போக்கும் தற்செயலானதல்ல.

ஏனெனில் அளுத்கம வன்முறைக்கு முன்னோடி நடவடிக்கைகள் கடந்த சில ஆண்டுகளாகவே மேற்கொள்ப்பட்டுள்ளன. அவற்றின் அபாயங்கள் பற்றி ஒவ்வொரு முறையும் எச்சரிக்கப்பட்டுள்ளது. எனவே அளுத்கம வன்முறைக்கு முதலில் அரசாங்கம் பொறுப்புக்கூற வேண்டும். சுயலாபத்துக்காக அரசாங்கத்தில் ஒட்டிக்கிடக்கும் முஸ்லிம் அரசியல்வாதிகள் பொறுப்புக்கூற வேண்டும். மதவாத பாசிசத்துக்கு ஊட்டமளிக்கும் அரசாங்கத்தின் பங்காளிகளாய் இருந்துகொண்டு பாசிச மிரட்டல் பற்றி இடையிடையே முறைப்படும் பாராளுமன்ற இடதுசாரிகள் பொறுப்புக்கூற வேண்டும்.

சவூதி அராபியா இஸ்லாமிய அடிப்படைவாதத்தை வளர்ப்பதைப் பற்றி ஜாதிக ஹெல உருமய பிரமுகர்கள் பேசுகிறார்கள். ஆனால் ஒருகாலத்தில் இஸ்லாமிய அடிப்படைவாதிகளை வளர்த்த விதமாக இன்று பவுத்த அடிப்படைவாதிகளை அமெரிக்க ஏகாதிபத்தியம் வளர்க்கிறது என்பதைப் பேசுவது அதினும் முக்கியமானது.

சகல இன, மத வெறுப்பு அமைப்புக்களையும் தடைசெய்யவேண்டும் என்ற கோரிக்கை இன்று பொருத்தமானது. மத அடிப்படைவாதிகளைத் தனிமைப்படுத்துவதற்கு முதற்படியாக அடிப்படைவாதிகளுக்குப் புகலாகவுள்ளவர்களுடன் பூரணமாக முறித்துக் கொள்ளுமாறு அனைத்துச் சிறுபான்மைச் சமூகத் தலைமைகளையும் மக்கள் வற்புறுத்த வேண்டும். அதற்கு ஆதரவாக அனைத்துச் சனநாயக முற்போக்கு இடதுசாரிச் சக்திகளும் குரல் கொடுக்க வேண்டும்.

நன்றி -செம்பதாகை இணைய இதழ்

# சப்ரகமுவப் பல்கலைக்கழகத் தாக்குதல்: பாசிசத்தின் இன்னொரு முகம்!

கதிர்



ஆகஸ்ட் மாதம் 3ம் திகதி அதிகாலையின் சப்ரகமுவப் பல்கலைக்கழக மாணவர் விடுதியில் வைத்து தமிழ் மாணவன் ஒருவன் அடையாளம் தெரியாத குழுவினரால் தாக்கப்படுகிறான். இதன் தொடர்ச்சியாக தமிழ் மற்றும் முஸ்லீம் மாணவர்களை பல்கலைக்கழகத்தை விட்டு உடனடியாக வெளியேறுமாறு அச்சுறுத்தி எழுதப்பட்ட சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. தமிழ் மற்றும் முஸ்லீம் மாணவர்களுக்கெதிரான இந்த நடவடிக்கை நாட்டின் சகல பாகங்களிலும் சலசலப்பை ஏற்படுத்தியிருந்தது.

அளுத்கம தாக்குதல் ஏற்படுத்தியிருந்த அச்சத்திலிருந்து சற்றே வெளிவந்த மக்களை மீண்டும் இனவாத அச்சத்துக்குள் இழுத்துக்கொண்டு சென்றது இச் சம்பவம். இந் நிலையில் தாக்குதலுக்கு உள்ளான மாணவன் தனக்குத்தானே காயத்தை ஏற்படுத்திக் கொண்டதாகவும் தனிப்பட்ட நலனுக்காகவே இதை செய்ததாகவும் கூறி அம்மாணவர் கைதுசெய்யப்பட்டார். அவரைத் தொடர்ந்து இன்னுமொரு மாணவரும் கைதுசெய்யப்பட்டார். இனவாதக் கும்பல் முதல் போலீசார்வரை அனைவரும் ஒன்றினைந்து நடத்திய ஒரு தாகுதலாகவே இதைப் பார்க்க வேண்டியிருக்கிறது.

ஒருவர் மீதான தாக்குதல் நடந்து பின்னர் அது அவர் தன்னைத்தானே தாக்கினார் என்று சொல்லி அவரையே கைது செய்வது மாதிரியான நடவடிக்கை இதற்கு முன்னமும் நடந்திருக்கிறது. பொதுபல சேனாவுக்கு எதிராக முஸ்லீம் மக்களுக்கு ஆதரவாக கருத்துத் தெரிவித்த விஜித தேரருக்கும் இதுவே நடந்தது.

நாட்டின் பல பிரதேசங்களிலும் நடைபெறும் ஒரே மாதிரியான இன, மத அடிப்படையிலமைந்த தாகுதல்களும் முறுகல் நிலைகளும் திட்டமிட்டு உருவாக்கப்படுவன. அளுத்கமவில் மதத்தின் பேராலும் சப்ரகமுவவில் இனத்தின் பேராலும் நடந்திருப்பது மட்டுமே வித்தியாசம். இவை எல்லாவற்றுக்கும் பின்னால் இயங்குகின்ற பாசிச போக்குடைய அமைப்புக்களின் அதீத வளர்ச்சி நாட்டை அழிவுப்பாதைக்கு இட்டுச் செல்லகின்றது.

அரசின் ஆதரவுடன் இயங்குகின்ற இத்தகைய பாசிச அமைப்புக்கள் பல்கலைக்கழகங்களையும் விட்டுவைக்கத் தயாராய் இல்லை. சமூகத்தின் சகல மட்டங்களிலும் குழப்பங்களைத் தோற்றுவித்து நாட்டில் அமைதியின்மையை ஏற்படுத்துவதன்மூலம் மக்களின் கவனத்தை அத்தியாவசியப் பிரச்சினைகளிலிருந்து திசைதிருப்புவதையே இவ்வமைப்புக்கள் செய்கின்றன. இதன் மூலம் இந்தப் பாசிச ஆட்சியைப் பேணிப் பாதுகாப்பதே இவற்றின் முக்கிய நோக்கம். அரசும் அதையே விரும்புகிறது. ஆட்சி அதிகாரத்தில் தொடர்ந்து நிலைத்திருக்கும் நோக்கத்திலேயே இத்தகைய அமைபுக்கள் சுதந்திரமாக செயற்பட அரசு அனுமதித்துள்ளது.

இவ்வாறன அமைப்புக்களது சகல நடவடிக்கைகளும் தடைசெய்யப்படாத வரை, நாட்டின் எதிர்காலம் கேள்விக்குறியாகவே இருக்கும். தங்களது நலனை மட்டுமே கருத்தில் கொண்டு செயற்படும் இந்த அரசு இதை ஒரு போதும் செய்ய முற்படாது என்பதும் உறுதியானது. உழைக்கும் மக்களின் ஒன்றினைவு மட்டுமே நாட் டினை நல்வழிப்படுத்தக்கூடிய ஒரே கருவியாகும். ஆகவே மக்கள் நலன் கருதும் சகல சக்திகளும் ஒன்றினைவது அவசியமாகிறது ●

## 01>> காஸா இன அழிப்பு

எதிர்ப்பதாகவும் அவர்களின் எசமானர்களான அமெரிக்க ஏகாதிபத்தியத்தை மனம் நோகச் செய்வதாகவும் அமையக்கூடாது என்பதாலேயே அவர்கள் மௌனம் காத்தனர்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தன்னை பலஸ்தீன மக்களின் இயல்பான நண்பன் எனக் கூறியும் காட்டியும் வந்தவர். ஆனால் அதிகாரத்தின் உச்சத்திற்கு வந்ததும் இஸ்ரேலின் நண்பனாகவும் சியோனிசத்தின் தோழனாகவும் மாறிவிட்டார். அதனாலேயே போருக்குப் பிந்திய வடக்கு கிழக்கில் ராணுவத்தின் மூலமும் காணி அமைச்சின் ஊடாகவும் தமிழ் மக்களின் காணிகளை அபகரிப்பதும் ராணுவக் குடியேற்றங்களுக்குத் திட்டமிடுவதும் இஸ்ரேலிய சியோனிசவாதிகளிடமிருந்து பெற்றுக் கொண்ட நடைமுறைகளையோகும். இச் சூழலிலேயே, காஸாவின் மீதான படுகொலைத் தாக்குதல்களை ஜனாதிபதியாலும் அவரது அரசாங்கத்தாலும் கண்டிக்க இயலவில்லை.

இங்கே வேடிக்கையான முக்கிய விடயம் ஏதெனில் தமிழ் மக்களின் விடுதலைக்காகச் செயற்பட்டு வருவதாகத் தம்பட்டம் அடித்துவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எக் கண்டனத்தையும் தெரிவிக்கவில்லை. அதில் இணைந்துள்ள கட்சிகளும் தமது சொந்தக் கண்டனங்களையோ எதிர்ப்பையோ வெளியிடவில்லை. இது தற்செயலானதல்ல. தமிழ்த் தேசியத்தின் அடிப்படை நிலைப்பாடாக இருந்து வந்ததன் தொடர்ச்சியாகும்.

அதாவது தமிழ்த் தேசியவாதக் கட்சிகள் எனப்படும் தமிழர் தரப்புக் கட்சிகள் யாவுமே தமிழ்த் தேசிய இனத்தை ஒரு ஒடுக்கப்படும் தேசிய இனமாகப் பார்ப்பதில்லை. ஆண்ட பரம்பரையில் வந்த ஆண்ட இனம் என்ற ஆதிக்க நோக்கின் ஊடேதான் பார்த்து வந்துள்ளன. அதனால் உலகின் ஏனைய நாடுகளின் ஒடுக்கப்படும் மக்களுடனோ அவர்களது போராட்டங்களுடனோ நட்பையோ புரிந்துணர்வையோ கொண்டிருக்க முடியவில்லை.

உலகில் இடம்பெற்ற, இனனும் இடம்பெற்று வரும் அடக்குமுறைகளுக்கு எதிரான நீதிக்கான எந்தவொரு மக்கள் போராட்டத்தையும் அன்று முதல் இன்று வரை தமிழர் தரப்புக் கட்சிகள் ஆதரித்தது கிடையாது. அதனாலேயே சக்தியாக்கிரகப் போராட்டம் முதல் முள்ளிவாய்க்கால் வரையான எந்தப் போராட்டத்தையும் உலகின் விடுதலைப் போராட்ட சக்திகள் ஆதரிக்கக் கூடியதாக இருக்கவில்லை. இந்தியாவை எடுத்துக் கொண்டால் காஷ்மீர் மக்களது போராட்டம் முதல் வடகிழக்கு மாநிலங்களில் இடம்பெற்றுவரும் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டங்கள் வரை எவற்றையும் தமிழர் தரப்புக் கட்சிகள் ஆதரித்தது கிடையாது. இந்தியாவில் சாதியக் கொடுமைகள் தீண்டாமை அநீதிகளுக்கு எதிரான போராட்டங்களையோ ஆதிவாசிகள் நடாத்தும் போராட்டங்களையோ தமிழ்த் தேசியவாதக் கட்சிகள் ஆதரித்தது கிடையாது.

இக் கட்சிகள் யாவும் இந்திய-தமிழ்நாட்டு ஆளும் கட்சிகளின் விசுவாசிகளாகவே இருந்து வந்தனரே தவிர இந்திய மக்களின் போராட்டங்களை ஆதரிப்போராக இருந்ததில்லை.

அது போன்றே அமெரிக்க-மேற்குலக இஸ்ரேலிய-சியோனிச ஆட்சியாளர்களின் பாதந்தாங்கிகளாகவே தமிழ்த் தேசியவாதக் கட்சிகள் இருந்துவந்துள்ளன. அதன் நீட்சியாகவே காஸா மீது இஸ்ரேல் மிலேச்சத்தனமான தாக்குதல் நடத்தியபோது தமிழர் தரப்பினர் சிங்கள பௌத்த பேரினவாதிகளான அடிப்படைவாத வெறிகொண்ட பொதுபலசேன போன்றவர்களது நிலைப்பாட்டிலேயே நின்றனர். இவர்களிடையே பழமைவாதமும் ஆண்ட பரம்பரை ஆதிக்கச் சிந்தனையும் ஒன்றேதான். வேறுபாடு என்பது மஞ்சள் அங்கியிலும் வெள்ளை வேட்டி உத்தரியத்திலும் பொட்டுப் பிறையிலும் மட்டுமே.

இத்தமிழ்த் தேசியவாதத் தரப்பினர் ஒருகணம் அன்றைய முள்ளிவாய்க்கால் சாவுகளையும் அவலங்களையும் ராணுவக் கொடூரங்களையும் இன்றைய காஸாவுடன் ஒப்பிட்டுப் பார்ப்பார்களேயானால் உண்மைகளைக் கண்டிருப்பர். அன்றைய முள்ளிவாய்க்கால் பிரதேசமும் இன்றைய காஸா நிலப்பரப்பும் பல விடயங்களில் ஒற்றுமையுடையன. காஸாவின் நீளம் 45கி.மீ. அகலம் 8 கி.மீ. சனத்தொகை 18 லட்சம். ஒரு பக்கம் கடல், முள்ளிவாய்க்கால் அமைந்த அன்றைய பாதுகாப்பு வலயம் 5 மைல் நீளம் ¾ மைல் அகலம். சனத்தொகை சுமார் மூன்றரை லட்சம். அங்கு இஸ்ரேலிய ராணுவத் தாக்குதல். இங்கு இலங்கை ராணுவத் தாக்குதல். அங்கு விடுதலைக்குப் போராடும் மக்கள். இங்கு விடுதலை வரும் என நம்பிச் சென்ற மக்கள்.

எனவே தமிழ்த் தேசியவாதிகள் நேர்மையாகவே உள்ளத்தால் உணர்வால் சொல்லால் செயலால் தமிழரின் விடுதலையை வேண்டி நிற்போரேயானால் அத்தகையவர்கள் நிச்சயம் காஸா மீது அமெரிக்கப் பின்புலத்துடன் நடந்த இஸ்ரேலியத் தாக்குதல்களைக் வன்மையாகக் கண்டித்து எதிர்க்க வேண்டியவராவர். அப்படி இல்லை எனில் அத்தகையவர் தமிழ் மக்களை ஏமாற்றி ஆதிக்க அரசியல் பிழைப்பு நடாத்தும் பிழைப்புவாதிகளாக மட்டுமே இருக்க முடியும். இல்லாதவிடத்து கொழும்பு புகையிரதநிலையம் முன்பாக முன்னிலை சோஷலிசக் கட்சி, புதிய-ஜனநாயாக மாக்சிச-லெனினிசக் கட்சி உட்பட இடதுசாரிக் கட்சிகள் நடாத்திய காஸாத் தாக்குதலுக்கு எதிரான கண்டன ஆர்ப்பாட்டத்தில் தமிழ்த் தேசியவாதத் தரப்பைச் சேர்ந்த ஒரு பாராளுமன்ற உறுப்பினரே கனவானோ கலந்து கொண்டிருப்பார். ஆனால் அதில் தமிழர்கள் நிறையப் பேர் இருந்தனர். தமிழ்த் தேசியவாதிகள் எவரும் இல்லை. இதன் மூலம் தமிழ்த் தரப்பினர் தங்களது சுயரூபம் என்ன என வெளிக்காட்டிக் கொண்டனர ●

# சுன்னாகத்தில் 82 கிணறுகளில் கழிவு எண்ணெய்க் கசிவுகள்

## குடாநாட்டில் மற்றுமொரு வெலிவேரியா

*வலி வடக்கு நிருபர்*

யாழ் குடாநாடு முழுவதற்கும் மின்சாரம் வழங்கும் இலங்கை மின்சார சபையின் பிராந்திய மத்திய நிலையமாக இருந்து வருவது சுன்னாகம் மின்சார நிலையமாகும். இந் நிலையத்தை அண்மித்த சுன்னாகம் கிழக்குப் பகுதியில் உள்ள கிராமங்களின் கிணறுகளில் எண்ணெப் படிவங்கள் காணப்படுகின்றன. இதனால் மேற்படி கிணறுகளின் நன்னீர் மாசடைந்து குடிப்பதற்கும் பிற தேவைகளுக்கும் பயன்படுத்த முடியாத நிலை தோன்றியுள்ளது. அத்துடன் அது பயிர்ச் செய்கையையும் சில இடங்களில் பாதித்துள்ளதாக விவசாயிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சுன்னாகம் கிழக்கு, சூராவத்தை, மயி லணி போன்ற பகுதிகளில் உள்ள கிணறுகளில் மேற்படி எண்ணெய்ப் படிவுகள் வட்ட வட்டமாகக் காணப்படுவதாகக் கூறப்படுகிறது. சுன்னாகம் பிரதேசம் கணிசமான ஆழமுள்ள கிணறுகளும் எக்காலத்திலும் உவராக மாறாத நன்னீர்க் கிணறுகளும் கொண்ட செம்மண் பிரதேசமாகும். அதனால் வீட்டுத் தேவைகட்கும் விவசாயத் தேவைகட்கும் இக் கிணறுகளில் இருந்து மக்கள் நன்னீரைப் பெற்று வந்தனர். ஆனால் இன்று எண்ணெய்க் கசிவாற் கிணற்று நீரைக் குடிநீராகவும் விவசாயத்துக்கான நீராகவும் பயன்படுத்த முடியாத அவலநிலை தோன்றியுள்ளது.

இந் நிலையை மக்கள் வலி-தெற்கு பிரதேச சபைக்கும் ஏனைய அமைப்புகட்கும் தெரியப்படுத்தினர். இதிற் சுன்னாகம் கிழக்கு சனசமூக நிலைய நிர்வாகம் அக்கறையுடன் முன்நின்று செயற்பட்டு வருகிறது. வலி தெற்கு பிரதேசசபை பத்துப் பிளாஸ்ற் ரிக் பீப்பாக்களை முக்கியமான இடங்களில் வைத்து ஒவ்வொரு நாளும் தண்ணீர் பவுசர் மூலம் குடிநீர் வழங்கி வழங்கி வருகின்றது. அதேவேளை நீர்பாசனத் திணைக்களம் அப் பகுதிகளில் உள்ள நூறு கிணறுகளின் நீரை எடுத்துப் பரிசோததித்து ஆய்வுக்கு உட்படுத்தியது. அதன் முடிவு என்னவெனில், 82 கிணறுகள் மாசடைந்து குடிநீர்ப் பாவனைக்கு உதவாத நிலைக்கு வந்துள்ளன.

இவ்வாறு குடிநீர் கிணறுகளில் எண்ணெய்ப் படிவுகள் ஏற்படச் சுன்னாகம் மின்சார நிலையத்தில் இருந்து வெளியேறும் கழிவு எண்ணெய்யே காரணம் என மக்கள் கூறுகிறார்கள். மின்சார நிலைய மின்பிறப்பாக்கிகளில் இருந்து வெளியேறும் கழிவு எண்ணெய் முதலில் ஒரு வளவில் தேங்கி நின்றது. அதனால் அயலில் மணமும் மாசடைதலும் ஏற்பட்டதுடன் விவசாய உற்பத்திகளும் பாதிக்கப்பட்டன. அதன் பின் கழிவு எண்ணெய்யை நிலத்தில் பெரிய துளைகள் இட்டு அடி ஆழத்திற்கு விட்டனர். இதன் காரணமாகவே மேற்படி கழிவு எண்ணெய் கிணறுகளிற் கசிய ஆரம்பித்தது. சுண்ணாம்புப் பாறைகள் கொண்ட நில ஆழப் பகுதிகளில் கழிவு எண்ணெய் படிவுகள் இலகுவாக ஊறிச் சென்று கிணறுகளை மாசுபடுத்துகின்றன. மேலும், இம் மின்பிறப்பாக்கிகளின் இரைச்சல், சுற்றாடலிற் கடும் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது. அதேவேளை, வெளியேறும் கரும் துகள்கள் காற்றிற் கலந்து வீடுகள், பயிர்கள், மற்றும் பொது வெளிகளிற் படிந்து சூழலை மாசடையச் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இதனாற் குடியிருக்கும் மக்களும் விவசாய உற்பத்திகளும் விவசாயிகளும் கடும் பாதிப்புகளை எதிர்நோக்குகின்றனர்.

லக்சபான மின் இணைப்பு யுத்தச் சூழலில் அழிவுற்றதாலேயே சீன நிறுவனமான நொதேன் மூலம் மின்சாரத்தை உருவாக்க ஒப்பந்தமாகியது. மின்சாரம் அத்தியாவசியம் என்பதால் பாவனையாளர்கள் அதிக கட்டணத்தில் மின்சாரத்தைப் பெற்று வந்தனர். ஆனால் அதன் மற்றொரு கேடாகவே கிணறுகள் மாசடைந்து வருகின்றன. எனவே இக் கழிவு எண்ணெய்யை நிலத்திற் தேக்க வைப்பதும் நிலத்தின் அடிக்குச் செலுத்துவதும் உடன் நிறுத்தப்பட வேண்டும். விரைவாக லக்சபான மின்சாரத்தை முழுமையாகப் பெறுவதன் மூலம் எண்ணெய் மூலம் மின்சாரம் பெறுவது நிறுத்தப்பட வேண்டும். கம்பனியின் லாபத்திற்காகத் தமது கிணறுகள் எண்ணெய்ப் படிவுகளால் மாசடைந்த நாசமடைவதை மக்கள் ஏற்க மாட்டார்கள். குடிநீரும் விவசாயத்திற்கான நீரும் முக்கியமானவை.

இது போன்றே, கம்பஹா மாவட்டத்தின் வெலிவேரியாவில் கையுறை தயாரிக்கும் ஒரு ரப்பர் கம்பனியில் இருந்து வெளியேறிய கழிவு இரசாயன நீர் அப் பிரதேசத்தின் முன்னூறு கிணறுகளை நாசமாக்கியது. அதனை எதிர்த்துச் சில மாதங்கட்கு முன் அப் பிரதேச மக்கள் போராடினர். அந்த விதமாகவே குடாநாட்டின் சுன்னாகம் மின்சார நிலையத்தை அண்மித்த பகுதிகளில் கழிவு எண்ணையால் குடிநீர் விவசாயக் கிணறுகள் மாசடைந்து நாசமாகிப் போயுள்ளன. அதனை மக்கள் எதிர்த்துநிற்க வேண்டிய அவசியம் இன்று ஏற்பட்டுள்ளது ●

# வவுனியாவில் அளுத்கம கவனயீர்ப்புப் போராட்டமும்

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும்

அளுத்கம பேருவளை முஸ்லிம் மக்கள் மீதான கொலைவெறித் தாக்குதலையும் வன்முறைச் செயற்பாடுகளையும் கண்டித்து வவுனியாவில் சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு ஏற்பாடு செய்திருந்த கவனயீர்ப்புப் போராடட்டத்தில் வவுனியா மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் தமிழ்த் தேசிய இயக்க அமைப்புக்கள் எதுவும் தமது பங்கு பற்றுதலை வழங்கவில்லை என்பது கவனத்திற்குரியது.

ஆனால் அதில் சிறப்பம்சம் என்னவெனில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிவசக்தி ஆனந்தன், செல்வம் அடைக்கலநாதன் போன்றோர் அளுத்கம சம்பவம் மீதான கண்டன அறிக்கைகளை காரசாரமாக வெளியிட்டு தம்முடைய வாக்குவங்கிகளைக் காப்பாற்றி கொள்வார்கள். அது அவர்களுக்கு கைவந்த கலை என்பதுடன் கவனயீர்ப்பு போராட்டத்தில் கலந்து கொள்ளாமைக்கு அவர்களிடம் நிறையவே காரணங்களும் இருக்கும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் அடிக்கடி தமிழ் முஸ்லிம் ஐக்கியம் பற்றியும் வடக்கு கிழக்கு இணைப்புப் பற்றியும் வாய் கிழிய கத்திக் கொள்வார்கள். ஆனால் அவ்விடையங்களை நடைமுறைப்படுத்துவதற்கு செய்யவேண்டிய ஆக்கபூர்வமான எதனையும் இவர்கள் செய்ய முன் வருவதில்லை. செய்யவும் மாட்டார்கள். அதனால் எதிர்காலத்தில் தமிழ் முஸ்லிம் மக்கள் ஐக்கியப்பட்டு தமிழ் முஸ்லிம் உறவினை பலப்படுத்தவும் அநீதிக்கு எதிராக ஒன்று திரண்டு கைகளை உயர்த்தவும் முன்வருதல் வேண்டும். சிங்கள பௌத்த பேரினவாத அரசு தன்னுடைய அதிகாரத்தை பாதுக்காக்கவும் சிங்கள மக்களை அடிப்படைப் பிரச்சினைகளிலிருந்து அவர்களை திசை திருப்பவும் இவ்வாறான இன மத குரோத நிகழ்ச்சிகளை எதிர்காலத்திலும் திட்டமிட்டு நடத்தவே செய்யும் என்பது கடந்த கால இலங்கையின் அனுபவமும் படிப்பினையுமாகும்.

எனவே இலங்கை தேசமானது முற்போக்கு பாதையில் பயணிக்க வேண்டுமாயின் தமிழ் முஸ்லிம் மக்கள் ஒற்றுமைப்படவும் மலையக மக்களை அரவணைத்து சாதாராண சிங்கள மக்களுக்கு உண்மைகளை எடுத்துரைத்து எதிர்காலத்தில் ஒரு முன்னேற்றகரமான இலங்கையை கட்டியெழுப்ப அனைத்து முற்போக்கு சக்திகளும் ஓரணியில் திரளவேண்டியதன் அவசியத்தை பிற்போக்கு பழைமைவாத கட்சிகளின் நிலைப்பாடுகள் எடுத்துக்காட்டுகின்றன.

அத்துடன் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஒரு போதும் இன ஐக்கியத்தை வலுப்படுத்தவோ தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சனையை தீர்ப்பதற்கு ஏனைய சமூகங்களுடன் ஐக்கியப்படவோ தயார் இல்லை என்பதையே கடந்த கால அனுபவங்களாக உள்ளது. அதாவது தமிழ்த் தேசியத்திற்கு பயன் உள்ள போரட்டங்களில் அவர்கள் முன்னுக்கு நிற்கும் அளவிற்கு தொழிலாளர் சார்ந்த கவனயீர்ப்பு போராட்டங்கள் ஆசிரியர்களின் தொழிற்சங்க போராட்டங்கள், மீனவர் போராட்டங்கள் என்பவற்றில் அவர்கள் இரட்டைத்தனமான வேடங்களை காட்டி நிற்பதுடன் இனவாத நிலைப்பாட்டைக் கொண்டே தமிழ் மக்களை வாக்கு வங்கி நிலைப்பாட்டிற்குள் வைத்திருப்பதுடன் அவர்களை ஏமாற்றியும் வருகிறார்கள் இதற்கு தக்க உதாரணமாக வவுனியாவில் நடைபெற்ற அளுத்கம சம் பவ கவனயீப்பு போராட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கலந்து கொள்ளாமையை உதாரணமாக கொள்ள முடியும்.

எனவே எதிர்காலத்தில் தமிழ்-முஸ்லிம்-மலையக மக்களும் ஒடுக்கப்படும் சிங்கள மக்களும் ஓரணியில் திரளக் கூடியவாறு இடதுசாரி அமைப்புக்கள் முற்போக்கு சக்திகள் உறுதியாக கைகோர்க்க வேண்டியதன் அவசியத்தையும் தேவையையும் இச்சம்பவங்கள் எடுத்து காட்டி நிற்கின்றன ●

# வவுனியா நகரசபைத் தொழிலாளர்களின்

## தொழிற்சங்கப் போராட்டமும் காட்டிக் கொடுப்புக்களும்

கடந்த மாதம் வவுனியா நகர சபை நிர்வாகத்தால் ஏழு தொழிலாளர்கள் வேலையிலிருந்து உடனடியாக நிறுத்துவதாக நகரசபைச் செயலாளர் அறிவித்ததைத் தொடர்ந்து நகரசபை ஊழியர்கள் தொழிற் சங்க போராட்டத்தை நிர்வாகத்துக்கு எதிராக முன்னெடுத்திருந்தினர். அதன் போது சில பாராளுமன்ற உறுப்பினர்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் காவலர்கள், அரசாங்கத்திற்குக் கூஜா தூக்கித் திரியும் காவலர்கள் என பாகுபாடின்றி அனைத்து தரப்பாலும் அத் தொழிலாளர்களுக்கு நியமனம் பெற்றுத்தருவதாக கூறப்பட்டு தொழிற்சங்க போராட்டம் நிறுத்தப்பட்டது. இவர்கள் இவ் ஏழு தொழிலாளர்களுக்கான நியமனத்தை ஒரு கிழமைக்குள் பெற்று தருவதாகவே வாக்குறுதி அளித்துச் சென்றார்கள். ஆனால் அப்படிச் சொன்னவர்கள் அதற்கு எதிர் மாறாகவே நடந்து கொள்கிறார்கள்.

இதில் சிறப்பம்சம் என்னவெனில் வடமாகாண சுகாதார அமைச்சர் ப. சத்தியலிங்கம் பத்து நாட்களுக்குள் தொழிற் சங்க பிரச்சனையை தீர்ப்பதாக கூறி எழுத்து மூல வாக்குறுதியையும் அளித்துவிட்டுச் சென்றார். ஆனால் வாக்குறுதி கொடுக்கப்பட்டு ஒன்றரை மாதங்கள் கடந்துவிட்டது. ஆனால் அமைச்சரின் வாக்குறுதி காற்றில் பறந்து விட்டது. அடுத்தவர் ஸ்ரீ ரெலோ கட்சியின் செயலாளர் நாயகம் ப. உதயராசா. இவர் வருவார். வாக்குறுதிகள் கொடுப்பார். பின்னர் அவரே மறந்துவிடுவார். இவர் ஒரு கிழமைக்குள் ஏழு தொழிலாளர்களின் பிரச்சனையையும் தீர்ப்பதாக வாக்குறுதி அளித்தார். ஆனால் ஒன்றுமே நடக்கவில்லை.

இவர்கள் அனைவரும் ஒரே மாதிரியானவர்கள். அதாவது மக்களை ஏமாற்றுவதிலும் கனவான்களாக நாடகம் நடிப்பதிலும் மிகக் கெட்டிக்காரர்களாக இருந்து வருகிறார்கள். தொழிலாளர்களை ஏமாற்றுவதில் மட்டும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு காவலர்களும் அரசாங்க ஏஜென்டுகளும் ஒரே மாதிரி நடந்து கொள்வதன் அர்த்தம் என்னவெனில் அவர்கள் அனைவரும் ஒரே வர்க்கம் என்பதை போராட்ட குணாம்சமுள்ள தொழிலாளி வர்க்கம் என்பதுதான். இதனைப் புரிந்து கொள்ளாத வரை தொடர்ந்தும் தொழிற்சங்க போராட்டங்கள் தோல்வியையே தழுவும்.

நகரசபை சுத்திகரிப்பு தொழிலாளர்கள் ஏழு பேரின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாத இத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரும் ஆளும் கட்சி பிரமுகர்களும் அவர்களுக்கு அடிமைச் சேவகம் செய்வோரும் எப்படி தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலையைப் பெற்றுத்தர போகின்றார்கள் என்பதையும் தமிழ்த் தேசிய இனம் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

இவ் நகர சபை தொழிலாளர்களின் நியாயமான போராட்டத்திற்கு புதிய ஜனநாயக மாக்சிச லெனினிச கட்சியும் அவர்களுடைய தோழர்களும் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்ததுடன் சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பின் பிரதிநிதிகளும் அவர்களுக்கு ஆதரவளித்து போராட்டத்தை வலுப்படுத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும் ●

*வவுனியா நிருபர்*

# உன்னஸ்கிரிய வைத்தியசாலையும் மக்களுக்கான படிப்பினைகளும்

மலையகத்தைப் பொறுத்த வரையில் பிரச்சினைகளுக்கும் வேடிக்கைகளுக்கும் குறைவே இல்லை. சுகாதார ரீதியில் மிக அடிமட்டத்தில் இருக்கும் மலையகத்தில் இது வரையில் மந்த போசனை, தாய் சேய் இறப்பு விகிதம், குறையூட்டம், இரத்தச் சோகை என்பன ஒப்பீட்டளவில் ஏனைய இடங்களை விட அதிகம். ஆனால் இவ்விதம் கஷ்டப்படும் மக்களின் பிரச்சினைகளை அம்மக்களின் பணத்தையும் வாக்கையும் நக்கிப் பிழைக்கும் மலையகத் தலைமைகள் எனத் தம் பட்டம் அடிக்கும் ஊதாரிகள் கண்டுகொள்வதே இல்லை.

சுகாதாரத் துறைக்கும் மலையக மக்களுக்குக்கும் இடையிலான தூரம் எவ்வளவு என்பதற்கு ஏகப்பட்ட உதாரணங்களைக் கூறலாம். தோட்ட நிர்வாகங்களின் கீழ் இயங்குகிற மருந்து வழங்கும் இடமாகவே தோட்ட மருந்தகங்கள் (Dispensary) காணப்படுகின்றன. அவற்றையே வைத்திய சாலை எனக் குறிப்பிடுகின்றனர். பெரிய தோட்டங்கள் சிலவற்றில் ஓரிரு வைத்தியசாலைகளைச் சீர் செய்ததை வைத்து முழு மலையகத்தின் சுகாதாரத் துறையும் சிறப்பாக இருக்கிறது என கூறுவொரும் உள்ளனர்.

இதற்கு சான்றாக மாத்தளையில் SLSPCக்கு சொந்தமான உன்னஸ்கிரிய தோட்டத்தின் இயங்காமல் மூடிக் கிடக்கின்ற வைத்தியசாலை பற்றிய தகவல்கள் கிடைத்தன. பலப் பத்தாண்டுகளாக இவ் வைத்தியசாலை நோயாளர் வார்டு, மகப்பேற்று வார்டு, வெளி நோயாளர் சிகிச்சை பிரிவு, பிரேத அறை எனப் பல வகைகளிலும் ஒரு அம்புலன்சுடனும் இயங்கி வந்தது. ஆனால் தற்போது இவ் வைத்தியசாலையானது ஒரு தாதியுடன் மாத்திரமே இயங்கி வருகிறது. அத்துடன் மாதமொருமுறை உக்குவளை MOHஆல் கிளினிக் நடைபெறுகிறது.

அத்துடன் இத் தோட்டத்தில் லெச்சுமி, செங்கசாடு மேல்பிரிவு, செங்கசாடு கீழ் பிரிவு, புதுக்காடு, மாமோலை போன்ற பிரிவுகள் அதி தொலைவுகளில் உள்ளன. நோயாளர் ஒருவரைக் குறித்த பிரிவிலிருந்து உன்னஸ்கிரிய வைத்தியசாலைக்கு கொண்டுவர ஒரு மணித்தியாலமாவது செல்லும். அத்துடன் பாதைகளும் சீரில்லை. ஆக அதி அவசரமான சந்தர்ப்பம் என்றால் அப் பிரதேசத்தை அண்டியுள்ள வத்தேகம, மாத்தளை நகர வைத்திய சாலைக்கு 2 மணித்தியாலங்கள் செலவழித்துச் வெல்லவேண்டும். பல சந்தர்ப்பங்களில் அவசரமான சந்தர்ப்பங்களில் நகர வைத்தியசாலைக்குக் கொண்டுச் செல்லப்பட்ட பலர் வழியிலேயே இறந்திருக்கிறார்கள்.

இன்றைய வளர்ச்சியடைந்த நாகரிகக் காலத்தில் இவ்வாறன பின்தங்கிய நிலைமையானது துர்ப்பாக்கிய நிலையேயாகும். எமக்குத் தெரிந்து மூடப்பட்டது உன்னஸ்கிரிய வைத்தியசாலை மட்டுமே. இன்னும் இவ்வாறான தோட்ட வைத்தியசாலைகள் எத்தனை இருக்கும்? அதிகாரிகள் மட்டும் இச் சூழ்நிலைக்குப் பொறுப்பாளிகள் அல்ல. சோற்றுப் பார்சலுக்கும் சாராயத்திற்கும் விலை போய், யார் யாருக்காகவோ (குப்பை கட்சிகளுக்காய், தொழிற்சங்கங்களுக்காய்) ஊரைக் கூறு போட்டுச் சண்டைபோட்டுக் கொண்டிருப்பவர்களும் இதற்கு பொறுப்புக்கூற வேண்டும் ●

# மோட்டார் சைக்கிள் டயரி

சைக்கிள் தோழர்கள்

**சம்பவம் 1 (2014.05.16)**

டிக்கோயா பகுதியைச் சேர்ந்த தொழிலாளி, உறவினரை சந்திப்பதற்காக உக்குவளை வந்திருந்தார். அவரைச் சந்திக்கும் வாய்ப்பு சைக்கிள் தோழர்களுக்கு கிடைத்தது. சந்திப்பு பெறுமதியாக அமைந்தது. அத் தொழிலாளியிடம் கேட்ட சில கேள்விகளையும் அவர் தந்த பதில்களையும் வாசகர்கள் முன்வைக்கின்றோம்.

கேள்வி:- உங்க தொழிற்சங்க தலைமைகள் பற்றி சொல்வதாக இருந்தால்...

பதில்:- செய்ய வேண்டிய விஷயங்கள் எவ்வளவோ இருக்க மலையக மக்கள் விழிப்படையத் தவறுவதால் தொழிற் சங்கங்கள் கொண்டாடத்தில் தான். காணி உரிமை, சம்பளப் பிரச்சினை உட்பட எல்லாமே கிடப்பில் தான்.

கேள்வி:- தொழிற்சங்க மூலமாக உங்களுக்கு கிடைக்கும் வேலை பாதுகாப்பு பற்றி ...

பதில்:- பிரதேச தொழிற்சங்க காரியாலயத்தில் தேவைக்கு அதிகமாக ஆட்கள் இருக்கிறார்கள். தொழிலாளர்கள் தோட்ட பிரச்சினைகளை எடுத்துக்கிட்டு தொழிற்சங்கத்திற்கு போய் சொன்னா, உடனடியாகத் தோட்டத் துரைக்கு தகவல் சொல்வதோடு வந்த தொழிலாளரின் பெயரையும் விபரத்தையும் போட்டுக்கொடுக்கும் புதிய வேலைத்திட்டத்தையும் ஆரம்பித்துள்ளனர். தொழிலாளியை துரையாகிய நீங்கள் அடக்கத்தெரியாவிட்டால் நாம் உங்களுக்கு உதவ முடியாது என்ற கருத்தியல் வேறு. தொழிற்சங்க அமைப்பு முறையின் அடிப்படையை மீறும் மலையகத்தின் பெரிய தொழிற்சங்கத்தின் சோக முடிவு இது.

• • •

**சம்பவம் 02 (2014.5.27)**

உக்குவளையில் கடைத் தொழிலாளர்களுடன் இடம்பெற்ற சந்திப்பில் சைக்கிள் தோழர்களாகிய நாம் கலந்துக்கொண்டோம். கடைத் தொழிலாளர்களின் **E.P.F., E.T.F.** பிரச்சினையே அன்றைய பிரதான பேசு பொருளாக அமைந்தது. விறுவிறுப்பாகச் சென்று கொண்டிருந்த கலந்துரையாடலில் தொழிலாளி ஒருவர், “தோழரே எங்களுக்கு **E.P.F., E.T.F.** பிடிக்கப்பட்டால் நாம் வாங்கும் சம்பளம் குறைவடையும் தானே” என்றார்.

“மாத சம்பளம் 18,000 மாதிரித்தான் கிடைக்குது. அதுலயும் **E.P.F.** என்றால் 14,500 ரூபாவை வைத்துக்கொண்டு நாம் என்னதான் செய்யுறது?” என்றார். அதற்குக் கூட்டத்தில் கலந்துகொண்ட புதிய ஜனநாயக மா.லெ. கட்சி தோழர் உங்க சம்பளத்திலிருந்து மாத்திரம் **E.P.F., E.T.F.** அறவிடப்படுவதில்லை உதாரணமாக உங்களுக்கு 20,000 ரூபா சம்பளம் என்றால் 2,400 ரூபா தான் வைப்பிலிடப்படும். உங்கள் சம்பளத்திலிருந்து 8 சதவீதமும் முதலாளி தரப்பிலிருந்து 12 சதவீதமும் அறவிடப்படும் என்றார். உங்களுக்குச் சேர வேண்டியதை தடுப்பதற்காக முதலாளிகளும் அவர்களுக்குச் சாமரம் வீசி பிழைப்பு நடத்தும் சில ஞான சூனியங்களும் செய்யும் மூடிமறைப்புக்களே இவை” என்றார். தொழிலாளர் வர்க்கத்திடம் முதலாளிகள் மறைக்கும் இன்னும் எத்தனை உண்மைகள் கிடக்கோ?

• • •

**சம்பவம் 03 (2014.6.7)**

சைக்கிள் தோழர்களாகிய நாம் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தின் முன்னாள் தோட்டத் தலைவி ஓருவரைச் சந்திக்கச் சென்றிருந்தோம். புதிய ஜனநாயக மா.லெ. கட்சி தோழர்களுடன் தொடர்பைப் பேணி வரும் அவர் அப் பகுதியில் பெண்கள் அமைப்பை உருவாக்குதல் பற்றிய கலந்துரையாடலுக்கே எம்மை அழைத்திருந்தார்.

நீண்ட நேரம் அரசியல் பொருளாதார விடயங்கள் பற்றி பேசிக் கொண்டிருந்தோம். தொழிலாளர் ஓற்றுமை உணர்வு மழுங்கடிக்கப்பட்டிருப்பதைப் பற்றி உணர்ச்சி பொங்க பேசினார். கட்டாயம் சிந்திக்க வேண்டிய உண்மைச் சம்பவமொன்றுப் பற்றி கூறவும் அவர் மறக்கவில்லை. லங்கா தோட்ட தொழிலாளர் சங்கம் அண்மையில் தோட்டங்களிலுள்ள பிரச்சினை உட்பட பல்வேறு விடயங்களுக்காக ஓர் அடையாள வேலை நிறுத்தத்திற்கு அறிவித்தது. ஆனால் சங்கத் தலைவர் சகபாடிகள் உட்பட குறிப்பிட்ட சிலர் அதிகாலை 5.30 மணிக்கே மலைக்குச் சென்று கொழுந்துகளை வேகமாக பறித்து குறிப்பிட்ட நிறை எடுத்தவுடன் மலையிலிருந்து இறங்கி நிறுத்துக் கொடுத்துவிட்டு வீடு வந்துள்ளனர்.

கொழுந்தை பறிக்காமல் நிர்வாகத்திற்கு நட்டத்தை ஏற்படுத்தி அழுத்தங் கொடுப்பதன் ஊடாக தமது கோரிக்கைகளை நிறைவேற்றிக்கொள்வதே அடையாள வேலைநிறுத்தத்தின் நோக்கம். உணர்வுள்ள தொழிலாளர்கள் எம் மத்தியில் இருந்தாலும், இவ்வாறான உணர்வற்ற தொழிலாளர்களைத் தான் தோட்ட நிர்வாகமும் ஓட்டுப்பொறுக்கும் தொழிற்சங்கங்களும் எதிர்பார்க்கின்றன. ஒரு காலத்தில் மலையக மக்களைப் போராட்ட அரசியலுக்குத் தயார்படுத்திய லங்கா சமசமாஜக் கட்சியின் தொழிற்சங்கமே லங்கா தோட்ட தொழிலாளர் யூனியன் ஆகும். இன்று அரசாங்கத்துடனும் தோட்டக் கம்பனிகளுடனும் குழாவுவதால் இவ்வாறான தொழிலாளர்களை உருவாக்கியுள்ளார்களோ தெரியவில்லை?

• • •

**சம்பவம் 4(2014.6.12)**

சைக்கிள் தோழர்களுக்கு ரத்துவத்த மேல் பிரிவு இளைஞர்களிடமிருந்து ஓர் அழைப்பு வந்தது. போயா தினத்தில் தானம் வழங்கும் நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது கலந்துகொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டது. நிகழ்விற்குச் சென்றோம்.

லயங்களுக்கு அருகில் இருக்கும் பலா மரங்களை வெட்டி நாசம் செய்வதற்கு தோட்ட நிர்வாகம் முயல்கிறது. இதைத் தடுப்பதற்கு முன்னேற்பாடாகப் பலாக்காய் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு போசோன் போயா தினத்தைப் பயன்படுத்திப் பலாக்காய் அவித்து தானம் வழங்கினர்.

நிர்வாகத்தின் பொருத்தமற்ற வேலைத்திட்டத்திற்கு அப் பிரதேசத்தின் கிராமபுறச் சிங்கள மக்களும் எதிர்ப்பு தெரிவிக்கின்றமை ஒரு சிறப்பம்சமாகும். போயா தினத்தில் பலா மரத்தின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தித் தானம் வழங்கி மக்களை விழிப்புறச் செய்தமை அப் பகுதி இளைஞர்களை முற்போக்கு எண்ணம் கொண்டவர்களாக வெளிப்படுத்தியதோடு எதிர் காலத்தில் மக்கள் விரோத செயற்பாடுகளை ஆழமாக எதிர்ப்பவர்களாகவும் அடையாளம் காட்டியது. ரத்துவத்த மேல் பிரிவு இளைஞர்களின் இச் செயற்பாடு நம்பிக்கையளிப்பதாக இருந்தது.

• • •

# வாக்குப் பொறுக்கத் தொழிற்சங்கம்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனது தொழிற்சங்கத்தின் மூலம் தோட்டத் தொழிலாளர்களை உள்வாங்கிக் கொள்ள கடும் முயற்சிகளைச் செய்து வருகின்றது. நுவரெலியா, கண்டி, மாத்தளை ஆகிய மாவட்டங்களின் பல பகுதிகளில் சலுகைகளைக் காட்டி மக்களைத் தொழிற்சங்கத்திற் சேர்த்து வருகின்றது.

மலையகத்தில் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சிக்கு என்று ஒரு தனியான வாக்கு வங்கி இல்லை. மேற்படி முயற்சி அதனைச் சரிசெய்வதற்குத் தொழிற்சங்க மூலமான அரவணைப்பாக இருக்கலாம். தொடர்ந்தும் தொண்டமான் பரம்பரையினரையும் திகாம்பரத்தையும் நம்பி வாக்கு பொறுக்குவதை விடத் தனது கட்சிக்கென தனியான வாக்கு வலிமையைக் கட்டியெழுப்பலாம் என்ற திட்டத்துடன் அமைச்சர்கள் தொடக்கம் நகரசபைத் தலைவர்கள் வரை அனைவரையும் பயன்படுத்தி மஹிந்தர் தொழிற்சங்க அங்கத்துவத்தை விருத்தி செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மலையகத்தில் வாக்கு அரசியல் நடத்தும் தொழிற்சங்கங்கள் தொழிலாளருக்காக செய்தது ஒன்றுமில்லை. அதேபோல, தற்போது கிட்டதட்ட 10 வருடங்களாக ஆட்சியில் இருந்துகொண்டிருக்கும் மஹிந்த தலைமையிலான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியினரும் இந் நாட்டின் தோட்ட தொழிலாளர் உட்பட அனைத்து சாதாரண உழைக்கும் மக்களையும் எல்லா விதத்திலும் நசுக்கியே வருகின்றனர். மக்கள் இதனைக் கேள்விக்கு உட்படுத்த வேண்டிய நிலையில் இருக்கின்றனர். மக்கள் விழிப்புணர்வு பெற்றுப் புதிய பாதைக்கான தேடலை முன்னெடுப்பதே தற்போது உள்ள ஓரே வழியாகும் ●

# அமைச்சரின் கண்டுபிடிப்பு

தற்போது சர்வதேசச் சந்தையில் பால்மாவின் விலை குறைந்துள்ளது. சர்வதேசச் சந்தையில் விலை அதிகரிக்கும் போது பால் மாவின் விலையை உயர்த்தும் அரசாங்கம் வீழும் போது ஏன் விலையைக் குறைக்கவில்லை என்ற கேள்வி சாதாரண மக்கள் மத்தியில் கேட்கப்படுகின்றது.

ஜனாதிபதியின் அமைச்சரவையின் கூட்டுறவு வர்த்தக அமைச்சரான ஜோண்ஸ்டன் பெர்ணான்டோ, நிகழ்வொன்றின் போது பால்மா தொடர்பாகக் கருத்து வெளியிட்டார். அதாவது சர்வதேசச் சந்தையில் பால்மாவின் விலை குறைந்துள்ளது உண்மைதான். இருந்தாலும் ஜனாதிபதியின் வேண்டுகோளிற்கு இணங்க நாம் விலையை குறைக்கவில்லை என்றவர், பால்மாவின் விலையைக் குறைத்தால் உள்நாட்டு பால் உற்பத்தியாளர்கள் பாதிக்கப்படுவர். பின் பால் உற்பத்தியாளர்களை அரசாங்கம் நட்டாற்றில் விட்டுவிட்டதாகக் கூறி அதைப் பாரிய பிரச்சினையாக்கி எதிர்கட்சிகள் அரசியல் செய்யும். ஆதனால்தான் நாம் இவ்வாறான முடிவை எடுக்க வேண்டியதாயிற்று என்றார்.

பால்மா விற்பனை வரி மூலம் கிடைக்கும் வருமானத்தை இழக்கவும் விரும்பாது, பல்தேசிய ராட்சத பொண்டேரா போன்ற நிறுவனங்களின் தயவில் இயங்கும் மக்கள் விரோத அரசாங்கத்தின் பல்டியே இதுவாகும். இலங்கை மக்களின் பாலுணவுத் தேவையைப் பூர்த்தி செய்யுமளவு உள்நாட்டு உற்பத்தி இடம்பெறுகிறது என்ற பச்சைப் பொய்யையும் பாலுற்பத்தியில் நிறைவைக் காண்பதற்கான விவசாயிகள் சார்பான வேலைத் திட்டங்கள் இடம்பெறாது உள்நாட்டு பால் உற்பத்தியாளர்களைப் பாதுகாப்பதாகவும் கூறும் அமைச்சரின் கருத்துக்கு இவ் வருடத்திற்கான சிறந்த பொய்யனுக்கான சான்றிதழ் வழங்குமாறு சிபாரிசு செய்யலாம் ●

# கபினட்டின் புத்திகெட்டதனம்

எல்கடுவ பிளாண்டேஷனின் ரத்வத்த கீழ், மேல் பிரிவுகளில் 20க்கு மேற்பட்ட பலா மரங்கள் அண்மையில் வெட்டப்பட்டது. இது தொடர்பில் மேல் பிரிவு இளைஞர்கள் கிராம சேவகர், தோட்ட சேமநல அதிகாரி, தொழிற்சங்கப் பிரதிநிதிகள் எனப் பலரிடம் மரம் வெட்டுதல் பற்றி விளக்கம் கோரியுள்ளனர். அதற்கு அவர்கள் அனைவரும் தந்த பதில், மேலிடத்திலிருந்து வந்த கட்டளை. கபினட்டும் அனுமதி தந்துதான் இவ் வேலையைச் செய்கின்றோம் என்பதாகும்.

திருப்திப்படாத இளைஞர்கள் மாவட்டச் செயலாளரிடமும் தொடர்புகொண்டு விளக்கம் கேட்க, அவரும் கபினட் உத்தரவுடன் தான் வெட்டப்படுகின்றது என்று கூறியிருக்கிறார். எமது பாரம்பரியம் எமது பண்பாடு என மேடைகளில் முழக்கமிடும் அமைச்சர்கள் மனிதனுக்கும் கால்நடைகளுக்கும் சூழலுக்கும் மிகவும் பயனுள்ள பலா மரங்களை வெட்டித் தகர்க்க அனுமதித்தது ஏன்? இது கபினட்டின் மதிகெட்ட தனத்தையே பறைசாற்றுகின்றது. அது மட்டுமல்ல, தோட்டத் தொழிலாளர் குடியிருப்புகளில்தானே வெட்டப்படுகிறது என்ற பேரின வாதச் சிந்தனையும் இதில் கலந்துள்ளது ●

புதிய நீதி
Puthiya Neethi
පුදිය නීදි
முரசம் 03, ஒகஸ்ட்–செப்டெம்பர் 2014 , பக்கம் 16, விலை ரூ.30. முழக்கம் 10
இல. 15/4இ மகிந்தாராம வீதி, கல்கிசை
தொ.பேசி: 0716 745 642, 0779 774 427 தொ.நகல்: 0112 473 757
WEB: www.ndmlp.org Email: puthiyaneethi2012@gmail.com

# வடமாகாண சபையும் ஆதிக்க சக்திகளும்

வடமாகாண சபை உருவாகிப் பத்து மாதங்கள் ஆகின்றன. அதனை ஏனைய மாகாண சபைகள் போன்று இயங்கவிடாது தடுப்பதில் அரசாங்கம் கண்ணில் எண்ணெய் ஊற்றினாற் போற் கவனத்துடன் இருக்கிறது. அதற்காகவே, பதவிக் காலம் முடிந்த கையோடு, பழைய வட மாகாண ஆளுனரான ஓய்வு-பெற்ற ராணுவ அதிகாரி ஜீ.ஏ. சந்திரசிறி ஜனாதிபதியால் மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார். எட்டு மாகாண சபைகளிலும் ஆளுனர் என்பவர் சும்மா இருப்பார். முதலமைச்சரே யாவற்றையும் கவனித்துச் செயற்படுத்துவார். ஆனால் வட மாகாண சபையில் நிலைமை தலைகீழாக இருந்து வருகிறது. முதலமைச்சர் பெயருக்கு இருக்கிறார். ஆனால் ஆளுனரே சகலதையும் தீர்மானித்துச் செயற்படுத்தி வருகிறார். முதலமைச்சரும், மாகாண அமைச்சர்களும் உறுப்பினர்களும் ஒழுங்காகச் செய்து வருவது ஒன்றை மட்டும்தான்: அது கைதடியில் அமைக்கப்பட்டு வரும் மாகாண சபைக் கட்டிடத்தில் சபைத் தலைவர் தலைமையில் கூடித் தீர்மானங்களை நிறைவேற்றி அறிக்கை விடுவதாகும். அதற்கப்பால் முதல் அமைச்சரும் அமைச்சர்களும் தமக்கு வழங்கப்பட்டுள்ள சிறிய வளங்களுடனும் பணிமனைகளில் இருந்து வருகின்றனர். இவற்றுக்கு மேல் வெளியே கூட்டங்கள் கருத்தரங்குகள் வரவேற்புகளில் மாலைகள் மேளதாளங்களுடன் பொன்னாடைகள் போர்த்தி உரையாற்றுவதும் தாராளமாக நடக்கிறது.

மாகாண அமைச்சர்களுக்கு உத்தியோகபூர்வ சொகுசு வாகனங்கள் கிடைத்துள்ளன, முதலமைச்சருக்குக் கிடைக்க இருக்கின்றது. மாதாந்தக் கொடுப்பனவுகள், படிகள் போன்றன யாவும் அவர்களுக்குக் கிடைக்கின்றன. அவர்களுக்குள்ள உடனடிப் பிரச்சினை தமக்குக் கிடைக்க வேண்டிய மாகாண சபை அதிகாரங்கள் கிடைக்கவில்லை என்பதுதான். ஆனால் மகிந்த சிந்தனை அரசாங்கமும் ஜனாதிபதியும் அவற்றை வழங்குவதாக இல்லை. அதாவது வட மாகாண சபை இருக்கிறது ஆனால் இல்லை என்ற நிலைதான்.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் கீழ் 1987ல் அரசியலமைப்புக்குக் கொண்டு வந்த 13வது திருத்தமே மாகாண சபை முறையைத் தோற்றுவித்தது. இனப் பிரச்சினைக்குப் பெயரளவிலான தீர்வாக மாகாண சபை முறைமை முன்வைக்கப்பட்ட போதும் அது தேசிய இனப் பிரச்சினைக்கு ஒரு திருப்தியான தீர்வல்ல என எல்லோரும் அறிவர். இந் நிலையில் அதிகாரங்கள் இல்லாவிடினும் ஆட்சித் தரப்பிற்கும் அவர்களது முகவர்களுக்கும் இடம்கொடுக்கத் கூடாது எனக் கூறியே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாகாண சபைத் தேர்தலில் இறங்கியது. முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரனை முதலமைச்சர் வேட்பாளராகவும் நிறுத்தியது. வட மாகாண மக்கள் மகிந்த அரசிற்குத் தமது வாக்குப் புள்ளடி மூலம் ஒரு பதிலடியையும் வழங்கினர். இருந்தும் ஆளும் பேரினவாத அரசும் அதன் ஜனாதிபதியும் அசையவே இல்லை.

இவை ஒருபுறம் இருக்க மாகாண சபையும் ஏனைய உள்ளூராட்சி சபைகளும் ஓரிரு சபைகளை விட இன்று யாவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வசமே இருந்து வருகின்றன. அதிகாரங்கள் குறைவு அல்லது இல்லை என்பதற்கும் அப்பால் இச் சபைகளிலே இருக்கும் மக்கள் பிரதிநிதிகள் எனப்படும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் என்ன செய்கிறார்கள் என்பதை மக்கள் உன்னிப்பாக அவதானித்து வருகிறார்கள். முதலமைச்சரையும் வேறு ஓரிரு சபைகளின் தலைவர்களையும் உறுப்பினர்களையும் விடப், பெரும்பாலானவர்கள் அதிகார ஆதிக்க தலைவர்கள் போன்றே மக்களுடன் நடந்து கொள்கிறார்கள். தாம் மக்களுக்குச் சேவை செய்ய வந்த பொதுநலச் சேவையாளர்கள் என்பதைப் பற்றிய எவ்வித சிந்தனையும் இன்றி அதிகாரத்துடனும் பதவி ஆணவத்துடனும் நடந்துகொள்கிறார்கள். தேர்தலுக்கு முன்பு குனிந்து வளைந்து பணிவும் பண்பும் கொண்டவர்கள் போன்று நடந்துகொண்ட கூட்டமைப்பின் பிரதிநிதிகள் தேர்தல் வெற்றிக்குப்பின் தமது சுயரூபத்தைக் காட்டத் தொடங்கினர். நடை உடை பார்வை பேச்சுத் தொனி யாவற்றிலும் தமது ஆதிக்க அதிகார மிடுக்கைக் காட்டி நிற்கின்றனர்.

பிரதேச சபையில் ஒரு சாதாரண விடயத்தைச் செய்வதற்குக்கூட ஒரு பொதுமகன் இந்த மக்கள் பிரதிநிதிகள் என்போர் முன் பயந்து ஒடுங்கித் தலை சொறிந்து ஒதுங்கி நிற்க வேண்டியுள்ளது. அந்தளவிற்கு இப் பிரதிநிதிகளது ஆதிக்க அதிகார முனைப்பு வெளிப்படுகிறது. இது தற்செயலானதல்ல. இது தமிழ்த் தேசியவாத ஆதிக்க அரசியல் வழிவந்த மரபிற்குரியதாகும். தமிழ்த் தேசியவாத ஆதிக்க அரசியல், எப்போதோ ஆண்டதொரு பரம்பரைச் சிந்தனை மரபில் இருந்து வந்ததாகும். அங்கே, வர்க்கம், சாதி, ஊர், பணபலம், அந்தஸ்து போன்றவற்றின் உள்ளீடாகக் கொண்டதே பழைமைவாதம் நிரம்பிய தமிழ்த் தேசியமாகும். இவற்றுக்கு மதப் பண்பாட்டு அடிப்படைகளும் உதவி நிற்பனவாகும்.

எனவே மாகாண சபைக்கும் உள்ளூராட்சி சபைகளுக்கும் மத்தியில் இருந்து அதிகாரங்கள் வழங்கப்படவில்லை என்பது உண்மையும் மறுக்கமுடியாத நியாயயமுமாகும். ஆனால் உள்ள அதிகாரக் கதிரைகளில் பதவி பெற்று இருக்கும் தமிழ்த் தேசியப் பிரதிநிதிகள் என்போரின் திமிர்த்தனங்களும் சுயநல ஈடேற்றங்களும் மக்களைப் பற்றிய அக்கறையீனங்களும் ஆழ்ந்த விமர்சன நோக்கிற் காணப்பட வேண்டியன.

இன்றைய மாகாண சபை, உள்ளூராட்சி சபைகளின் பிரிதிநிதிகள் ஒடுக்கப்படும் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் போன்று நடந்து கொள்கிறார்களா என்பது முக்கிய நோக்கு நிலையாகும். மாறாக ஆதிக்க அதிகாரத் தன் முனைப்புடன் நடந்து கொள்கிறார்களா என்பதே தமிழ் மக்கள் மத்தியில் உள்ள கேள்வியாகும். அதனாலேயே முழுமையான அதிகாரங்கள் இல்லாமலே நம்மவர்கள் இப்படி நடந்துகொள்கிறார்கள் என்றால் அதிகாரங்கள் அனைத்தும் கிடைத்தால் நம் மக்கள் பிரதிநிதிகள் எவ்வாறு நடந்து கொள்வார்கள் என்றே மக்கள் மனம் புழுங்கிக் கேட்கிறார்கள். இவை தனிமனித விருப்பு வெறுப்பு சார்ந்தவை அல்ல. பழைவாதச் சிந்தனையின் தொடரச்சி என்பதும் அரசியலில் அதன் நீட்சி என்பதும் காண வேண்டிய உண்மைகளாகும். இங்கே புதிய சிந்தனையும் செயலும் தேவைப்படுகின்றன ●

*ஆசிரியர் குழு.*

# பொதுபலசேனா பயணிக்கும் பாதை


*வெகுஜனன்*

பொதுபல சேனா என்பது அண்மைக்காலமாகச் சிங்கள மக்களிடையே தெற்கில் இயங்கி வரும் பௌத்த சிங்கள அடிப்படைவாத அமைப்பாகும். அதன் பொதுச் செயலாளராக கலகொட அத்தே ஞானசார தேரர் என்ற பௌத்த பிக்கு இருந்து வருகிறார். இந்த அமைப்பும் அதன் தலைமையும் 2011ம் ஆண்டுக்குப் பின்பே அரசியல் அரங்கில் பிரபலம் பெற்றது. அதன் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் பேச்சு வல்லமை மிக்கவர். ஆனால் அவர் வாய்திறத் தால் அதில் இனவாதமும் மதவாதமும் வெளிவருவதுடன் அவற்றின் உச்சமாக இன, மத வெறி கக்கப்படுகிறது. அதன் நேரடி அபாயத்தை அளுத்கமவில் முஸ்லீம் மக்களுக்கு எதிரான கொலை வெறியாட்டம் நடக்க முன்பாக அவர் நிகழ்த்திய உரை காட்டியது.

பொதுபல சேனா இன்று சகல வளங்களும் கொண்ட அடிப்படைவாத அமைப்பாகக் உள்ளது. பணம், பொருள், வாகனங்கள், காணி மனைகள், ஆட்பலம் தேவைப்படும் போது பயன்படுத்த அடியாட்கள் எனச் செயற்பட்டு வருகிறார்கள். இவற்றுடன் முக்கியமாக இருந்து வருவது அரசாங்க உயர்மட்டத்தில் உள்ள பெரும் புள்ளிகளின் நேரடி அரவணைப்பாகும். அத்துடன் நிதி உதவி உட்பட வேறு சில வளங்களும் வழங்கப்படுவதாக நம்பப்படுகிறது. அண்மையில் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் சிறி லங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினரும் அதன் அரசாங்க அமைச்சருமாக இருந்தவரான மங்கள சமரவீர பொதுபலசேனா பற்றிய ஒரு குற்றச்சாட்டைப் பகிரங்கமாக முன்வைத்தார். அதாவது பாதுகாப்பு அமைச்சுக்கான நிதியிலிருந்து பொதுபல சேனாவிற்கு நிதியுதவி சென்றடைகிறது என்பதே அக் குற்றச்சாட்டாகும். அத்துடன் பொதுபல சேனாவிற்கும் பாதுகாப்புச் செயலாளருக்கும் அந்நியோன்னியத் தொடர்பு இருந்து வருவதாகவும் எல்லா ஊடகங்களிலும் செய்திகள் வெளிவந்தன. மேலும் பொது பல சேனவிற்கு நோர்வேயூடான அந்நியத் தொடர்பும் உதவிகளும் கிடைத்துவருவதாக வெளிவந்துள்ள குற்றச்சாட்டுக்கள் இலகுவிற் புறந்தள்ளத் தக்கனவல்ல.

மேற்சொன்னவாறு நம்பப்படுவதன் காரணம், இதுவரை பொதுபலசேனாவின் மோசமான அறிக்கைகள், இனவாதப் பேச்சுக்கள், அடிபிடி நடவடிக்கைகள் போன்ற எதற்கும் அரசாங்கத் தரப்பின் கண்டனமோ எதிர்ப்போ எச்சரிக்கையோ வெளியிடப்படவில்லை என்பதாகும். அது மட்டுமன்றி பொதுபல சேனா நேரடியாகத் தலையிட்டுக் கூட்டங்களைக் குழப்பிய செய்கைகட்கு எதிராக எவ்விதச் சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அத்தனையிலும் ஞானசாரவுக்கும் அவரது அடியாட்களுக்கும் பொலீஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. அதாவது, பொதுபலசேனா தட்டிக்கேட்க முடியாத சண்டியனாகவும் அவனைச் சுற்றியுள்ள அடியாட்கள் போன்று இவர்களும் இருந்து வருகிறார்கள்.

இந் நிலையிலே அரசாங்க அமைச்சர்கள் சிலரை ஞானசார மிகக் கீழ்த்தரமாகத் திட்டியும் எச்சரித்தும் வருகிறார். தனது பேச்சிலும் அறிக்கைகளிலும் அமைச்சர்களைப் பன்றிகள் என்றும் நாய்கள் என்றும் அவர் அப்பட்டமாக ஏசியும் வருகிறார்.



**ஃபாசிசப் பாதையில் பயணிக்கும் எந்தச் சர்வாதிகார ஆட்சிக்கும் ஃபாசிசக் குழுக்களும் குண்டர்களும் அவசியமானவை. அத்துடன் தேசியவாதம் என்பது இறுதியில் ஃபாசிசத்தைச் சென்றடையும் என்பது இலங்கையில் அனுபவவாயிலாகக் காண முடிந்த ஒரு விடயமாகும்.**

இவற்றுக்கெல்லாம் கூட்டுப் பொறுப்பு உள்ளதாகக் கூறி வரும் அமைச்சரவையும் அதன் தலைவரான ஜனாதிபதியும் கண்மூடி மௌனம் காக்கின்றனர். இதன் அர்த்தம் மகிந்த சிந்தனை அரசாங்கத்திற்கும் அதன் உயர் மட்டத்தினருக்கும் பொதுபல சேனாவும் ஞானசாரவும் தேவைப்படுகின்றனர் என்பதாகும்.

ஃபாசிசப் பாதையில் பயணிக்கும் எந்தச் சர்வாதிகார ஆட்சிக்கும் ஃபாசிசக் குழுக்களும் குண்டர்களும் அவசியமானவை. அத்துடன் தேசியவாதம் என்பது இறுதியில் ஃபாசிசத்தைச் சென்றடையும் என்பது இலங்கையில் அனுபவ வாயிலாகக் காணமுடிந்த ஒரு விடயமாகும். பெருந்-தேசியவாதமான பௌத்த சிங்களப் பேரினவாதம் ஆட்சி அதிகாரத்தின் உச்ச நிலையில் ஃபாசிசத்தை முன்னெடுத்தது. அதனை ஐக்கிய தேசியக் கட்சியும் சிறி லங்கா சுதந்திரக் கட்சியும் ஒருவருக்கு ஒருவர் சளைக்காது முன்னெடுத்த வந்துள்ளனர். அதாவது தாங்கள் தங்களது வர்க்க நலன்களுக்காக ஜனநாயகம் என்னும் பெயரில் உருவாக்கிய அரசியல் அமைப்பையும் ஏனைய சட்டத் திட்டங்களையும் கொண்டு ஆட்சி நடத்த முடியாத அளவுக்குச் சமூக முரண்பாடுகளும் பிரச்சினைகளும் மேலோங்கும் போது, கொடிய சர்வாதிகரத்தை ஆளும் வர்க்கம் மக்கள் மீது கட்டவிழ்த்து விடுகின்றது. சட்டபூர்வமான ஆயுதப் படைகள் சகலவித அத்துமீறல்களிலும் ஈடுபட்டு, இருக்கும் சட்டங்களுக்கு அப்பால் மக்கள் மீது அட்டுழியங்கள் புரிகின்றன. இதனையே ஃபாசிசம் செய்கிறது.

அன்று ஜேர்மனியில் ஹிட்லரும் இத்தாலியில் முசோலினியும் யப்பானிய ஆட்சியாளர்களும் ஃபாசிசத்தின் வெறிபிடித்த கூறுகள் அனைத்தையும் வெளிப்படுத்தினர். அதனையொத்த ஃபாசிச வழிமுறை ஆட்சிகள் பலநாடுகளில் இருந்துவந்தன. அவ் ஆட்சிகள் தாம் கட்டி வளர்த்த ஆயுதப் படைகளுக்கு அப்பால், ஆயுதக் குழுக்களையும் குண்டர் படைகளையும் உருவாக்கி வெவ்வேறு பெயர்களில் மக்கள் மீது பாயவிட்டனர். இத்தகைய ஃபாசிசக் குழக்கட்கும் குண்டர் படைகட்கும் சிறுபான்மை இனத்தவர்கள், சிறுபான்மை மதத்தவர்கள், சிறுபான்மை நிறத்தவர்கள், அதன் பின் தொழிலாளர்கள் மற்றும் உழைக்கும் மக்கள் பலியான வரலாறு உலகெல்லாம் உண்டு.

இன்று உலகமயதாலும் நவதாராளப் பொருளாதாரக் கொள்கைகளும், நடைமுறையில், நாளாந்தம் தேச விரோத மக்கள் விரோதமாகி வருகின்றன.

>>>15

# கண்களை மறைக்கும் குறுகிய பார்வைகள்

மோகன்

பிரச்சினைகளை மற்றவர்களுடைய கண்ணோட்டத்திலும் விளங்குவதன் மூலமே அமைதியான தீர்வுகளைப் பெற இயலும். மதவாதமாயினும் தேசியவாதமாயினும் இனவாதமாயினும், அது அவ்வாறான ஒரு விரிந்த பார்வையை மறுக்கிறது. குறிப்பிட்ட ஒரு தரப்பின் நலன்களை மட்டுமே வலியுறுத்துகிற எவரும், சரியெது பிழையெதென்றோ நியாயமெது அநியாயமெதென்றோ சிந்திக்க விரும்பாதவர்களாவர். எந்தப் பிரச்சனையிலும் மற்றவர்களைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தித் தாமே தீர்ப்பு வழங்குவது எளிது. ஆனால், நமது முடிவுகள் மற்றவர்கட்கு ஏற்புடையனவாயிருக்கும் வாய்ப்பு அரிது.

தமிழ்த் தேசியவாதக் கட்சிகள் என்ன நோக்கத்துடனோ முஸ்லிம்கட்கெதிரான பேரினவாத வன்முறையை எதிர்த்து யாழ்ப்பாணத்தில் ஒரு ஆர்ப்பாட்டத்தை நடத்தியமை மெச்சத்தக்கது. அந்த நியாயமான நிலைப்பாட்டை மேலும் விரிவாக முன்னெடுக்க அவர்கட்கு இயலாமை பற்றிக் குற்றச்சாட்டுக்கள் இருந்தன. மறுபுறம் அவர்கள் எடுத்த சிறு முயற்சியும் சில தமிழ்த் தேசியவாதகளுக்குப் பிடிக்கவில்லை. தமிழ் ஊடகங்களிலும் அந்த நோக்கு வெளிப்பட்டது.

முஸ்லிம் அரசியல் தலைவர்களை எல்லாம் வாங்கு வாங்கென்று விளாசித்தள்ளுகிற தமிழ் அரசியல் ஆய்வாளர்கள் தங்களுடைய அரசியல் பாரம்பரியத்தைத் திரும்பிப்பார்க்க விரும்புவதில்லை. தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினையை ஒருபுறம் சிங்கள–தமிழ் மக்களிடையிலான பிரச்சினையாகக் காட்டும் அதேவேளை, அவர்கள், முஸ்லிம்கள் மீதான குரோதத்தை வளர்ப்பதில் மிகக் கவனமாக இருக்கிறார்கள்.

முஸ்லிம் அரசியல் தலைவர்கள் யோக்கியமானவர்கள் என்று நான் சொல்லவில்லை. ஆனால் அவர்களை விட யோக்கியமான தலைவர்கள் நமக்கு வாய்த்திருக்கிறார்களா என்று கேட்டால், நிச்சயமாக இல்லை என்றே சொல்வேன். தமிழ் மக்களின் வாக்குக்களைப் பெறுவதற்காகக் கடந்த அறுபத்துச் சொச்ச ஆண்டுகளில் எத்தனை உறுதி மொழிகள் வழங்கப்பட்டன? எல்லாத் தமிழ்த் தலைவர்களுக்கும் தங்கள் தங்கள் மேதாவிலாசம் பற்றி அசைக்க இயலாத நம்பிக்கை உள்ளது. அதனால், மற்றவர்கள் போடக்கூடிய கணக்குக்களை அவர்கள் பெரிதாக எடுப்பதில்லை. தங்களுடைய உடனடி ஆதரவு வட்டங்களை மகிழ்விப்பதற்கும் முடிந்தால் விரிவாக்குவதற்கும் அப்பால் அவர்களுடைய கவனங்கள் போவது குறைவு. நமது தேசிய இன ஒடுக்கற் சூழலில், ஒடுக்கப்பட்ட சமூகத்தின் ஒற்றுமையைப் பற்றிப் பேசித் தமது ஆதரவுத் தளங்களைப் பேணுவது தமிழ்த் தேசியத் தலைமைகட்குக் கைவைத்த கலை. பதவிப் போட்டிகளும் உட்பூசல்களும் கட்சிகளுக்குள் இருந்தவந்த அளவிலேயே கூட்டணிகளிலும் உள்ளன எனலாம். 1977 தேர்தலில் யூ.என்.பி ஆட்சிக்கு வந்தால் ஏதாவது சமரசத்தை எட்டலாம் என்ற தமிழ்த் தலைமைகளின் எதிர்பார்ப்பில் மண் விழுந்தது மட்டுமன்றி, அவை முன்மொழிந்த தமிழீழக் கோரிக்கை தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணிக்கே ஒரு சவாலாக மாறியது. அதன் பிறகு, தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியினரால் தமிழ் மக்களுக்கு முகங்கொடுக்க இயலவில்லை. இளைஞர் இயக்கங்கள் பலவும் இந்தியாவின் சூத்திரப் பாவைகளாகித் தம்மைச் சீரழித்த பின்னர், விடுதலைப் புலிகளின் ஆசிகளுடன் புனவர்வாழ்வு பெற்று "தமிழர் ஐக்கிய" அரசியலை இன்னமும் உயிரோடு வைத்திருப்பது மகிந்த சிந்தனை ஆட்சியின் பேரினவாத ஒடுக்குமுறை மட்டுமே.

முஸ்லிம் இனவாதத்தை ஒரு வலிய சக்தியாக்கியதில் விடுதலைப் புலிகளின் பங்கு பெரியது. வாக்கு-விகிதாசாரப் பிரதிநிதித்துவம், முஸ்லிம் காங்கிரஸ் ஒரு பாராளுமன்ற அரசியற் சக்தியாக வலுப்பெற உதவியது. எனினும் அதன் பாராளுமன்ற ஆசன வலிமை சுயதேவைகட்கான பேரம்பேசலுக்குப் பயன்பட்ட பின்னர் தவிர்க்க இயலாமலே பிளவுகள் தலைதூக்கின. இன்று முஸ்லிகளின் நலனுக்கான அரசியற் கட்சி என்று பாசாங்கு செய்யவும் தகுதியற்ற கட்சிகளாக முஸ்லிம் தேசியவாதக் கட்சிகள் சீரழிந்துள்ளன. முஸ்லிம் தேசியம் அரசியலில் அனாதரவாகக் கிடக்கிறது.

மலையகத்தின் சமரச–சலுகை அரசியலைப் பற்றி அதிகம் விவரிக்கத் தேவையில்லை. இ.தொ.கவின் அரசியற் துரோகங்களைக் காட்டி அதற்குச் சவாலாக எழுந்த மலையக மக்கள் முன்னணி மலையத் தமிழ்த் தேசியத்தின் குரலாகவே வளர்ந்தது. எனினும் அதற்குக் கிடைத்த முதல் வாய்ப்பிலேயே அது சலுகை அரசியற் சேற்றிற் தன்னை அமிழ்த்திவிட்டது. இன்றைய மலையக அரசியலின் அவலம் வெறுமனே கட்சிகளின் ஒற்றுமையின்மையைப் பற்றியதல்ல. மலையகத்தின் மக்களின் பிரச்சனைகட்கு முகங்கொடுக்கக்கூடிய ஒரு அரசியற் பார்வையும் தூரநோக்குமுடைய எந்தச் சக்தியும் அங்கு நிலைபெறாமையே மலையகத்தின் முக்கிய பலவீனமாகும். மலையக, இந்திய வம்சாவழி என்ற அடையாளங்களை வலியுறுத்தி மலையகத்தினுள் மாற்று அரசியற் சிந்தனைகள் வளராமல் தடுப்பதில் மலையகத் தமிழ்க் கட்சிகளும் தொழிற்சங்கங்களும் ஒருமுகப்படுகின்றன. அதைவிட எப்படியாவது ஆளுங்கட்சியுடன் ஒட்டிப் பதவிகளைப் பெறுவதில் மலையகத் தலைமைகள் முஸ்லிம் தலைமைகளையும் மிஞ்சிவிட்டன.

> **"தமிழீழக் கோரிக்கை தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணிக்கே ஒரு சவாலாக மாறியது. அதன் பிறகு, தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியினரால் தமிழ் மக்களுக்கு முகங்கொடுக்க இயலவில்லை. இளைஞர் இயக்கங்கள் பலவும் இந்தியாவின் சூத்திரப் பாவைகளாகித் தம்மைச் சீரழித்த பின்னர், விடுதலைப் புலிகளின் ஆசிகளுடன் புனர் வாழ்வு பெற்று "தமிழர் ஐக்கிய" அரசியலை இன்னமும் உயிரோடு வைத்திருப்பது மகிந்த சிந்தனை ஆட்சியின் பேரினவாத ஒடுக்குமுறை மட்டுமே."**

சிறுபான்மைத் தேசிய இனங்களின் இன்றைய அரசியல் அவலம், அவர்களிடையே ஒரு மாற்று அரசியல் எழாததன் விளைவு எனலாம். மக்களிடையே பல விடயங்களைப் பற்றிய கொதிப்பு உள்ளது. ஆனால் ஒவ்வொரு நிகழ்வையும் தனித்தனியாகக் காண்பதும் அனைத்திற்கும் பொதுவாக உள்ள விடயங்களை அறிவதும் அந்த அடிப்படையில் மக்களைத் திரட்டுவதும் முற்சொன்ன அரசியற் கட்சிகட்கு இயலாதது.

மற்ற எந்தத் தேசிய இனத்தினரதும் பிரச்சினை நமது பிரச்சினையல்ல என்ற அலட்சியம் போக, மற்றச் சமூகத்தினர் எவரையும் நம்ப இயலாது என்ற சிந்தனைப் போக்கும் தமிழரிடையே வலிந்து தூண்டப்படுகிறது. இவ்விடயத்தில் அரசியல்வாதிகளின் நடத்தை ஒருபுறமிருக்க ஊடகத் துறையினரிடையேயுள்ள குறுகிய நோக்கும் கவலை தருவது. நல்ல விதிவிலக்குக்களாச் சில ஊடகவியலாளர்கள் உள்ளனர். அவர்களை மற்றோர் தமக்கு முன்மாதிரியாக்க வேண்டும். பரபரப்புச் செய்திகள் பத்திரிகை விற்பனைக்கு உதவலாம். ஆனால் அவை பத்திரிகையின் நம்பகத்துக்குக் கேடானவை. குறிப்பாக இன முரண்பாட்டைத் தூண்டுகிற விதமாகத் தகவல்களை வெளியிடும் போக்கிற்கு எதிராகப் பொறுப்புள்ள ஊடகவியலாளர்கள் இணைய வேண்டும்.

பிற சமூகங்களின் தலைமைகளின் குற்றங்களை நம்மிடையே பேசுகிற அதேவேளை, அக் குற்றங்கட்கு நமது தலைமைகள் அளித்துள்ள பங்கையும் நாம் யோசிக்க வேண்டும். நம்மிடையே பிறரின் துன்பங்களைப் பற்றிய அக்கறை குறைவு. தமிழ்த் தேசியவாத அரசியலில் அது அறவே இல்லை எனலாம். சிங்கள மக்கள் மீது அரச படைகள் பாயும் போது தமிழ்த் தலைமைகள் என்ன செய்கின்றன? தமிழ் அரசியல் ஆய்வாளர்கள் என்ன சொல்லுகிறார்கள்? முஸ்லிம்கட்கெதிரான வன்முறை வலுத்த போது அதில் எவ்வாறு அரசியல் ஆதாயம் தேடலாம் என்று சிலரும் "முஸ்லிம்களுக்கு இதுவும் வேண்டும் இன்னமும் வேண்டும்" என்கிற விதமாகக் "கேந்தி" காட்டுகிற படித்த முட்டாள்கள் சிலரும் செயற்படுகின்றனர். இவற்றுக்கு வெளியே, மக்கள் அனைவரையும் பாதிக்கிற பிரச்சினைகளைப் பற்றிப் பேசி, அவற்றின் அடிப்படையில் இன, மத, மொழி எல்லைகளைத் தாண்டிய ஒரு பொது உரையாடலை இவர்கள் ஏன் தவிக்கிறார்கள் என்பது சிந்தனைக்குரியது.

அதற்கான பதிலின் ஒரு பகுதியைச் சம்பூரில் விவசாய நிலங்களை இழந்த தமிழரையும் வடபுலத்தில் மீன்வளத்தை அந்நியக் கொள்ளையரிடம் பறிகொடுக்கும் மீனவர்களையும் பற்றிய வஞ்சகமான நடத்தையிற் காணலாம். தங்களுடைய சுயலாபத்திற்காகத் தேர்தல் கண்ணோட்டத்தில் செயற்படுவோர் மக்கள் தமது பிரச்சினைகளைப் பன்முகமாக நோக்குவதை விரும்பமாட்டார்கள். அந்தச் சிந்தனைச் சிறையிலிருந்து விடுபடாதவரை, ஒவ்வொரு சமூகமும் தன்னைத் தனிமைப்படுத்திப் பலவீனமடையும்.

●●●

## 01>> நரேந்திர மோடியும்...

ஏற்படுத்தினாலும், இந்திய அரசாங்கத்தின் நிதிக் கட்டுப்பாடுகள் இந்திய மூலதனத்திற்குப் பயனுள்ளதொரு பாதுகாப்பாகவே இருந்தன. இந்திய மூலதனம் தேசிய எல்லைகட்கப்பால் விரியும் வாய்ப்பும் தேவையும் ஏற்பட்ட போதுதான், இந்திய அரசின் இறுக்கமான நிதிக் கட்டுப்பாடுகள் இந்தியப் பெரு முதலாளிமாருக்கு எரிச்சலூட்டின. இந்திய முதலாளிய நெருக்குவாரங்கள் மட்டுமன்றிச் சர்வதேச ரீதியாக நவகொலனியத்தின் எழுச்சியும் மூன்றாம் உலக நாடுகளின் தேசியப் பொருளாதாரங்களின் சீர்குலைவும் நிதிக் கட்டுப்பாடுகளின் நெகிழ்த்தலை இயலுமாக்கின.

இந்தியத் தேசிய முதலாளியம் ஒரு தரகு முதலாளியப் பண்பைப் பெறத் தொடங்கிய சூழ்நிலையிலே, காங்கிரஸ் ஆட்சி, உலகமயமாக்கல், திறந்த பொருளாதாரம், அந்நிய முதலீடு, தனியார் மயமாக்கல் ஆகிய விடயங்களில் ஏகாதிபத்தியத்துடன் ஒத்துழைக்கத் தொடங்கியது. ராஜீவ் காந்தியின் ஆட்சிக் காலத்தில் தொடங்கிய இப் போக்கு மன்மோகன் சிங் ஆட்சியின்போது மேலும் முனைப்புப் பெற்றது. எனினும் பழங்குடிகளின் நிலங்களைப் பறித்து இந்தியப் பெரு முதலாளிகட்கும் தரகு முதலாளிகட்கும் தாரை வார்க்கும் முயற்சிகள் மக்களின் கடும் எதிர்ப்பைச் சம்பாதித்தன. சர்வதேச மூலதனத்தின் நெருக்கம் இன்னமும் தொடருகிற நிலையில் இந்தியப் பொருளாதாரமும் தடுமாறத் தொடங்கியது. இந்தியத் தொழிலாளி வர்க்கம் அந்நிய, தரகு முதலாளியச் சுரண்டலுக்கும் அடக்குமுறைக்குமெதிராகத் துணிந்து போராடத் தொடங்கியது. இப் பின்னணியில், காங்கிரஸ் ஆட்சி மக்களிடையே செல்வாக்கை இழக்கத் தொடங்கியது. எனவே இந்தியப் பெருமுதலாளிய நிறுவனங்களுக்குக் காங்கிரஸ் ஆட்சி முன்னெடுத்த அதே பொருளாதாரக் கொள்கைகளை மேலும் முனைப்புடன் முன்னெடுக்கக் கூடிய ஒரு வலிய கடும் போக்கான மாற்று அரசாங்கம் தேவைப்பட்டது. அதைவிட, அந்தக் கடும் போக்கை அடையாளப்படுத்த உகந்த ஒரு பிரதமரும் தேவைப்பட்டார். நரேந்திர மோடி வினைத்திறனுடன் வெற்றிகரமாக குஜராத்தின் பொருளாதாரத்தை வெற்றிப் பாதையிற் செலுத்தினார் என்ற பொய் மிகக் கவனமாகத் திட்டமிட்டுப் பரப்பப்பட்டது. சென்னையிலிருந்து இயங்கும் "இந்து" நாளேட்டை விட்டால், இந்தியாவின் அதி முக்கிய நாளேடுகளும் பெருவாரியான மின் ஊடகங்களும் இணையத்தளங்களும் திட்டமிட்ட முறையில் மோடியை ஒரு அரசியல் வித்தைக்காரர் என்று கட்டியெழுப்பத் தொடங்கின. மோடி குஜராத்தில் 1992இல் முஸ்லிம் விரோத வன்முறையைத் தூண்டினார் என்ற உண்மை அடக்கி வாசிக்கப்பட்டது. இந்தப் பிரசாரத்திற்கும் மேலாக இவ்வருடம் நடந்த பொதுத் தேர்தலில் பா.ஜ.க தேர்தலுக்குச் செலவிட்ட பலப் பத்தாயிரம் கோடிகள் முகேஷ் அம்பானி, டாட்டா போன்ற இந்தியப் பெருமுதலாளிகளின் உபயம் என்றே கூற வேண்டும்.

இவ்வாறு, இந்துத்துவ மதவெறி அரசியலினதும் ஏகாதிப்பத்தியம் சார்பான ஒரு போக்கினதும் தீய இணைவு ஒன்று இந்தியாவில் ஆட்சிக்குக் கொண்டுவரப்பட்டது. தேர்தல் நோக்கங்கட்காக பா.ஜ.க சில விடயங்களை அடக்கி வாசித்தபோதும் அதன் முஸ்லிம் விரோதமும் உயர் சாதி ஆதிக்க அரசியலும் பல நேரங்களில் வெளிப்பட்டன. இத்தகைய மதவெறி பா.ஜ.கவுக்குப் பின்னால் தமிழ்த் தேசியவாதத் தலைவர்கள் அலைந்தனர். கோபாலசாமி போன்ற அரசியல் மோசடிக்காரர்கள் இலங்கைத் தமிழரிடையே காங்கிரசுக்கு எதிரான ஒரு மாற்றுச் சக்தியாக மத வெறி அரசியற் கட்சியான பா.ஜ.கவையும் மோடியையும் காண்பித்தமையும் அதற்கு ஒரு காரணம் எனலாம். இந்திய அரசாங்கம் ஈழத்தமிழர்களைப் பற்றி அசட்டையாக நடப்பதற்கான விளக்கத்தை அதில் ஆளுங்கட்சி எது என்பதிலோ பிரதமர் யார் என்பதிலோ தேட இயலாது. இந்திய அரசாங்கம் இந்தியப் பெருமுதலாளிகளின் பிரதிநிதி என்பதை விளங்கினால் அதன் நடத்தையை விளக்குவது எளிது.

பதவிக்கு வந்த நாள் தொட்டே மோடி இலங்கை அரசாங்கத்தை மகிழ்விக்கும் விதமாகவும் த.தே.கூ தலைவர்கள் பகிரங்கமாக அறிவித்த ஒவ்வொரு எதிர்பார்ப்பிலும் மண் விழுத்தும் விதமாகவும் சைகைகளை அனுப்பியுள்ளார். அதற்குப் பிறகும் மோடி நல்லவர் ஆனால் சுப்பிரமணிய சுவாமி பொல்லாதவர் என்கிற மாதிரியான மோட்டுத்தனமான விளக்கங்கள் வருகின்றன என்றால் தமிழ்த் தலைமையின் உலக அறிவு மிகவும் கவலை தருவது.

இங்கே செய்ய வேண்டிய முக்கிய காரியங்கள் எதையும் கவனிக்கத் தமிழ்த் தலைமைகள் ஆயத்தமாக இல்லை. இன்று தேசிய இனப்பிரச்சினை முஸ்லிம் மக்களையும் கவ்வியுள்ளது. மலையகத் தமிழரும் அரசாங்கத்தாற் தொடர்ந்து ஏமாற்றப்படுகின்றனர். சிங்கள மக்கள் அரச அடக்குமுறைகட்கு முகங்கொடுக்கின்றனர். அவர்களுடைய பிரச்சினைகளைப் பற்றிய அற்ப அக்கறையும் இல்லாமல் திரும்பத் திரும்பத் தமிழ் மக்களின் அவலங்களைப் பற்றித் தமிழ் மக்களிடமும் "சர்வதேச சமூகத்திடமும்" புலம்புவதால் தமிழ் மக்கள் மேலும் தனிமைப்படுவதற்கே அவர்கள் வழிதேடுகிறார்கள்.

தேசிய இனப்பிரச்சனை இலங்கையின் தலையாய பிரச்சினை என்பதில் மறுப்பில்லை. ஆனால் அது வெறுமனே சிங்களவர்–தமிழர் பகைமை பற்றியதல்ல. அதற்கு ஒரு வர்க்கப் பரிமாணமுண்டு. அதற்கு ஒரு சனநாயக மறுப்புப் பரிமாணமும் உண்டு. இவற்றை விளங்கினால் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தைப் பிற சிறுபான்மைத் தேசிய இனங்களின் உரிமைப் போராட்டங்களுடன் இணைக்கும் தேவை விளங்கும். அதிலும் முக்கியமாக, அரச ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடும் சிங்கள மக்களுடன் கைகோக்கும் தேவை விளங்கும்.

தமிழ்த் தேசியத் தலைமை அமெரிக்க ஏகாதிபத்தியப் படுகொலைக்காரர்களையோ இந்துத்துவ மதவெறியர்களையோ கண்டிக்காமல் விடுவதால் அவர்கள் இலங்கைத் தமிழரின் நண்பர்களாக மாட்டார்கள். மாறாகத், தமக்காகக் குரல் கொடுக்கக்கூடியவர்களிடமிருந்து தமிழர் தனிமைப்படுவர். அதுதான் தமிழருக்குத் தேவையா?

●●●

# வடக்கு கிழக்கில் காணி அபகரிப்பு அந்நியருக்கு காணி தாரைவார்ப்பு!

*ஜி.எஸ்.எம்.*

காணி அதிகாரத்தை வடமாகாண சபைக்கு வழங்க மறுக்கும் அரசு, காணிகளை 99 வருட குத்தகை என்ற பெயரில் அந்நியருக்கு விற்றுவருகிறது. காணியில்லாத மக்களுக்குக் காணி வழங்க மறுக்கும் அரசு அந்நியருக்கு காணிகளை விற்கிறது.

கசினோ சூதாட்டத்திற்கு அவுஸ்திரேலிய சூதாட்ட மன்னன் ஜேம்ஸ் பக்கருக்கும், இலங்கையின் மிகப்பெரிய செல்வந்தரான தம்மிக்க பெரேராவுக்கும் ஏற்கனவே தலைநகரின் மத்தியில் பல ஏக்கர் காணிகள் 99 வருடக் குத்தகையில் சூதாட்டத்திற்காக விற்கப்பட்டுள்ளன. நாட்டிற்குள் அந்நியச் சக்திகளை ஊடுருவ விடமாட்டோம் என்று கூச்சலிட்டுக் கொண்டு, காணித்துண்டுகளைப் பழச் செய்கைக்காகப் பல்தேசியக் கம்பனிகளுக்கு 99 வருடக் குத்தகையில் விற்றுள்ளனர்.

பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கும் 99 வருடக் குத்தகையில் காணிகள் விற்றுள்ளனர். மேலும் காணிகளை விற்கவுள்ளனர். கல்வித் துறையில், அந்நியப் பல்கலைக் கழங்கள் அமைப்பதற்கு நாட்டின் பல பிரதேசங்களில் காணிகள் தாரைவார்க்கப்பட்டு வருகின்றன. இலங்கையில் 2020ம் ஆண்டளவில் பத்து வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள் இயங்குமென அறிவிக்கப்பட்டுள்ளது. 2020ம் ஆண்டளவில் அந்நிய மாணவர்கள் 50,000 பேர் இலங்கை வந்து கல்வி கற்கப்போகிறார்கள் என்றும் அதனால் பண வருவாய் அதிகரிக்குமெனவும் எதிர்வு கூறப்படுகிறது.





அடுத்த ஆண்டில் ஐந்து பல்கலைக்கழங்கள் செயற்பட ஆரம்பிக்கும். பிரித்தானியாவின் மத்திய லங்காஷயர் பல்கலைக்கழகம் மீரிகமவிலும், சிங்கப்பூரின் றபிள்ஸ் பல்கலைக்கழகம் நீர்கொழும்பிலும் தமது கிளைகளை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளன. இத்திட்டங்களுக்குத் தேவையான பண்டங்களின் இறக்குமதிக்கு வரி விலக்களிக்கப்பட்டுள்ளது.

கேரளாவின் மனிப்பால் பல்கலைக்கழகம் இலங்கையில் ஒரு மருத்துவக் கல்லூரியை அமைப்பதற்கான பேச்சுவார்த்தைகள் இடம்பெறுகின்றன. கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் நவரத்தினாவின் தகவல்படி அம்பாந்தோட்டையில் யப்பான்-இலங்கை நட்புறவுப் பல்கலைக் கழகத்தை அமைப்பதற்கு யப்பானியப் பல்கைலக்கழக கூட்டமைப்பு இணங்கியுள்ளதாகக் கூறியுள்ளார்.

இந்தப் பல்கலைக்கழகங்கள் அமைப்பதற்கான காணிகள் 99 வருடக் குத்தகையில் விடப்படுகின்றன. இக்காணி விற்பனையிற் கையூட்டல்கள் தாராளமாகவே இடம் பெறுகின்றன. முன்பு பத்து சதவீதம் என்பதாக இருந்தது இப்போது பல பத்து வீதங்களாக அதி உயர் மட்டங்களுக்கு சென்றடைவதாகச் செய்திகள் கசிகின்றன.

வடபகுதியில் உள்ள இலங்கையருக்குக் காணி அதிகாரத்தை வழங்காத அரசு, அமெரிக்க, பிரித்தானிய, யப்பானிய, இந்திய நாட்டவருக்குக் காணிகளை விற்கிறது. பண்டா-செல்வா உடன்படிக்கையின் கீழ், காணிகள் மீதான அதிகாரத்ததை வடக்கு, கிழக்கு பிராந்திய சபைகட்கு வழங்க பண்டாரநாயக்கா உடன்பட்டார். அதே பண்டாரநாயக்காவின் கட்சியைச் சேர்ந்தவர்கள் இன்று காணி அதிகாரத்தை மாகாணங்களுக்கு மறுக்கின்றனர். அந்நியருக்கு காணிகளை விற்றுக் கொண்டு நாட்டுப் பற்றைப் பற்றிப் பேசுகிற வினோதத்தை இங்கே காண்கிறோம் ●

# மோதலின் போது பாலியல் வன்முறைக்கு முடிவுகட்டும் உலக மகாநாடு

2014 யூன் 10ம் திகதி லண்டனில் மோதலின் போது பாலியல் வன்முறைக்கு முடிவுகட்டும் உலக மகாநாடு ஆரம்பமானதுபோது அஞ்ஞலினா ஜோலியின் திரைப்படமான “த லேண்ட் ஒவ் ஃ.ளொட் அன் ஹொனி” ***(The Land of Blood and Honey)*** காண்பிக்கப்பட்டது. 1990களில் பொஸ்னிய மோதலின் போது இருதரப்பினராலும் மேற்கொள்ளப்பட்ட பாலியல் வன்முறையின் கொடூரங்களை அத்திரைப்பட்டம் சித்தரித்தது. 2012ல் மோதலின் பாலியல் வன்முறைக்கு முடிவுகட்டும் பிரகடனம் ஒன்றை ஐ.நா வெளியிட்டது. குறித்த ஐ.நா பிரகடனம் தொடர்பான தத்தமது உறுதிப்பாட்டை 151 நாடுகள் வெளியிட்டிருந்தன. பொக்கோஹறாம் என்ற போராட்டக் குழு 247 சிறுமிகளைக் கடத்திய சமயம் அவர்களை விடுவிப்பது தொடர்பாக நைஜீரிய அரசும் அதன் இராணுவமும் எதுவித ஆக்கபூர்வமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

அண்மையில் ஓர் இளம் கர்ப்பிணி லாகூர் நீதிமன்றின் முன் கல்லால் அடித்துக் கொல்லப்பட்டார். கொடூரமான இச்சவம்பத்தை தொடர்ந்து அப்பெண்ணின் கணவர் இரண்டாவது பெண்ணை மணம் முடிப்பதற்காக முதலாவது மனைவியின் கழுத்தை நெரித்த சம்பவமும் வெளியாகியுள்ளது. லாகூரில் வேறு ஒரு சம்பவமும் பதிவாகியுள்ளது. ஓர் இளம் பெண் தன்னை பலர் வன்புணர்வு செய்ததாக பொலீசுக்கு முறைப்பாடு செய்யச் சென்றபோது அப்பெண்ணை பொலீஸகாரர் பலர் வன்புணர்வு செய்துள்ளனர். ஒரே இனத்தைச் சேர்ந்தவர்களே இவ்வாறாக நடந்துள்ளனர் என்பதையும் இங்கு அவதானிக்கலாம்.

சென்ற வருடம் தனது இராணுவத்தினுள்ளேயே 5016 பாலியல் வல்லுறவு இடம்பெற்ற நிலையில் அமெரிக்கா இந்த மகாநாட்டில் கலந்து கொண்டது. ஐக்கிய ராஜ்யத் திற்கூட பாலிய துஷ்பிரயோகங்கள் பல இடம்பெறுகின்ற போதும் அதிற் சிலவற்றையே பொலீசார் நீதிமன்றிற்கு

**இலங்கை பொலீஸ் திணைக்களம் வெளியிட்ட தகவலின்படி 2012ல் 73 இராணுவத்தினர் பாலியல் வல்லுறவு குற்றஞ்சாட்டப்பட்டிருந்தனர். படையிலிருந்து தப்பிச்சென்ற 33 பேர் பாலியல் வல்லறவுக் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தனர். 2013ல் 51 படையினர் பாலியல் வன்முறைக்கு குற்றஞ் சாட்டப்பட்டிருந்தனர். படையிலிருந்து தப்பி ஓடியவர்கள் 17 பேர் பாலியல் வன்முறைக் குற்றச் சாட்டையும் கொண்டிருந்தனர்.**

கொண்டு செல்கின்றனர் என்ற குற்றச்சாட்டுண்டு. அந்த நாட்டில் பிராந்திய மட்டங்களிலேயே பொலீஸ் படையுள்ளது. அவை தனித்தனியே இயங்குகின்றன என்பது கவனத்திற் கொள்ளத்தக்கது.

இலங்கை பொலீஸ் திணைக்களம் வெளியிட்ட தகவலின்படி 2012ல் 73 இராணுவத்தினர் பாலியல் வல்லுறவு குற்றஞ்சாட்டப்பட்டிருந்தனர். படையிலிருந்து தப்பிச் சென்ற 33 பேர் பாலியல் வல்லறவுக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தனர். 2013ல் 51 படையினர் பாலியல் வன்முறைக்கு குற்றஞ்சாட்டப்பட்டிருந்தனர். படையிலிருந்து தப்பி ஓடியவர்கள் 17 பேர் பாலியல் வன்முறைக் குற்றச்சாட்டையும் கொண்டிருந்தனர். இவற்றை வெளியிட்ட இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிக சூரிய “இராணுவத்தினரும் மனிதர்கள்தான். நாங்கள் குற்றச் செயல்களைத் தடுக்கமுடியாமல் உள்ளோம்” எனக் கூறியிருந்தார். ஆனால் வடக்கு கிழக்கில் மலையகத்தில் இடம் பெற்றவைகளும் இடம்பெற்று வருபவைகளும் இந்தப் புள்ளி விபரங்களுக்குள் வந்துள்ளதா என்பது கேள்விக்குரியதாகும், வடக்கு கிழக்கில் பாதிப்புற்ற பெண்கள் சிறுமிகள் எண்ணிக்கை பெருந்தொகையாகும். அவற்றில் பாலியல் வக்கிரம் கொண்டவர்களால் மட்டுமன்றிய படையணிகளைச் சேர்ந்தோர் பிரதானமாக ஈடுபட்டு வருவது சர்வசாதாரணமானவையாகும். கடைசிச் சம்பவமே காரைநகரில் இரண்டு பாடசாலைச் சிறுமிகள் அங்கு முகாமிடப்பட்டுள்ள கடற்படையினரால் பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டவையாகும்.

எது எவ்வாறாயினும் மேற்படி லண்டன் மகாநாட்டிற்க இலங்கை எந்தப் பிரதிநிதியையும் அனுப்பவில்லையென்பது இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டும். எமது அரசாங்கத்தைப் பொறுத்தமட்டில் எமது படையினர் புனிதர்கள். எமது படையினரைக் காட்டிக் கொடுக்கமாட்டேன் என ஜனாதிபதி ஏற்கனவே உறதிமொழி வழங்கியுள்ளார் அல்லவா ●

# எத்தனை காலந்தான் ஏமாற்றுவீர்?



30 வருட கொடுர யுத்தம் முடிவடைந்து 5 வருடங்களுக்கு மேல் கடந்தாலும் வட, கிழக்குத் தமிழ் மக்கள் பலர் தம் சொந்த இடங்களிலிருந்து வெளியேற்றப்பட்டு முகாம்களிலும், மீளக் குடியமர்த்தப்பட்டவர்கள் வசதிகளற்ற நிலையிலும் வாழ்வதுடன், தொழிலின்மை, பொருளாதார நெருக்கடி, கடன் என்பவற்றில் அடிபட்டு அநாதரவாக நிற்கின்றனர்.

மறுபுறத்தில் தமிழ் மக்களின் நியாயமான பிரச்சினைகள் கிடப்பில் போடப்பட்டு தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு பேரினவாதிகளாலும் குறுந் தேசியவாதிகளாலும் இழுத்தடிக்கப்பட்டு வருகிறது. வட, கிழக்குத் தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகள் என உரிமைக்கோரும் தமிழ்த் தேசிய பாராளுமன்றவாதிகள் தொடர்ந்தும் வரலாற்றிலிருந்து பட்டறிய மறுத்துவருவதோடு அரைத்த மாவை அரைக்கும் காலாவதியான அனுகுமுறையை இன்றுவரை பின்பற்றி அவற்றை மக்கள் மீதும் வலிந்து திணிக்கின்றனர். அமெரிக்கா, பிரிட்டன் உட்பட்ட மேற்குலக நாசகாரச் சக்திகளையும் பிராந்தியச் சாத்தானான இந்திய அரசாங்கத்தையும் கண்மூடித்தனமாக நம்பிக் கடந்த தசாப்தங்களை வீணாக்கியதுடன் இன்றுவரை அதே மாயைக்குள் தமிழ் மக்களை வைத்திருக்கப் பெரும்பாடுபடுகின்றனர். மார்ச் மாத ஜெனிவா அமர்வைக் காட்டித் தீர்வு வரப்போகின்றது அது இது கிடைக்கப்போகிறது என்று சொல்லிக் கொஞ்ச காலம் அர்சியல் நடத்தப்படுகின்றது.

பொதுநலவாய மாநாட்டில் கலந்துக் கொள்வதற்காக டேவிட் கமரன் தீவுக்கு வந்தபோது என்னென்னவோ நடக்கும் என்று பாராளுமன்றப் பிழைப்புவாதிகள் பாட்டுப்பாடத் தமிழ் ஊடகங்களும் கொண்டாடி மகிழ்ந்தன. மன்மோகன் சிங் ஆட்சியின் வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் இந்திய ஆளும் வர்க்க நலனுக்காக மஹிந்தரை சந்திக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் 13, 13+ வாங்கித் தருவார் எனத் தம்பட்டம் அடித்து மாதங்களைக் கடத்தினர். தேர்தல் அரசியல் காய்நகர்த்தலுக்கு பெயர்போன ஜெயலலிதாவின் அறிக்கை விடுதல், கடிதம் எழுதல் படலங்களைத் தலைப்புச் செய்தியாக்கித் தமிழ் மக்கள் ஆக்கபூர்வமாக சிந்திப்பதைச் சிறிது காலம் தடுப்பர். தற்போது மோடியானவருக்கு வாழ்த்துக்கு மேல் வாழ்த்தனுப்பி தமிழர்களைக் காக்க வந்த அவதாரம் என பரப்புரை செய்து தமிழரை நம்பவைக்கும் முயற்சியில் தமிழ்த் தேசியவாதிகளும் ஊடக முதலைகளும் வெற்றிபெற்று வருகின்றனர்.

ஏகாதிபத்திய, பிராந்திய மேலாதிக்க சக்திகளின் துணையுடன் தனித் தமிழீழத்தை அமைக்கப் புறப்பட்ட புலிகள் அமைப்பினருக்கு ஏகாதிபத்தியம் காலை வாரி விட்டதல்லவா. தேசிய இனப் பிரச்சினைக்கு பொருத்தமானதும் ஆக்கபூர்வமானதுமான தீர்வைச் சாதாரண சிங்கள மக்களிடம் கொண்டுபோய் சேர்த்துத் திறந்த மனதுடன் கலந்துரையாடுவதன் மூலம் அவர்கள் தமிழ் மக்களின் பிரச்சினையை புரிந்துக்கொள்ளும் வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும். நாட்டின் ஜனநாயக முற்போக்கு இடதுசாரி சக்திகளை இணைத்துக்கொண்டு வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுப்பதன் மூலமே தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு சாத்தியப்படும். அதற்குப் பின்னர் அனைத்து தேசிய இனங்களும் சிறுபான்மை தேசிய இனங்களும் ஐக்கியப்பட்டு போராட வேண்டிய சமூக மாற்றம் என்ற பணி நம்மனைவரும் முன் விரிந்து கிடக்கிறது ●

# வட்டுக்கோட்டையில் இருந்து முல்லைத்தீவு வரை

27

வெகுஜனன்



2009ம் ஆண்டு மே மாதத்தின் ஆரம்ப முதல் 4ம் கட்ட ஈழப் போராட்டம் மிகுந்த கொடூரங்களையும் பயங்கரங்களையும் கொண்டிருந்தது. இலங்கை வரைபடத்தில் மேற்கே புத்தளம் தொடக்கம் வடக்கு கிழக்கை உட்படுத்திக் கிழக்கே பாணம வரை தமிழீழ எல்லை வரைந்து முன்னெடுக்கப்பட்ட தனித் தமிழீழப் போராட்டம் ஐந்து மைல் நீளமும் முக்கால் மைல் அகலமும் கொண்ட முல்லைத்தீவின் பெருங்கடல் அருகே வெறும் மணற் பரப்பில் சுருங்கித் தனது இறுதி மூச்சை நோக்கி ஊசலாடியது. எவராலும் வெல்ல முடியாதது என மார்தட்டிப் பேசப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் சகல நிலைகளிலும் தனிமை கண்டு பல வீனமடைந்து தள்ளாடியபடி காணப்பட்டது. தன்னிகரற்ற தலைவன் எனப் புகழப்பட்ட வேலுப்பிள்ளை பிரபாகரனின் போர்க்கள வெற்றிகள் பல கண்ட தளபதிகளும் படுகாயங்கள் பட்டும் சயனைட் வில்லைகள் உட்கொண்டும் மடிந்து கொண்டு இருந்தனர். சொர்ணம், பானு, ஜெயம், தீபன் போன்ற முக்கிய தளபதிகள் ஒருவர் பின் ஒருவராகப் போர்களத்திற் சாவு கண்டனர். இவர்களில் இளம் போராளித் தளபதியும் பிரபாகரனின் மகனுமான சார்ல்ஸ் அன்ரனியும் ராணுவத்திற்கு எதிரான தாக்குதலில் கொல்லப்பட்டார். இத் தாக்குதலுக்கு முன்பு இதே சார்ல்ஸ் அன்ரனி, முன்னர், போரில் ஈடுபட்டு முடமாகிய நிலையில் இயக்கத்தாற் பாதுகாக்கப்பட்டுவந்த போராளிகளை வேறு வழியின்றி இரண்டு பேருந்துகளில் ஏற்றி அவற்றைக் குண்டு வைத்து தகர்த்து அவர்களைக் கொன்றார் என்றும் மக்களாலும் போராளிகளாலும் பேசப்பட்டது. இறுதி யுத்தத்தில் இது போன்ற பல கொடூரங்களைத் தமிழீழப் போராட்டம் காண நேர்ந்தது.

**கழுத்துகளில், சைனட் குப்பிகளில் கட்டிய இளைஞர் யுவதிகள் புலிகள் இயக்கத்தில் சீருடை அணிந்தபடி ஒரே தலைவன், ஒரே இயக்கம், ஒரே குறிக்கோள் என இணைந்திருந்தனர். "தலைவர்", "அண்ணை" என உயர்வாகவும் மதிப்பாகவும் கட்டுப்பாட்டுடனும் போராளிகள் அனைவராலும் போற்றப்பட்ட பிரபாகரன் போர்க் காலத்தில் தனது மனைவி பிள்ளைகளுடன் சாவைத் தழுவிக் கொண்ட சோக நிகழ்வு புலிகளை ஏற்றுக் கொள்ளாதவர்களின் நெஞ்சங்களையும் தொட்டு நின்றது.**



ஒருபுறம் புலிகள் இயக்கம் கணம் கணம் பலவீனமடைந்து நகரமுடியாத நிலைக்குச் சென்று கொண்டிருந்தது. அதேவேளை புலிகளை நம்பி வந்த லட்சக்கணக்கான மக்கள் மிகச் சிறிய நிலப் பகுதியில் விபரிக்க முடியாத துன்ப துயரங்களை அனுபவித்துக் கொண்டிருந்தனர். இவற்றிலிருந்து விடுபட இருந்த மக்களுக்கு ஒரே வழி சுற்றிவளைத்து நின்ற ராணுவத்திடம் சென்றடைவதாகவே இருந்தது. அதனையே ராணவமும் எதிர்பார்த்தது. ஆனால் புலிகள் அவ்வாறு செல்வதைத் தடுப்பதற்காக ஏற்கனவே தமது மூன்றடுக்குப் பாதுகாப்புத் தடுப்பரண்களை அமைத்திருந்தனர். அதனையும் மீறி மக்கள் ஆங்காங்கே ராணுவப் பிரதேசத்திற்கு சென்றனர். அதனைத் தடுக்கப் புலிகள் மக்கள் மீது சுட்டனர். அதனாற் பலர் இறக்க நேரிட்டது. இதனைத் தப்பி வந்த மக்களே ஒளிவுமறைவு இன்றி எடுத்துக் கூறினர்.

ஒரு கட்டத்தில் கரையாம் முள்ளிவாய்க்கால் என்னுமிடத்தில் ஐம்பதினாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் துணிவுடன் புலிகள் மூன்றடுக்குப் பாதுகாப்பை உடைத்துக் கொண்டு நந்திக்கடல் ஊடாக ராணுவம் நிலை கொண்டிருந்த பகுதியைச் சென்றடைந்தனர். மக்களது இத்தகைய உடைப்பும் ராணுவத்திடம் சென்றமையும் புலிகளுக்குப் பெரும் பின்னடைவாகியது. தமிழ்த் தேசியவாதிகள் வழமையாக நம்பியது போன்று அமெரிக்காவில் பராக் ஒபாமாவின் இரண்டாவது பதவியேற்பும், தமிழ் நாட்டில் ஜெயலலிதாவின் அமோக வெற்றியும் இறுதி யுத்தத்தில் ஏதாவது மாற்றத்தைக் கொண்டு வரும் என்பது போன்று, புலிகள் இயக்கத் தலைமையிடமும் இருந்துவந்த ஒரு வகை எதிர்பார்ப்பும் நம்பிக்கையும் படிப்படியாகத் தகரத் தொடங்கின. சர்வதேசம் தங்களைக் கைவிட்டு விட்டது என்பதைத் தலைமைத் தளபதிகள் உணர ஆரம்பித்தனர். எனவே மூன்று விதமான முடிவுகளுக்கு அவர்கள் தங்களவில் வந்தனர். முதலாவது இறுதிரை ராணுவத்தை எதிர்த்துப் போராடி மடிவது, இரண்டாவது சயனைட் அருந்தித் தற்கொலை செய்வது, மூன்றாவது ராணுவத்திடம் சரணடைவது. இவை மூன்றும் யுத்த முனையிலே இடம்பெறத் தொடங்கின. அதேவேளை, தமது தலைவரான பிரபாகரனைப் பாதுகாத்து தப்ப வைப்பதில் மிக விசுவாசமானவர்கள் முனைப்புடனிருந்தனர். பிரபாகரனைப் பாதுகாப்பதற்கு பல அடுக்குப் பாதுகாப்பு வேலிகள் இருந்தன. ஏனைய அடுக்குகளைச் சேர்ந்த தனது பாதுகாவலர்களைத் தன்னை விட்டுத் தப்பிச் செல்லும்படி பிரபாகரன் வற்புறுத்தினார். அவர்களில் பலர் அவ்வாறு தமது தலைவரை விட்டுச்செல்ல மறுத்தபோதும் அவர்கள் வற்புறுத்தி விலகிச்செல்ல வைக்கப்பட்டனர். எஞ்சிய இருபது பேர் வரை பிரபாகரனுடனேயே இருந்தனர். புலிகள் சிலர் ராணுவத்திடம் சரணடைந்ததுடன் பலர் காட்டிக் கொடுப்பிலும் ஈடுபட்டனர். தப்பிச் செல்வதற்குப் பெருங் கடலும், தரையால் நந்திக் கடல் முனையூடாக கேப்பாபுலவு வற்றாப்பளை நோக்கி நகரக் கூடியதுமான இரண்டு வழிகளே இருந்தன. இதிற் பெரும் கடல் மூலம் தப்புவது ஆபத்து மிக்கதாக இருந்தது. ஏனெனில் இலங்கைக் கடற்படை மிக வலிமையுடன் அணிவகுத்து நின்றது. இருப்பினும் அப்படையால் தரையிறக்கம் எதையும் செய்ய முடியவில்லை. எனவே தரை வழியாக மட்டுமே அதுவும் பெரும் தாக்குதல் மூலமே எதையுஞ் செய்யக் கூடியதாக இருந்தது. அம் முயற்சி இறுதியில் தோல்வி கண்டது.

இவற்றிடையே மே மாதம் 17ம் திகதி புலிகள் இயக்க அரசியல் பொறுப்பாளர் நடேசன், திலக், புலித்தேவன், இளவரசன், செல்வம் மாமா இவர்களுடன் சிங்களப் பெண்ணான நடேசனின் மனைவி உட்பட்ட நூற்றுக்கு மேற்பட்டோர் வெள்ளைக் கொடிகளுடன் ராணுவத்திடம் சரணடையச் சென்றனர். அவர்களின் இம் முடிவு வெளிநாடுகளின் ஆலோசனையுடன் மேற்கொள்ளப்பட்டது. இதில் இந்தியாவின் ஐ.நா. ராஜதந்திரி நம்பியாரின் பெயரும் அடிபட்டது. ஆனால் இலங்கை ராணுவம் அனைவரையும் அவ்விடத்திலேயே சுட்டுக் கொன்றதாகவே ஊடகச் செய்திகள் தெரிவித்தன. இதிலும் இந்தியாவையும் ஏனைய அமெரிக்க மேற்குலக ராஜதந்திரிகளையும் நம்பி ஏமாந்ததாகவே புலிகளுக்கு நெருங்கிய வட்டாரங்களில் கடும் கவலையும் விசனமும் தெரிவிக்கப்பட்டது. புலிகளின் துப்பாக்கிகள் மௌனமாக்கப்பட்ட பின் வெள்ளைக் கொடி பிடித்துச்சென்ற புலிகளின் முடிவு சோகமானது.

**மாற்றுக் கருத்துடையோருக்கும் பிரபாகரனின் வீரத்தையும் தியாகத்தையும் மறுக்க இயலவில்லை. ஏறத்தாள மூன்று தசாப்தங்களுக்கு மேல் புலிகளின் ஆயுதப் போராட்டத்தில் ஆயிரக்கணக்கில் இளைஞர்கள் யுவதிகள் தமது உயிர்களை இன விடுதலையின் பெயரால் அர்ப்பணித்துக்கொண்டமை எவ்வகையிலும் கொச்சைப்படுத்தக் கூடியதொன்றல்ல.**

2009 மே மாதம் 18ம் திகதியும் நந்திக் கடலுக்கு தெற்கே காட்டுப் பகுதிகளிலும் சதுப்பு நிலப் பகுதியிலும் ஆங்காங்கே இரு தரப்பினரும் யுத்தத்தில் ஈடுபட்டிருந்தனர். ஆனால் அவற்றில் எதுவும் பெரிய யுத்தமாக இடம்பெறவில்லை. பிரபாகரனும் பொட்டம்மானும் அவர்களது நம்பிக்கைக்குரிய போராளிகளும் பதினெட்டாம் திகதி இரவு கொல்லப்பட்டிருக்கலாம் என்றே ராணுவத்தால் ஊகிக்கப்பட்டது. பத்தொன்பதாம் திகதி பிரபாகரனின் இறந்த உடல் புலிகளின் சீருடையில் அரசாங்க தொலைக்காட்சியிற் காட்டப்பட்டது. ஏனைய தளபதிகளான சூசை, ஜெயம், பானு ஆகியோரது உடல்களும் ராணுவத்தாற் கண்டெடுக்கப்பட்டதாகக் கூறித் தொலைக்காட்சிகளிற் காட்டப்பட்டன.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்" என்னும் தாரக மந்திரத்தை முழக்கமிட்டப்படி முன்னெழுந்து வீர நடை போட்டு வளர்க்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் முப்பத்திமூன்று வருடங்கட்குப் பின் அழித் தொழிக்கப்பட்டது. தரை, கடல், ஆகாயப் படைகளையும், காவல் துறை, கரும்புலிகள் அணிகளைக் கொண்ட பெரும் படையணிகளை முல்லைத்தீவின் கடற்கரை ஓரத்தில் இலங்கை ராணுவம் அழித்து வெற்றி கண்டது. கழுத்துகளில் சையனைட் குப்பிகள் கட்டிய இளைஞர் யுவதிகள் புலிகள் இயக்கத்தின் சீருடை அணிந்தபடி ஒரே தலைவன், ஒரே இயக்கம், ஒரே குறிக்கோள் என இணைந்திருந்தனர். "தலைவர்" "அண்ணை" என உயர்வாகவும் மதிப்பாகவும் கட்டுப்பாட்டுடனும் போராளிகள் அனைவராலும் போற்றப்பட்ட பிரபாகரன் போர்க் காலத்தில் தனது மனைவி பிள்ளைகளுடன் சாவைத் தழுவிக்கொண்ட சோக நிகழ்வு புலிகளை ஏற்றுக் கொள்ளாதவர்களின் நெஞ்சங்களையும் தொட்டு நின்றது. மாற்றுக் கருத்துடையோரும் பிரபாகரனின் வீரத்தையும் தியாகத்தையும் மறுக்க இயலவில்லை. ஏறத்தாழ மூன்று தசாப்தங்கட்கு மேல் புலிகளின் ஆயுதப் போராட்டத்தில் ஆயிரக்கணக்கில் இளைஞர்கள் யுவதிகள் தமதுயிர்களை இன விடுதலையின் பெயரால் அர்ப்பணித்தமை எவ்வகையிலும் கொச்சைப்படுத்தக் கூடியதல்ல.

சாத்தியமற்ற ஒரு கொள்கையையும் அதனை முன்னெடுத்த புலிகள் இயக்கத்தையும் ஒரு சரியான் அரசியல் நிலைப்பாட்டிலிருந்து விமர்சிப்பது அவசியம். அவ் விமர்சனம் எதிர்காலத்தில் தமிழ்த் தேசிய இனத்தின் வெற்றிக்கான விடுதலை மார்க்கத்திற்கு வழி ஏற்படுவதாக அமைய வேண்டும். ஒரு கட்டுரையின் முதல் எழுத்தும் முதல் வசனமும் தவறாக அமையும் போது தொடரும் கட்டுரை மேலும் மோசமான தவறுகளைக் கொண்டதாகவே அமையும். அவ்வாறே தமிழீழக் கோரிக்கை 1976ல் வட்டுக்கோட்டைத் தீர்மானமாக எஸ்.ஜே.வி. செல்வநாயகம், அ. அமிர்தலிங்கம், மு. சிவசிதம்பரம் போன்றவர்களாலும் தமிழரசுக் கட்சியாலும் முன்வைக்கப்பட்ட போதே அதன் தவறான நிலைப்பாடும் எதிர்காலச் சாத்தியமற்ற தன்மைகளும் மாக்சிச லெனினிசவாதிகளால் தெளிவாகச் சுட்டிக்காட்டப்பட்டது. ஆனால்

12>>>

# ஏகாதிபத்தியம் பற்றி தொடரும் குளறுபடிகள்

தேசபக்தன்




சில சமயங்களில் சிலரது ஏகாதிபத்திய எதிர்ப்பின் "தீவிரம்", உடனடியான பிரச்சினை எது என்பதைப் பற்றிய பார்வையை அழித்துவிடுகிறது. ஊடனடியான எதிரி யார், மிக ஆபத்தான எதிரி யார் என்பன பற்றிய தெளிவான பார்வை இல்லாமல், ஒரு ஏகாதிபத்திய எதிர்ப்பு வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுக்க இயலாது.

இதை விளக்க இரண்டு வரலாற்று உதாரணங்களைக் காட்டலாம். ஒன்று, வியற்நாம் விடுதலைப் போராட்டம் பிரெஞ்சுக் கொலனியத்திற்கு எதிராக வலுப்பெற்று முன்னேறிய காலத்தில், இரண்டாம் உலகப் போர் தொடங்கியது. ஏலவே சீனாவை ஆக்கிரமித்த யப்பான், வியற்நாமுக்குள்ளும் படைகளை அனுப்பியது. அந்த நிலையில், வியற்நாமின் விடுதலைப் போராட்டத்தைத் தலைமைதாங்கி நெறிப்படுத்திய வியற்நாமியக் கம்யூனிற்றுக்களை எதிர்நோக்கிய முக்கிய கேள்வி பிரதம எதிரி பிரெஞ்சு ஏகாதிபத்தியமா யப்பானிய ஏகாதிபத்தியமா என்பதாகும்.

பலவீனமாகிக் கொண்டிருந்த பிரான்சுக்கு மேலும் நெருக்குவாரங்களைக் கொடுப்பதன் மூலம் மூலம் பிரான்சை முழு இந்தோசீனத்திலிருந்தும் விரட்டியிருக்கலாம். ஆனால் அப்போது பிரான்ஸ் வெளியேறுவது வியற்நாமின் விடுதலைக்கு உத்தரவாதமல்ல என்பதாலும் யப்பானே பெரிய மிரட்டல் என்பதாலும் ஹோ சி மின் தலைமையிலான கம்யூனிஸ்ற்றுக்கள் யப்பான் எதிர்ப்பையே முதன்மைப்படுத்திப் பிரெஞ்சுக் கொலனியத்துடன் ஒரு சமரசத்துக்கு வந்தனர். இரண்டாம் உலகப் போரில் ஜேர்மனியும் யப்பானும் தோற்றபின்பு, பிரான்ஸ் தனது உறுதிமொழிகளைக் கைவிட்டு மீண்டும் தனது கொலனிய ஆட்சியை வலுப்படுத்தத் தொடங்கியது. பிரான்சுக்கு எதிராக மேலும் ஒன்பது ஆண்டுகள் போரிட நேர்ந்தபோதும், அன்று யப்பானையே பிரதான எதிரியாகக் கருதிய முடிவு நீண்டகால நோக்கிலும் அக்கால உலக நிலவரங்களின் அடிப்படையிலும் சரியானது என்பதை

**சீனா எந்த நாட்டின் உள் அலுவல்களிலும் தலையிடவோ எந்த நாட்டிலும் ராணுவத் தளங்களை நிறுவவோ முற்படின் அதை நாம் எதிர்க்கவேண்டும். சீன மூலதனத்தின் விரிவாக்கம் மேலை முதலாளிய மூலதனத்தை மீறி ஏன் நடக்கிறது என்பதை நாம் விசாரிப்பது நல்லது. அதில் முறைகேடுகளும் தேசியநலனுக்குக் கேடான காரியங்களும் சம்பந்தப்படின் அவை சுட்டிக்காட்டவும் கடுமையாக எதிக்கவும் வேண்டியன.**

வியற்நாமின் கம்யூனிஸ்ற்றுக்கள் மக்கள் மத்தியிற் பெற்ற பேராதரவுஉறுதிசெய்தது.

மற்ற உதாரணம், இரண்டாம் உலகப் போரின் போது ற்ரொட்ஸ்கிவாதிகள் சர்வதேசத் தளத்திலும் இலங்கையினுள்ளும் மேற்கொண்ட நிலைப்பாட்டைப் பற்றியது. நாற்ஸி ஜேர்மனியும் அதன் இளைய கூட்டாளியான ஃபாசிச இத்தாலியும், பிரித்தானியா, பிரான்ஸ், அமெரிக்கா் ஆகிய நாடுகளைக் கொண்ட நேச அணியுடன் மோதிய வேளை, அதை இரண்டு ஏகாதிபத்திய முகாங்களிடையிலான போராக நோக்கி ஒதுங்கி நிற்பதும் ஜேர்மனியுடன் தந்திரோபாயமாகத் தற்காப்பு உடன்பாடு செய்வதும் சோவியத் ஒன்றியத்திற்குத் தேவையாயிருந்தது. ஆயினும் ஜேர்மனியின் தலைமையிலான ஃபாசிசக் கூட்டணி என்ன செய்யக்கூடும் என்ற விழிப்புடன் இருக்கும் தேவையும் இருந்தது. சோவியத் ஒன்றியம் உலகப் போரினுள் வலிந்து இழுக்கப்பட்ட நிலையில், சோவியத் ஒன்றியம், பிரித்தானியாவும் அமெரிக்காவும் என்ன நீண்டகாலத் திட்டத்துடன் இருந்தாலும் உடனடி எதிரி ஜேர்மனியின் தலைமையிலான ஃபாசிச அணியே எனக் கருதி, அமெரிக்காவுடனும் பிரித்தானியாவுடனும் பிரான்சுடனும் ஒரு நேசஅணியை அமைத்தது. அந்த வேளை ட்ரொட்ஸ்கியவாதிகள் எடுத்த நிலைப்பாடு இரண்டு ஏகாதிபத்திய அணிகளிடையிலான மோதலிலிருந்து உலகப் பாட்டாளி வர்க்கம் ஒதுங்கிநிற்க வேண்டும் என்பதாகும். அவர்களுடைய உண்மையான நோக்கம் சோவியத் ஒன்றியத்தைச் சர்வதேசத் தளத்தில் தனிமைப்படுத்துவதாகும். அந்த உள் நோக்கத்தை மூடிமறைத்து, ஃபாசிசத்திற்கெதிரானதாக மாறிவிட்ட உலகப் போரில் ஒரு ஏகாதிபத்தியத்திற்கும் இன்னொரு ஏகாதிபத்தியத்திற்கும் வேறுபாடில்லை என்று தீவிர ஏகாதிபத்திய எதிர்ப்புப் பேசிய ட்ரொட்ஸ்கியவாதிகள் சர்வதேசரீதியாக முற்றாகத் தனிமைப்பட்டனர். இலங்கையில் இடதுசாரி இயக்கம் தனது முதலாவது பிளவுக்கு ஆளானது. ற்ரொட்ஸ்கியர்களிடமிருந்து பிரிந்து தனிக் கட்சி அமைத்த கம்யூனிஸ்ட்டுக்கள் எடுத்த ஃபாசிச-விரோத சோவியத்-ஆதரவு நிலைப்பாட்டை பிரித்தானிய கொலனியத்துடன் சமரசமின்றி முன்னெடுக்க முடிந்தமை கவனிக்கத் தக்கது.

இரண்டு சூழ்நிலைகளிலும் எல்லா ஏகாதிப்த்தியங்களும் ஒன்றே என்று வரட்டுத்தனமாகப் பேசியோர் இருந்தனர். வியற்நாமில் அவர்களின் பேச்சு எடுபடவில்லை. இலங்கையில் எடுபட்டது. ஆனால் எது சரியான முடிவு என்பதை இரண்டாம் உலகப் போருக்குப் பிந்திய வரலாறு எடுத்துரைத்தது.

இப்போது சிலர் சீன ஏகாதிபத்தியம் பற்றி மிகவும் பேசுகின்றனர். அதிற் சிங்கள ஏகாதிபத்தியம் பற்றிப் பேசி வந்த தமிழ்த் தேசியவாதச் சிறுபிள்ளைத்தனத்தின் தொடர்ச்சியையும் காணலாம். சீனா இலங்கை அரசாங்கத்துக்குச் சார்பான நிலைப்பாட்டை எடுப்பதைச் சீனாவின் உலக ஆதிக்கத் திட்டத்தின் ஒரு பகுதியாகக் காட்டுகிற முயற்கிகள் தொடருகின்றன.

அதைவிடச் சீனா இந்தியாவை முற்றுகையிடத் திட்டமிடுகிறது என்று சொல்லும் சீனாவின் "முத்து மாலைக்" கதை இன்னமும் தொடர்கிறது. இந்தியாவுக்கே இல்லாத இந்தக் கவலை இங்கே உள்ளவர்களுக்கு ஏன் வருகிறது என்பதைக் கவனித்தால், இலங்கையை இலக்குவைக்கும் மேற்குலகிடமிருந்து கவனத்தைத் திருப்புகிற முயற்சி என்றே இதைக் கருதவேண்டும். இப் பிரசாரம் குறிப்பாகத் தமிழரிடையே முக்கியத்துவம் பெறுவதும் கவனத்துக்குரியது.

சீனாவை அமெரிக்காவுக்கும் மேற்குலகுக்கும் சமமாக் காட்டிச் சிலர் சீன எதிர்ப்பு ஒன்றைக் கிளறிவிடுவதற்குப் பலவாறான காரணங்கள் இருக்கலாம். ஆனால் அமெரிக்காவும் அதன் மேற்குலகக் கூட்டாளிகளும் ஒரு புறம் ரஷ்யாவையும் இன்னொருபுறம் யப்பான் உட்பட்ட சில கிழக்கு, தென்கிழக்கு ஆசிய நாடுகளுடன் சேர்ந்து சீனாவை ஒரு போருக்குள் இழுக்கவும் இந்தியாவின் ஒத்துழைப்புடன் தென்னாசியா வழியே சுற்றிவளைக்கவும் அமெரிக்கா எடுக்கும் முயற்சிகளிலிருந்து கவனத்தைத் திருப்புகிற நோக்கம் அவற்றுள் முக்கியமானது.

சீனா சோசலிச நாடல்ல. அது ஏகாதிபத்திய எதிர்ப்பில் அக்கறையுடைய நாடுமல்ல. அது தீவிரமாக முதலாளித்துவப் பாதையில் போகிறது என்பதிலும் ஐயமில்லை. அது ஒரு முதலாளிய நாடு என்பதை சமிர் அமின் போன்ற சில முக்கிய மாக்சியச் சிந்தனையாளர்கள் மறுத்தாலும், அந்த மறுப்பு ஏற்கத்தக்கதல்ல. ஒரு வலிய முதலாளிய அரசு காலப்போக்கில் ஏகாதிபத்தியமாக வளரும் வாய்ப்பையும் நாம் மறுப்பதற்கில்லை. ஆனாற் சீனா ஏலவே ஒரு ஏகாதிபத்திய நாடா என்பதிற் கடும் கருத்து வேறுபாடுகள் உள்ளன. எவ்வாறாயினும் மேற்குலகின் பொருளாதாரச் சரிவு சீனாவின் முதலாளியத்தை ஆதிக்க நிலைக்குக் கொண்டுவரும் வாய்ப்பையும் அதன் விளைவுகளையும் புறக்கணிக்க இயலாது. எவ்வாறோ ரஷ்யாவைத் தங்களுடன் அரவணைக்க ஆயத்தமாயிருந்த முதலாளிய வல்லரசுகள் (ஜி-7 எனப்படும் அமெரிக்கா, கனடா, பிரித்தானியா, பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான்) சீனாவை எட்டத்தில் வைக்க விரும்புகின்றன. அதனால் சீனா முதலாளிய நாடல்ல என்று வாதிக்க இயலாது. எனினும் மேற்குலகுடன் ஒரு ஆழமான முரண்பாடு உள்ளமை முக்கியமானது.

ஏகாதிபத்திய நாடுகள் வழமையாகக் கடைப்பிடிக்கும் பல நடைமுறைகளைச் சீனா இன்னமும் கடைப்பிடிக்கத் தொடங்கவில்லை. அவற்றில், சீனா அந்நியநாடுகளிற் படைத் தளங்களை நிறுவாமையும் உள்நாட்டு அலுவல்களிளோ ஆட்சிமாற்றத்திலோ ஈடுபடாமையும் முக்கியமானவை. அதைவிட, நேரடியான உற்பத்தி முதலீடுகள் என்று வருகின்றபோது, இன்னமும் சீனாவுக்குள் நுழைக்கிற முதலீடுகளின் அளவு சீனாவின் அயல் முதலீடுகளிலும் அதிகமாகவே உள்ளது. சீன மக்களின் மலிவான உழைப்புச் சுரண்டப்படுகிறது. இது நிரந்தரமல்ல. சீனா ஒரு ஏகாதிபத்தியமாக முழுடையடைய இன்னஞ் சிலகாலம் எடுக்கும் என்பதையே இது உணர்த்துகிறது. ஆயினும் சீனாவின் செல்திசையைவைத்து

**சீனா இந்தியாவை முற்றுகையிடத் திட்டமிடுகிறது என்று சொல்லும் சீனாவின் "முத்து மாலைக்"கதை இன்னமும் தொடர்கிறது. இந்தியாவுக்கே இல்லாத இந்தக் கவலை இங்கே உள்ளவர்களுக்கு ஏன் வருகிறது என்பதைக் கவனித்தால், இலங்கையை இலக்குவைக்கும் மேற்குலகிடமிருந்து கவனத்தைத் திருப்புகிற முயற்சி என்றே இதைக் கருதவேண்டும். இப் பிரசாரம் குறிப்பாகத் தமிழரிடையே முக்கியத்துவம் பெறுவதும் கவனத்துக்குரியது.**

அதைச் சிலர் ஏகாதிபத்தியநாடு என்று கருதுகின்றனர். கூடவே இந்தியாவையும் சேர்த்துப் பேசுவோர் உள்ளனர். ஆனால் அதுவும் தவறானது. இந்திய மூலதனம் ஏற்றுமதியாகிறபோதும் மேலை ஏகாதிபத்தியத்திற்குக் கீழ்பட்ட நிலையிலேயே இந்தியாஉள்ளது. அது இன்னமும் ஒரு உலகப் பொருளாதார ஆதிக்கச் சக்தியல்ல.

பிறிக்ஸ் (*BRICS*) போன்ற அமைப்புக்களையும் ஷங்ஹாய் உடன்படிக்கை அமைப்பையும் ஐரோப்பிய ஒன்றியம், நவ்ற்றா (*NAFTA*) போன்றவற்றுடனும் நேற்றோ (*NATO*) போன்ற ராணுவ அமைப்புக்களுடனும் ஒப்பிடுவது தவறானது. இவை வேகமாக வளர்ந்து வரும் அல்லது தமது முதலாளிய அரசுகளின இருப்பைத் தக்க வைக்க முயலும் நாடுகளின் தற்காப்புக் கேடயங்களே ஒழிய விஸ்தரிப்புக்கான அமைப்புக்களல்ல.

இத்தனையையும் மீறி எவரும் சீனாவையும் ரஷ்யாவையும் ஏகாதிபத்தியங்கள் என்று கூறி அவற்றை அமெரிக்காவுடன் சமன்படுத்துவார்களாயின், அவர்களது நோக்கங்களை இரண்டாம் உலகப் போரின் போதான ட்ரொட்ஸ்கிய நோக்கங்களுடனேயே ஒப்பிடவேண்டும்.

சீனா எந்த நாட்டின் உள் அலுவல்களிலும் தலையிடவோ எந்த நாட்டிலும் ராணுவத் தளங்களை நிறுவவோ முற்படின் அதை நாம் எதிர்க்கவேண்டும். சீன மூலதனத்தின் விரிவாக்கம் மேலை முதலாளிய மூலதனத்தை மீறி ஏன் நடக்கிறது என்பதை நாம் விசாரிப்பது நல்லது. அதில் முறைகேடுகளும் தேசியநலனுக்குக் கேடான காரியங்களும் சம்பந்தப்படின் அவை சுட்டிக்காட்டவும் கடுமையாக எதிக்கவும் வேண்டியன.

ஆனால் ஒரு நாட்டின் மக்களை நேரடியாக அச்சுறுத்துவது எந்த வல்லரசு என்பதை வைத்தே அந்த நாட்டின் மக்கள் தமது நிலைப்பாட்டைத் தீர்மானிக்க வேண்டும். சீனாவைக் கண்டிக்க வேண்டியபோது கண்டிப்பதற்கும் வலிந்து கண்டிப்பதற்கும் பெருத்த வேறுபாடு உண்டு.

இலங்கையின் வணிகப் பொருளாதாரத்தல் இந்திய ஆதிக்கமே பெரிது. இலங்கை இன்னமும் மேற்குலகின் கடன், உதவி, முதலீடுகள், ஏற்றுமதிகள் ஆகியவற்றில் தங்கியிருத்தல் போன்ற பல காரணங்களால் மேற்குலகிற்குக் கீழ்பட்டுள்ளது. சீனாவின் அபிவிருத்தித் திட்டக் கடன்களும் "உதவிகளும்" சீனாவின் முதலாளிய நலன்களைப் பேணும் நோக்கிலானவை என்பதில் ஐயமில்லை. ஆனால் இலங்கை எதிர்நோக்கும் உடனடி மிரட்டல் சீனாவிலிருந்து வரவில்லை. சீனாவைக் காட்டி இலங்கையில் அகலக்கால் பதிக்கக் கடுமையாக முயலும் அமெரிக்காவும் தன் பிடியைத் தளர்த்த விரும்பாத இந்தியாவுமே இலங்கை அரசியலிற் குறுக்கிடுகின்றன என்பதை மனதில் இருத்துவது தகும் ●

# இலங்கையின் இருபதாம் நூற்றாண்டு 46

# காரிருள் சூழும் வேளை

இமயவரம்பன்

ஜே.ஆர். ஜயவர்தன ஆட்சியின் மிக மோசமான நிகழ்வாக 1983 ஜுலை வன்முறையைப் பலருங் கூறுவர். அதற்கு நல்ல காரணங்கள் உள்ளன. எனினும் அது ஒரு பொதுவான வேலைத்திட்டத்தின் திட்டமிட்ட நிகழ்வு என்பதையும் அதற்குப் பின்னால் ஆழமான அரசியல் நோக்கங்கள் இருந்தன என்பதையும் ஏற்பதற்குப் பலரும் தயங்கியுள்ளனர். ஜயவர்தனவின் இனக் குரோதமும் பழிவாங்கும் சுபாவமும் குள்ளநரித்தனமும் பிற அரசியல் தலைவர்களிடமிருந்து அவரை வேறுபடுத்தினாலும், அவர் குறிப்பிட்டதொரு வர்க்கத்தின் பிரதிநிதியாகச் செயற்பட்டார் என்பதை மறந்து அவருடைய அரசியற் செயற்பாடுகளை விளங்க முயல்வது தவறான முடிவுகட்கு இட்டுச் செல்லும்.

நாட்டின் தேசிய இனப்பிரச்சினையின் முக்கியமான முரண்பாடுகளைச் சிங்கள மக்களின் எதிர்ப்பின்றித் தீர்க்க அவருடைய ஆட்சியின் முதற் சில ஆண்டுகளில் அவருக்கு இருந்த வாய்ப்பு அவருக்கு முன்பான எந்த ஆட்சித் தலைவருக்கும் இருக்கவில்லை. அவருக்கு எதிராக ஒரு கிளர்ச்சியைத் தொடங்கும் நிலையில் நாட்டின் எந்த எதிர்க்கட்சியும் இருக்கவில்லை. முன்னாள் ஆளுங் கூட்டணிக் கட்சிகள் மனஞ் சோர்ந்திருந்தன. ஜே.வி.பி. அப்போது தேசிய இனப்பிரச்சினையிற் கடும்போக்கைக் கொண்டிருக்கவில்லை. எனினும் 1978ம் ஆண்டின் அரசியல் யாப்பு 1972ம் ஆண்டின் யாப்பை விட வலுவாகச் சிங்கள பௌத்த மேலாண்மையை வலியுறுத்தியது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும் அப்போது கட்சிகளாக அமைந்திராத முஸ்லிம் அரசியல் தலைவர்களும் 1977இல் யூ.என்.பி.யின் வெற்றிக்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ உதவியவர்கள் என்பதுடன்



**ஜயவர்தனவின் இனக் குரோதமும் பழிவாங்கும் சுபாவமும் குள்ளநரித்தனமும் பிற அரசியல் தலைவர்களிடமிருந்து அவரை வேறுபடுத்தினாலும், அவர் குறிப்பிட்டதொரு வர்க்கத்தின் பிரதிநிதி யாகச் செயற்பட்டார் என்பதை மறந்து அவருடைய அரசி யற் செயற்பாடுகளை விளங்க முயல்வது தவறான முடிவு கட்கு இட்டுச் செல்லும்.**

தனிப்படவும் நட்புடனேயே இருந்தனர். எனினும், முதலில் முன்னாள் ஆளுங் கட்சியினருக்கு எதிரான வன்முறையை ஊக்குவித்த அதே போக்கில் 1977ம் ஆண்டின் தமிழர் விரோத வன்முறையையும் ஜயவர்தன ஊக்குவித்தார்.

முக்கிய பேரினவாதக் கட்சியாகத் தமிழ்த் தேசியவாதிகள் கருதிய ஸ்ரீ.ல.சு.க., 1958 ஒகஸ்ற் வன்முறைக்குப் பின்பு நாட்டில் இன்னுமொரு பேரினவாத வன்முறை நிகழ்வைத் தவிர்ப்பதிற் பெருங் கவனமெடுத்தது. 1970களின் பிற்பகுதியில் தேசிய இனப் பிரச்சனை தீவிரமடைந்து வடக்கில் ஆயுதக் குழுக்கள் இயங்கத் தொடங்கிய போதும், சமூக வன்முறையை ஒரு அரசியல் ஆயதமாக்குவதை ஸ்ரீ.ல.சு.க. ஆட்சிகள் கவனமாகத் தவிர்த்தன எனலாம். முஸ்லிம்கட்கும், மலையகத் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்கட்கும் எதிரான செயல்கள் 1976-1977 பகுதியில் ஓரிரு இடங்களில் நடந்தன. 1977இல் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தின் மறைவை ஒரு அரசியற் பிரசாரமாக்கும் நோக்கில் அவருடைய சாம்பலை ஊரூராக ஊர்வலங் கொண்டுபோன பின்னணியில் திருகோணமலையில் சிங்களப் பேரினவாதிகள் வன்செயலில் இறங்கினர். எனினும், சமூக வன்முறை பரவுவதைத் தடுக்க அரசாங்கம் கடுமையாக முயன்றது.

1977க்குப் பின்பான நிலைமைகள் முற்றிலும் வேறானவை. வடக்கில் 1977க்குப் பின்பு படையினரின் இருப்பு படிப்படியாக வலுப்பட்டது. தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியின் இயலாமை அவர்கள் உசுப்பிவிட்ட இளைஞர்களிடையே அதிருப்தியையும் தீவிரவாத அரசியலையும் தூண்டியது. தேசிய இனப்பிரச்சினையின் நீண்டகாலத் தீர்வுக்கு ஆயத்தமாக இல்லாமை ஒருபுறமிருக்க, இளைஞர்களை வன்முறையை நோக்கி மேலும் தூண்டுகிற விதமாகவே அரசாங்கம் நடந்தது. 1978இல் சட்டமியற்றி விடுதலைப் புலிகளைத் தடை செய்தபோதும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை 1979இல் நிறைவேற்றிய போதும், வடக்கில் முளைவிட்ட வன்முறைப் போக்குகளை ஏலவே இருந்த சட்டங்களின் துணையுடன் கையாண்டிருக்கலாம். ஆனால் அதற்குச் சாதகமான அரசியற் சூழலை உருவாக்க அரசாங்கம் விரும்பவில்லை.

கூட்டணித் தலைமையிடமும் ஜயவர்தன ஆட்சியின் பேரினவாதப் போக்கைக் கையாள உகந்த வேலைமுறை இருக்கவில்லை. இன்னுமொரு இனக் கலவரம் பற்றிய அச்சங் காரணமாகக் கூட்டணி பாராளுமன்ற இடதுசாரிகளுடனும் ஸ்ரீ.ல.சு.க.வுடனும் ஏற்படுத்திய இணக்கத்தை 1980இல் முறித்துக் கொண்டது என்று கூறப்பட்டாலும், அதினும் முக்கியமான காரணமாகக் கூட்டணிக்குள் இருந்த யூ.என்.பி.க்கும் மேற்குலகிற்கும் சார்பானோரின் செல்வாக்கு அடங்கும். சிரில் மத்தியூ, தனது தனிப்பட்ட அரசியற் செல்வாக்கை மீறிய முக்கியத்துவத்தை அரசாங்கத்திற் பெற்றமையும் அவர் வலிந்து தமிழருக்கு எதிரான இனத் துவேஷப் பிரசாரத்தில் ஈடுபட்டமையும் ஜயவர்தனவின் ஆதரவுடனும் தூண்டுதலுடனும் அமைந்தவையே. மத்தியூவைக் கட்டுப்படுத்த ஜயவர்தன முயலாமைக்குக் காரணம், தான் சொல்லவும் செய்யவும் கடினமானவற்றை மத்தியூவைக் கொண்டு செய்யும் நோக்கமே ஒழிய வேறல்ல. ஜயவர்த்தன தனது ஆட்சியின் பிற்காலத்திலேயே மத்தியூவுடன் முறித்துக் கொண்டார். அதற்குள், மத்தியூ மூலம் செய்ய வேண்டியதையெல்லாம் செய்தாயிற்று.

தேசிய இனப்பிரச்சினையின் தீர்வை ஜயவர்தன விரும்பினார் என்று கூற இடமில்லை. அனைத்துத் தேசிய இனங்களும் முழுமையாகத் தனக்குக் கட்டுபட்டிருப்பதை மட்டுமே அவர் எதிர்பார்த்தார். எனவே எவ்விதமான கிளர்ச்சியையும் கடுமையான அரச வன்முறை மூலம் ஒடுக்க அவர் தயங்கவில்லை. தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணிக்கு ஜயவர்தன ஆட்சியுடன் கசந்தாலும் தாங்கள் உறுதியளித்த தமிழீழத்தைப் பெற வழிகூற இயலாததால் அரச அடக்குமுறைக்குட்பட்ட வட பிரதேச இளைஞர்களின் நெருக்குவாரங்கட்கு முகங்கொடுக்க இயலாது போய், ஜயவர்தன ஆட்சியுடன் பகைப்பது கடினமாகியது. இந்த இக்கட்டின் போது, எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தின் மருமகன் ஏ.ஜே. வில்சனும் மு. திருச்செல்வத்தின் மகன் நீலன் திருச்செல்வமும் ஜயவர்தனவுடன் பேரம் பேசி மாவட்ட அபிவிருத்திச் சபை என்ற அமைப்பிற்கு அவரை உடன்படச் செய்தனர். மாவட்ட அபிவிருத்திச் சபை என்பது ஒரு மாநாகர சபையின் அதிகாரங்கள் கூட இல்லாத ஒரு அமைப்பு என்பது சம்பந்தப்பட்ட தரப்பினர்கட்குத் தெரியும். அதை மறுக்க இயலாத இக்கட்டில் இருந்த கூட்டமைப்பு அதை ஒரு பெரிய அரசியல் வெற்றியாகக் காட்ட முயன்றது. ஆனால் அது இளைஞர்கள் நடுவே எடுபடவில்லை. மாவட்ட அபிவிருத்தி சபையைப் புறக்கணிக்க வேண்டும் என்ற கோரிக்கை வலுத்தது. எனினும் 1981ம் ஆண்டு யாழ்ப்பாண மாவட்ட சபைத் தேர்தலில் கூட்டணி போட்டியிட்டது. அத் தேர்தலின் போது அமைச்சர்கள் சிரில் மத்தியூவும் காமினி திசநாயக்கவும் யாழ்ப்பாணத்தில் இருந்தனர். தேர்தல் வாக்களிப்பு முடிந்த நிலையில் சிவில் உடையிலிருந்த பொலிசார் யாழ்ப்பாண நூலகத்தை முற்றாகத் தீக்கிரையாக்கினர்.

அது நடந்த காரணம், தேர்தலில் மோசடி மூலம் கூட்டணியின் வெற்றியைத் தடுக்க இயலாத விரக்தியா வெறும் வன்மமா என்பதை விட முக்கியமானது, அவ்வாறான ஒரு செயலை நடத்திய ஆட்சி எத்தகைய வக்கிர புத்தியுடையதாகியிருக்க வேண்டும் என்பதே.

1977ம் ஆண்டின் பேரினவாத வன்முறையின் போது மலையகத் தமிழர் மீதும் வன்முறை பிரயோகிக்கப்பட்டது. 1981ம் ஆண்டு மலையக மக்கள் மீது மீண்டும் வன்முறை கட்டவிழ்க்கப்பட்டது. அதே வேளை, தென்னிலங்கையில் சிங்கள நடுத்தர வர்கக்த்தினரிடையே

**கூட்டணித் தலைமையிடமும் ஜயவர்தன ஆட்சியின் பேரினவாதப் போக்கைக் கையாள உகந்த வேலைமுறை இருக்கவில்லை. இன்னுமொரு இனக் கலவரம் பற்றிய அச்சங் காரணமாகக் கூட்டணி பாராளுமன்ற இடதுசாரிகளுடனும் ஸ்ரீ.ல.சு.க.வுடனும் ஏற்படுத்திய இணக்கத்தை 1980இல் முறித்துக் கொண்டது என்று கூறப்பட்டாலும், அதினும் முக்கியமான காரணமாகக் கூட்டணிக்குள் இருந்த யூ.என்.பி.க்கும் மேற்குலகிற்கும் சார்பானோரின் செல்வாக்கு அடங்கும்.**

பேரினவாதம் வலுவாக ஊக்குவிக்கப்பட்டது. இவ்வாறான இனப் பகைமையின் ஊக்குவிப்பு சிங்கள-தமிழ் மோதல் ஒன்றை உருவாக்கும் நோக்குடையது மட்டுமல்ல. சிங்கள-தமிழ் சமூகங்களிடையிலான மோதல், சிங்கள மக்களின் அரசியல் அதிருப்தியினின்று–குறிப்பாக அரசாங்கத்தின் திறந்த பொருளாதாரம், தனியார் மயமாக்கல், தாராளமயம் ஆகிய கொள்கைகளின் பாதிப்புக்களினின்று–கவனத்தைத் திருப்பும் நோக்கைக் கொண்டிருந்தது.

தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களைச் சிங்களக் குடியேற்றங்கள் மூலம் குறுக்கும் டி.எஸ். சேனநாயக்காவின் திட்டம் விவசாய விருத்தியின் பெயரில் நடந்தது. அதற்கும் மேலாகச் சட்ட விரோதமான குடியேற்றங்களும் நடைபெற்றன. ஜயவர்தன ஆட்சியில் கீழ் மாகாணத்தின் கணிசமான பகுதியைச் சிங்களமயமாக்கும் காரியம் மகாவலி மின் உற்பத்தி-நீர்ப்பாசனத் திட்டத்தின் மூலம் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டது. தமிழ் மக்களுக்குத் தமிழ்ப் பிரதேசங்களிற் காணி ஒதுக்குவதற்கு மாறாக ஒவ்வொரு குடியேற்றப் பிரிவிலும் நாட் டின் சனத்தொகை விகிதத்திற்கு ஏற்றபடி காணி ஒதுக்கும் ஏற்பாட்டின் விளைவாகத் தமிழ் மக்கள் திட்டமிட்டே ஓரங் கட்டப்பட்டனர். பாரம்பரியப் பிரதேசம் என்பதை மறுக்கும் நோக்கில் வேறு குடியேற்றங்கள் கிழக்கிலும் வடக்கிலும் மேற்கொள்ளப்பட்டன. அதற்கும் அப்பால், வடக்கு-கிழக்கு தமிழரின் பாரம்பரியப் பிரதேசம் அல்ல என்று நிறுவு மாறு ஜயவர்தன ஒரு சிங்களப் புவியியற் பேராசிரியரைப் பணித்தார். அதன் மூலம் இலங்கையின் சனப் பரம்பலின் வரலாறு திரித்துக் கூறப்பட்டது. இப் போக்கு அன்று முதல் இன்றுவரை தீவிரமாக முன்னெடுக்கப்படுவதை நாமறிவோம். வடக்கிலும் கிழக்கிலும் ஒவ்வொரு ஊருக்கும் ஒரு சிங்கள பௌத்தத் தோற்றுவாயை வலிந்து நிறுவுவதன் நோக்கம் தமிழருக்கும் முஸ்லிம்கட்கும் தாயகங்களை மறுப்பதேயாகும்.

தேசிய இனப்பிரச்சினையின் தீவிரமாக்கல், சிங்கள மக்களின் கவனத்தைத் தமது அன்றாடப் பிரச்சினைகளின்று திருப்பியதுடன் நில்லாது, அரசாங்கத்தின் சனநாயக மறுப்புப் பற்றிய எதிர்ப்பை மழுங்கடிக்கவும் உதவியது.

தமிழ் மக்களுக்கு எதிரான ஒரு இன ஒழிப்புப் போர் ஏலவே திட்டமிட்ட ஒரு நிகழ்ச்சி நிரலையொட்டி முன்னெடுக்கப்பட்டது என்று சொல்ல இயலாவிட்டாலும், வடக்கில் நடந்த சிறு வன்செயல்களைக் காரணமாக்கி அடக்குமுறைச் சட்டங்களை நிறைவேற்றியதையும் அங்கு ராணுவத்தைக் குவித்ததையும் ஜே.வி.பி. உட்பட அனைத்து எதிர்க்கட்சிகளும் 1979இல் ஒன்றிணைந்து கண்டித்தன. 1982க்குப் பின்பு ஜே.வி.பி. தனது பேரினவாதப் போக்கிற்கு முழுமையாக மீண்டது.

வடக்கில் ராணுவத்தை நிறுவிப் பலப்படுத்தியமை ராணுவத்தினருக்கும் இளைஞர்கட்குமான மோதலாக மட்டுமன்றி மக்கள் மீதான கடுமையாகவும் புலனானது.

12>>>



0.03.2014 அன்று வவுனியாவில் இடம்பெற்ற தோழர் சூடாமணி அவர்களது முதல் வருட நினைவுப் பகிர்வில், சமகாலச் சமூக சூழலில் பொதுவுடைமைச் சிந்தனையும் தோழர். சூடாமணியும் என்னும் தலைப்பில் புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் சி.கா. செந்திவேல் நிகழ்த்திய நினைவுரை.

# சமகாலச் சமூகச் சூழலில் பொதுவுடைமைச் சிந்தனையும் தோழர் சூடாமணியும்-02

ஏற்கனவே உருவாக்கி முன்னெடுக்கப்பட்ட கைத்தொழில்களும் சிறு தொழில்களுக்கும் தாராளமயத்தால் சாகடிக்கப்பட்டு விட்டன. மனித வளம் மத்திய கிழக்கு நாடுகளுக்கு பல லட்சங்களாக கப்பலேற்றப்பட்டு மலிவான சம்பளத்தில் வேலை வாங்கப்பட்டு பிழிந்தெடுக்கப்படுகின்றது. இதில் பெண்களின் அவலநிலை விபரிக்க முடியாதவைகளாகும். அதேபோன்று உள்நாட்டிலும் ஆண் பெண் தொழிலாளர்கள், அரசாங்க தனியார்துறை ஊழியர்கள் அடிப்படை வாழ்க்கைச் செலவைக் கூட ஈடு செய்ய முடியாத குறைந்த சம்பளங்களின் கீழேயே வேலை செய்து வருகின்றனர். இதில் மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் நிலை மிக மோசமானதாக இருந்து வருகின்றது.

இவற்றின் மத்தியில் இன்று அபிவிருத்தி என உரத்து பேசப்பட்டும் செயற்படுத்தப்பட்டும் வருகின்றன. அவை உட்கட்டுமான அபிவிருத்தி என்பதாக உள்ளனவே தவிர ஒட்டுமொத்த தேசிய உற்பத்திப் பொருளாதார வளர்ச்சிக்கானதல்ல. தெருக்கள், பெருந்தெருக்கள், அதிவேக வீதிகள், துறைமுகங்கள், விமான நிலையங்கள், நகர அபிவிருத்திகள் என்பன யாவும் ஏகாதிபத்திய உலக மயமாதலின் விரிவாக்கத்திற்கு உரியனவே அன்றி நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கான அடிப்படைகள் அல்ல. மேலும் நகர அபிவிருத்தியும் உல்லாச விடுதிகள் நிர்மாணிப்பும் கசினோ சூதாட்ட மையங்களும் உல்லாசப் பயணிகளை வரவழைப்பதற்கேயாகும். இலங்கையை சிங்கப்பூராக்கும் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் கனவு இன்றைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவினால் நிறை வேற்றப்பட்டு வருகின்றது.


நவகொலனியத்தின் கீழான நவ்தாராள பொருளாதாரமானது பல்தேசியக் கம்பனிகள் (Multi National Companies), பெருவணிக நிறுவனங்கள் (Corporates), நாடுகடந்த கூட்டுத்தாபனங்கள் (Transnational Corporations) போன்றவற்றால் முன்னெடுக்கப்படுகின்றது. இந் நவதாராளத்தினது உலகமயமானது மேன்மேலும் முன்னெடுக்கப்படுவதற்கு தகவல் தொழில்நுட்பமானது பர்ரிய பங்களிப்பை வழங்கி நிற்கிறது. தகவல்தொழில்நுட்பமானது மனித அறிவு வளர்ச்சியின் உச்சம் எனக் கொள்ளப்பட்ட போதிலும் அதன் பயன்பாடானது முதலாளித்துவ சுரண்டலுக்கும் ஏகாதிபத்திய உலக மேலாதிக்கத்திற்குமே பயன்பட்டு வருகின்றது. அதேவேளை இத்தகவல் தொழில்நுட்பமானது கணனி, கைத்

**“நவகொலனியத்தின் கீழான நவதாராள பொருளாதாரமானது பல்தேசியக் கம்பனிகள் (*Multi National Companies*), பெருவணிக நிறுவனங்கள் (Corporates), நாடுகடந்த கூட்டுத்தாபனங்கள் (Transnational Corporations) போன்றவற்றால் முன்னெடுக்கப்படுகின்றது. இந்நவதாராளத்தினது உலகமயமானது மேன்மேலும் முன்னெடுக்கப்படுவதற்கு தகவல்தொழில்நுட்பமானது பாரிய பங்களிப்பை வழங்கி நிற்கிறது. தகவல்தொழில்நுட்பமானது மனித அறிவு வளர்ச்சியின் உச்சம் எனக் கொள்ளப்பட்ட போதிலும் அதன் பயன்பாடானது முதலாளித்துவ சுரண்டலுக்கும் ஏகாதிபத்திய உலக மேலாதிக்கத்திற்குமே பயன்பட்டு வருகின்றது.”**

தொலைபேசி உள்ளிட்ட நவீன தகவல் தொடர்பு சாதனங்கள் மூலம் மனிதர்களிடையேயான ஆக்க முயற்சிகளுக்கு புறம்பான அழிவுகளுக்கும் வழி வகுத்து நிற்கின்றன. குறிப்பாக இளம் தலைமுறையினரி டையே நவீனதகவல் தொழில்நுட்ப சாதனங்களானவை எதிர்மறைச் சிந்தனைகளையே ஊட்டி வளர்த்துள்ளன. அவை சமூகச் சீரழிவுகள் என்ற பெயரில் கொலை, கொள்ளை, போதைவஸ்துப் பாவனை, பாலியல் வன் புணர்ச்சி, சிறுவர் துஷ்பிரயோகம், மதுப்பாவனை, வன் முறை போன்றவைகளாக வளர்ச்சி பெற்று நிற்கின்றன. இவை அனைத்தும் இளம் தலைமுறையினரிடையே சமூகச் சிந்தனை, சமூகச் சார்புநிலை போன்றவற்றை சிதைத்து சின்னாபின்னாமாக்கி விட்டன.

மேலும் நவதாராள பொருளாதாரக் கொள்கையானது பணத்தை மேலும் முதன்மைப்படுத்தி பணம் தேடுவதையும், அதற்கு எத்தகைய குறுக்குவழியையும் பின்பற்றலாம் என்ற அவல நிலையையும் தோற்றுவித்துள்ளது. இது முதலாளித்துவத்தின் உச்ச நிலையான ஏகாதிபத்தியத்தின் நிலைப்பாடாகும். முதலாளித்துவம் தனது கொள்ளை இலாபம் என்பதை எல்லையற்று விரிவுபடுத்திச் செல்கிறது.

முதலாளித்துவத்தின் ஆரம்ப காலத்தில் தங்கம் அமெரிக்க மண்ணின் மைந்தர்களான செவ்விந்தியர்களிடமிருந்து கொள்ளையிடப்பட்டது. அதற்காக அந்த மக்கள் லட்சக்கணக்கில் ஐரோப்பிய கொலனிய வெறிநாய்க் கூட்டத்தினரால் கொன்றொழிக்கப்பட்டனர். இத் தங்கத்தை வைத்தே முதலாளித்துவம் தன்னை நிலைநிறுத்தியது. இதனால் தங்கம் “மஞ்சள் பிசாசு” என்றும் அழைக்கப்பட்டது. அந்த பிசாசின் வேலையைத் தான் இன்று பணம் செய்து வருகிறது. முதலாளித்துவத்தின் கீழ் இந்தப்பணம் எவ்வாறு மனிதர்களின் பெறுமானத்தை சகல நிலைகளிலும் கீழ் நிலைக்கு தள்ளியது என்பதை விளக்கும் போது மாக்சும் ஏங்கல்சும் உலகப்புகழ் பெற்ற கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையில் பின்வருமாறு கூறுகின்றனர் “முதாலாளித்துவமானது பழைய பந்தங்களை எல்லாம் ஈவிரக்கமின்றி




நன்றி: டெய்லி மிரர்

அறுத்தெறிந்து விட்டது. மனிதனுக்கும் மனிதனுக்குமிடையில் அப்பட்டமான சுயநலத்தைத் தவிர, பரிவு உணர்ச்சி ஏதுவும் இல்லாத பட்டுவாடாவைத் தவிர வேறு ஒட்டுமில்லை உறவுமில்லை என்றாக்கிவிட்டது. புனிதப் பேரானந்தங்கள் என்று கூறப்பட்டவற்றை எல்லாம் சுயநலக் களிப்பு என்னும் உறைபனிக் குளிர் நீரில் மூழ்கடித்து விட்டது. மனிதனது மாண்பினை, என்ன கொடுத்தால் என்ன கிடைக்கும் என்னும் பரிவர்த்தனை மதிப்பாக மாற்றிவிட்டது. சாசனங்களில் பிரகடனம் செய்யப்பட்ட எண்ணற்ற சுதந்திரங் களுக்குப் பதிலாக வெட்கம் கெட்ட வர்த்தக சுதந்திரம் என்ற ஒரே ஓரு சுதந்திரத்தை ஆசனத்தில் அமர்த்தி வைத்திருக் கிறது. குடும்பத்திடம் இருந்து அதன் உணர்ச்சி நயத்தைக் கிழித்தெறிந்து குடும்ப உறவை வெறும் காசு பண உறவாகச் சிறுமைப்படுத்திவிட்டது”. மேற்படி கூற்றின் உண்மையினை 166 வருடங்களுக்குப் பின்பும் முதலாளித்துவமும் பணமும் மனிதர்களை எந்நிலைக்கு ஆளாக்கி வைத்திருக்கின்றது என்பதனைக் காண்கின்றோம்.

இவ்வாறு பணத்தைக் குவித்து அதனை முதன்மைப் படுத்திக் கொண்ட முதலாளித்துவம் மனிதர்களின் சமூகக் கூட்டு வாழ்வையும் வளர்ச்சியையும் இல்லாது ஓழித்து தனிமனிதப் போட்டியையும் அதன் மூலம் வளர்ச்சி பெறலாம் என்ற போலி நம்பிக்கைகளையும் வளர்த்து வருகின்றது. இதனையே உலகமயமாதல் நிகழ்ச்சி நிரல் மூலம் முதலாளித்துவ ஏகாதிபத்தியம் உலகம் பூராகவும் முன்னெடுத்து வருகின்றது. இதற்குப் பலியாகிப் படுகுழியில் தள்ளப்பட்ட நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். அத்தகைய நாசகாரப் படுகுழியில் இருந்து நாட்டு மக்கள் வெளியேற முடியாது துன்பச் சுமைகளுடன் தத்தளித்து தடுமாறி நிற்கின்றனர். அதே வேளை பத்துவீதத்திற்கும் குறைவாகவுள்ள தொகையினரான சொத்து சுகம் பெற்று முதலாளித்துவ உயர் வர்க்க மேட்டுக் குடியினரும் அவர்களது அரசியல் பிரதிநிதிகளான ஆளும் வர்க்கத்தினரும் ஆதிக்க அரசியல் சக்திகளும் பணம் குவித்துச் சுக போகங்கள் அனைத்தையும் அனுபவித்து வருகின்றமை வெளிப்படையான ஒன்றாக இருந்து வருகிறது.

நண்பர்களே, தோழர்களே!

இவ்வேளை நாட்டின் தேசிய இனப்பிரச்சனையின்

**“உலகமயமாதலின் கீழான நவதாராள பொருளாதாரக் கொள்கையினை இலங்கைக்குள் முழுமையாகத் திணிக்க தேசிய இனப்பிரச்சனையை யுத்தமாக்குவதற்கு அமெரிக்க மேற்குலக ஏகாதிபத்தியவாதிகளும் பிராந்திய மேலாதிக்க சக்தியான இந்தியாவும் தங்களது பங்கையும் பணியையும் மேற்கொண்டு அதில் வெற்றியும் பெற்றுக் கொண்டன. இன்றும் அப் பிரச்சனையில் அரசியல் தீர்வு காணப்படுவதற்குப் பதிலாக மேன்மேலும் இனமுரண்பாட்டை வளர்த்தெடுத்து இனங்களைத் துருவமயப் படுத்தும் கைங்கரியங்களையே உள் நாட்டிலும் சர்வதேச அளவிலும் அவை செய்து வருகிறன.”**

முக்கியத்துவத்தைக் கண்டுகொள்ளாது நாம் அதனைக் கடந்து செல்ல முடியாது. ஏனெனில் அப் பிரச்சினை இலங்கையில் தமிழ், முஸ்லிம், மலையகத் தமிழ்த் தேசிய இனங்களின் மேல் ஒடுக்கு முறைகளையும் கடும் பாதிப்புகளையும் ஏற்படுத்தி வந்திருக்கின்றது. தேசிய இனப்பிரச்சனை காரணமான யுத்தம் வடக்கு கிழக்கு மக்களை கொடிய அழிவுகளுக்கு ஆளாக்கிவிட்டது. உயிர் உடைமை இழப்புகளுக்கும் கொடிய இடப்பெயர்வுகளுக்கும் உள்ளாக்கியவர்களால் அவற்றின் பாதிப்புக்களில் இருந்து இன்னும் மீள முடியாத நிலையில் மக்கள் விபரிக்கவியலாத துயரங்களை அனுபவித்து வருகின்றனர். இன்றைய ஆட்சி அதிகார நிலையில் இருந்து வரும் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஆளும் வர்க்க பேரினவாத ∴பாஸிச அரசாங்கத்திடம் தேசிய இனப்பிரச்சனைக்கான அரசியல் தீர்வு எதுவும் இல்லை. யுத்தத்தின் மூலம் இராணுவத் தீர்வைக் கண்டதாகப் பெருமை பேசிவரும் இன்றைய அரசாங்கம், தொடர்ந்தும் வடக்கு கிழக்கையும் தமிழ் மக்களையும் இராணுவ ஒடுக்குமுறையின் கீழ் ஒடுக்கி வருகின்ற போக்கினையே காணமுடிகின்றது.

உலகமயமாதலின் கீழான நவதாரள பொருளாதாரக் கொள்கையினை இலங்கைக்குள் முழமையாகத் திணிக்க தேசிய இனப்பிரச்சனையை யுத்தமாக்குவதற்கு அமெரிக்க மேற்குலக ஏகாதிபத்தியவாதிகளும் பிராந்திய மேலாதிக்க சக்தியான இந்தியாவும் தங்களது பங்கையும் பணியையும் மேற்கொண்டு அதில் வெற்றியும் பெற்றுக் கொண்டன. இன்றும் அப் பிரச்சனையில் அரசியல் தீர்வு காணப்படுவதற்குப் பதிலாக மேன்மேலும் இன முரண்பாட்டை வளர்த்தெடுத்து இனங்களைத் துருவமயப்படுத்தும் கைங்கரியங்களையே உள் நாட்டிலும் சர்வதேச அளவிலும் அவை செய்துவருகிறன. அதேவேளை இலங்கையின் ஆளும் தரப்பான தரகு முதலாளித்துவ பேரினவாத சக்திகள் தமது ஆட்சி அதிகார நிலைப்பிற்கும் நீடிப்பிற்கும் தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படுவதைத் தொடர்ந்தும் நிராகரித்து வருவதைக் காண முடிகிறது.

அதேவேளை தமிழர் தரப்புக் கட்சிகளிடம் தமிழ் மக்களை சிங்கள பௌத்த பேரினவாத ஒடுக்குமுறையில் இருந்து விடுவிக்கக்கூடியதும் தூரநோக்கில் அமைந்ததுமான கொள்கைத் தெளிவுடைய ஒரு பொது வேலைத் திட்டமும் காணப்படவில்லை. மக்களை அணிதிரட்டக் கூடிய வெகுஜன மார்க்கத்திலான கொள்கைத் திட்டமும் அவர்களிடம் இல்லை. வாக்கு வங்கியைத் தக்கவைத்திருப்பதையும் அதன் மூலம் பதவிகளைப் பல நிலைகளில் பெற்றுக் கொள்வதற்கு உரிய குறுந்தேசியவாத இனக் குரோத நிலைப்பாட்டையே தழிழ்த் தரப்புக் கட்சிகள் கொள்கையாகக் கொண்டிருக்கின்றார்களே தவிர அதற்கு அப்பால் வேறு எதையும் அவர்கள் கொண்டிருக்கவில்லை. அவர்கள் இன்று தமது நம்பிக்கைக்குரிய இந்தியா உள்ளிட்ட அமெரிக்க மேற்குலக சக்திகளைக் கொண்ட சர்வதேசத்திடமே இன்னும் சரணடைந்து நிற்பதைக் காணமுடிகிறது. ஆனால் அச் சர்வதேசம் எனப்படுவது தத்தமது சொந்த நிகழ்ச்சி நிரலுக்காகத் தமிழ் மக்களைப் பகடைக் காய்களாக்கி வரும் யதார்த்தத்தை எவ்வகையிலும் மறைக்க முடியாது.

*(அடுத்தப் பகுதியில் முற்றும்)*

# காரைநகர் சிறுமிகள் மீதான பாலியல் வன்புணர்வுக் குற்றவாளிகளைச் சட்டம் நீதி முன் நிறுத்து!

**புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சி வற்புறுத்தல்**

காரைநகர் ஊரிக்கிராமத்தில் பருவமடையாத இரண்டு பச்சிளம் சிறுமிகள் மீது நடாத்தப்பட்டுள்ள வன்புணர்வுக் கொடுரச் செயலானது மனித மிருகங்களினால் மட்டுமே செய்திருக்கமுடியும். காரைநகரில் முகாமிட்டுள்ள கடற்படையைச் சேர்ந்தோரே இவ் இழிசெயலைச் செய்திருக்கிறார்கள் என்றே மேற்படி சிறுமிகள் வாக்குமூலம் அளித்திருக்கிறார்கள் எனவே இச் மிருகச்செயல் புரிந்தோரை அடையாளம் கண்டு சட்டம் நீதியின் முன்னால் நிறுத்துவது அவசியமாகும். ஆனால் இன்றைய சூழலில் சட்டமும் நீதியும் ஆளும்தரப்பினரின் விருப்புவெறுப்பிற்கு உட்பட்டு முன்னெடுக்கப்படுவதால் கொடூரம் புரிந்தோர் எந்தளவிற்கு கண்டுபிடிக்கப்பட்டு தண்டிக்கப்படுவார்கள் என்பது கேள்விக்குறியாகவே காணப்படுகிறது. இவ் ஈனச் செயலை எமது புதிய-ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி மிக வன்மையாக கண்டிப்பதுடன் மக்கள் குடியிருப்புகளின் மத்தியில் இருந்து வரும் படையணிகளின் முகாம்களை உடன் அகற்றுவதையும் வற்புறுத்துகின்றது.

இவ்வாறு புதிய-ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்யின் அரசியல் குழு சார்பாக 19.07.2014 அன்று பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் இவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது. சிறுவர்கள் மீதுபாலியல், வன்புணர்வு, பலாத்காரம் நிகழ்த்தப்படுவது நாட்டில் அன்றாட நிகழ்வாக நடந்தேறிவருகிறது. இவற்றில் ஆயுதப்படைகளைச் சேர்ந்தோர் குறிப்பாக வடக்குக் கிழக்கில் தாம் படையணிகளைச் சேர்ந்தவர்கள் என்ற ஆயுத அகங்காரத்துடன் ஈடுபட்டு வருகின்றனா். கடந்த வருடம் நெடுங்கேணியைச் சேர்ந்த ஏழு வயது சிறுமி அங்கு நிலைகொண்டிருந்த இராணுவமுகாமைச் சேர்ந்த சிப்பாய் ஒருவனால் வன்புணர்ச்சி மூலம் குதறப்பட்டு குற்றுயிருடன் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தாள்.

இவ் அக்கிரமத்துக்கெதிராக நெடுங்கேணி மக்கள் சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பின் மூலம் அரசியல் கட்சிகளின் ஆதரவுடன் நடாத்திய பெரும் ஆர்ப்பாட்ட போராட்டத்தின் மூலமே படைச்சிப்பாய் கைதுசெய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட்ட நிகழ்வு இடம்பெற்றது. எனவே மக்களின் விழிப்புணர்வும், எழுச்சியுமே சிறுமிகளையும் பெண்களையும் குதறும் மனித மிருகங்களை வெளிக்கொணர்ந்து சட்டத்தின் முன் நிறுத்தவும் தண்டிக்கவும் உதவக்கூடியதாகும்.. தொடரும் இத்தகைய பாலியல் வன்புணர்வுக் கொடுமைகளைத் தடுப்பதற்கு மக்கள் குடியிருப்புகளில் இருந்துவரும் படையணிகளை அகற்றக்கோரும் மக்கள் இயக்கம் தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதையும் எமது கட்சி வற்புறுத்துகின்றது ●

# மறைந்த தோழர் எஸ்.டி. பண்டாரநாயக்காவின் நினைவுக் கூட்டம்






தனது 98வது வயதில் மறைந்த தோழர் எஸ்.டி. பண்டாரநாயக்காவின் நினைவுக் கூட்டம் 2014.06.29 அன்று தோழர் சோ.தேவராஜா தலைமையில் நடைபெற்றிருந்தது. இதன் போது நினைவுரைகளை யாழ் பல்கலைக் கழக மொழியியற் துறை விரிவுரையாளர் விமல் சுவாமிநாதனும் தோழரகள் சி.கா .செந்திவேலும் கா. தணிகாசலமும் நிகழ்த்தினர்.

## 01>> ஊவா மாகாணத் தேர்தல்...

அதன் காரணமாகவே இவர்களில் எவரும் மலையக மக்க்ளின் உரிமைகளையோ வாழ்வாதாரப் பிரச்சினைகளையோ பற்றி எதுவும் கொள்கையாகவோ கோரிக்கையாகவோ முன்வைக்காது பட்டியலில் இடங்கிடைத்தாற் போதும் என்ற நிலையில் போட்டியிடுகிறார்கள். ஏற்கனவே பெற்றுள்ள பதவிகட்கும் தேவைகட்கும் மேலும் உரம் சேர்க்கும் வகையிலே இவர்கள் மலையக மக்களின் வாக்குகளை ஆளும் தரப்பிற்கு வாங்கிக் கொடுக்கும் மாமா வேலைக்காகவே போட்டியிடுகிறார்கள். இவற்றை மறைப்பதற்குப் போடும் வேஷமும் கோஷமும் தான் தமிழ்ப் பிரதிநிதித்துவத்தைப் பாதுகாக்க வேண்டும் என்பதாகும். இந்தத் தமிழ்ப் பிரதிநிதித்துவத்தால் இதுவரை மலையக மாகாண சபைகளில் மக்கள் பெற்ற நன்மைகள் தான் என்ன? வடக்குக் கிழக்கில் தமிழர் ஐக்கியம் என்று முழங்குவது போன்றுதான் மலையகத்தில் தமிழ்ப் பிரதிநிதித்துவம் பெறப்படவேண்டும் என்பது பயன்படுகிறது.

இன்று மலையகத் தமிழர்கட்கும் தோட்டத் தொழிலாளர்கட்கும் தேவைப்படுவது தமிழ்ப் பிரதிதிநித்துவம் என்பதல்ல. அவர்களுக்குத் தேவைப்படுவது வாழ்க்கைச் செலவைச் சமாளிக்கக் கூடிய சம்பள உயர்வு. அடுத்தது தமது ஏறத்தாழ 200 வருட வாழ்வில் இன்றுவரை பெறமுடியாதுள்ள காணி வீட்டு உரிமையை வென்றெடுப்பதாகும். அடுத்தது உரியவாறு சுகாதாரமும் கல்வியும் பெறுவதாகும். இவற்றின் ஒட்டுமொத்தமாக அம் மக்கள் இன்று கோருவது மலையகத் தமிழர் சமூகம் ஒரு தேசிய இனமாகக் கொள்ளப்பட்டு அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதாகும். அதன் மூலம் அவர்களது மொழி, பண்பாட்டு, பொருளாதார, அரசியல், சமூகக் கட்டுமானங்கள் வரையறுப்புக்களைப் பெற முடியும். அவை மலையக மக்களின் இருப்பிற்கும் எதிர்காலத்திற்கும் அடிப்படையானவை. அவை மலையக மக்களின் ஒவ்வொரு அரங்கிலும் வற்புறுத்தப்பட வேண்டும். அவ்வாறு வற்புறுத்த மறுக்கும் ஒவ்வொருவரும் அம் மக்களை ஏமாற்றி அரசியல் தொழிற்சங்கப் பிழைப்பு நடாத்தும் பேர்வழிகளேயாவார்.

இவற்றை விடுத்துத் தமிழர் பிரதிநிதித்துவம் எனப் பொத்தாம் பொதுவாகக் கூறப்படுவது கபடமான வார்த்தைப் பிரயோகமாகும். இந்தத் தமிழர் பிரதிநிதித்துவம் என்பதால் இதுவரை உருப்படியாக எவை சாதிப்பட்டுள்ளன? இதுவும் மக்களை வெறும் இன உணர்வுக்குள் தள்ளிவிடுவதாகும். அதேவேளை அமைச்சர்கள், உறுப்பினர்கள், பிரதிநிதிகள் என்பபோர், நீலமாயினும் பச்சையாயினும், ஆளும் பேரினவாதிகளுக்குக் கைகள் உயர்த்தி சாமரை வீசுவோரே. மக்களுக்கு ஒன்றும் தமது பதவிச் சுகங்களுக்கு மற்றொன்றுமாகவே மலையகத் தலைமைகள் இருந்து வந்துள்ளன.

எனவே இவ் ஏமாற்றுச் சக்திகளின் தலைகளுக்கு மேலாக மலையகத் தொழிலாளர்களும் மக்களும் புதிய சிந்தனை, புதிய பாதை, புதிய அமைப்பு போன்ற நிலைப்பாட்டை எடுத்து அந்தப் பாதையில் பயணிக்க வேண்டும். அதனை விட்டு, மாறிமாறி வரும் தேர்தல் திருவிழாக்களால் பயன் ஏதும் இருக்க முடியாது. ஆளும் வர்க்கத்தினருக்கும் அவர்களை அண்டிப் பிழைப்போருக்குமே தேர்தல்களால் பயன் உண்டு. ஒடுக்கப்படும் உழைக்கும் மக்களுக்கு எதுவுமே இல்லை என்ற அரசியல் உண்மை உணரப்படவேண்டும். ● ● ●

## 08>> வட்டுக்கோட்டை முதல்...

அவற்றில் எதுவும் பாராளுமன்றத்திற்கும் பின்பு ஆயுதப் போராட்டத்திற்கும் முன்னின்றவர்களில் செவிகளில் ஏறவில்லை. “ஆண்ட பரம்பரை மீண்டுமொருமுறை ஆள நினைப்பதில் என்ன குறை” எனக் கேட்டே சகல தமிழ்த் தேசியவாதிகளும் தமிழீழத்திற்கு முழக்கமிட்டு நின்றனர். இவ்வாறு முழக்கமிட்டவர்களில், தமிழ் மேட்டுக்குடியினர் தம்மை உள்நாட்டிலும் புலம்பெயர்ந்த நாடுகளிலும் நன்கு வளப்படுத்திக் கொண்டனர். ஆனால் ஏறத்தாழ மூன்று லட்சத்திற்கு மேற்பட்டோர், முக்கியமாக ஏகப்பட்ட உழைக்கும் தமிழ் மக்கள், தமது உயிர்களையும் உடமைகளையும் இழந்தனர். படுகாயங்கள் பட்டும் வீடுவாசல்களை இழந்தோர் பல லட்சம் பேராவர்.

இத்தகைய பாரிய இழப்புகளுக்கும் அழிவுகளுக்கும் புலிகள் இயக்கம் மட்டுமன்றி ஆயுதம் ஏந்திய அனைத்து இயக்கங்களும் தமிழ் மக்களின் முன் குற்றவாளிகளே. ஆனால், இன்றும், புலிகள் இயக்கத்தை நியாயப்படுத்தி நிற்போர் மட்டுமன்றி ஏனைய இக்கத்தவர்களும் தமது கடந்தகாலத் தவறான அரசியல் நிலைப்பாட்டையோ போராட்ட வழிமுறைகளையோ அன்றி மக்களுக்குத் தாம் இழைத்த தவறுகளையோ சுயவிமர்சன ரீதியாகக் கண்டுகொள்ளத் தயாராக இல்லை. இது தமிழர் ஆதிக்க அரசியலில் காணக்கூடிய மிக மோசமான தீய அம்சமாகும். அதேவேளை தமது கறைபடிந்த அதே கரங்களோடு பாராளுமன்றம், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களில் புனிதமான ஜனநாயகவாதிகள் போன்று பங்குகொண்டு பதவிகள் பெறுகின்றனர். கடந்த காலத்திற்கும் தமக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லாதது போன்ற அயோக்கியத்துடன் நடந்து கொள்வதையும் காணமுடிகிறது. அதுமட்டுமன்றிக் கொலை கௌ்ளை சித்திரவதைகளில் ஈடுபட்டவர்களே இன்று தமிழ்த் தேசியத்தின் காவலர்கள் போன்று பதவிவழி நின்று உரத்துப் பேசுவதையும் காணமுடிகிறது. இவற்றை ஏன் இச் சந்தர்ப்பத்திற் குறிப்பிடவேண்டும் என்றால், முல்லைத்தீவின் முள்ளிவாய்க்கால் அழிவுக்குப் புலிகள் இயக்கம் மட்டும் காரணமாகிவிட முடியாது என்பதாகும். தமிழீழக் கோரிக்கையை முன்மொழிந்து யதார்த்தமற்றதும் வெற்றிபெற முடியாததான ஒன்றை முன்னெடுத்த அனைத்துத் தமிழ்த் தேசியவாதக் கட்சிகளும் இயக்கங்களும் அவற்றின் தலைவர்களும் தனிநபர்களும் இதற்கான பொறுப்பை ஏற்றுக் கொள்ளல் வேண்டும்.

உலகின் வெற்றி பெற்ற விடுதலைப் போராட்டங்களோடு முப்பத்திமூன்று வருடகால ஈழப் போராட்டத்தை ஒப்பிட்டு பார்ப்பது அவசியம். அந்த வகையில் ஜனநாயகப் புரட்சிகளும் தேசிய விடுதலைப் போராட்டங்களும் சோஷலிசப் புரட்சிகளும் வெற்றியடைந்து தத்தமது நாட்டிற்கும் மக்களுக்கும் மீட்சியளித்தன. சில விடுதலைப் போராட்டங்கள் பெருந் தோல்விகளையும் மோசமான அழிவுகளையும் பெற்றன. அவற்றில் ஒன்றாகவே தமிழீழப் போராட்டத்தின் மோசமான தோல்வியைக் காணுதல் வேண்டும்.

வட்டுக்கோட்டை முதல் முல்லைத்தீவு வரையான காலப் பகுதியின் வரலாற்றுப் பக்கங்கள் ஒவ்வொன்றும் சரியானதும் உறுதியானதுமான சமூக விஞ்ஞான ஆய்வுக்கு உட்படவேண்டும். அதன் மூலமே இலங்கையில் ஃபாசிச மயமாக்கப்பட்டு வரும் பௌத்த சிங்களப் பேரினவாதத்தையும் அதன் அடிப்படையாக இருந்துவரும் வர்க்க ஒடுக்குமுறையையும் அடையாளம் காண முடியும். எனவே தேசிய இன விடுதலை என்பது வர்க்கப் போராட்டத்தின் ஒரு பகுதியாக்கப்பட்டு முன்னெடுக் கப்படுவதன் அவசியத்தையே தோல்விகண்ட ஈழப் போராட்டம் வரலாற்றுப் பாடமாகத் தமிழ் மக்களுக்கு உணர்த்தி நிற்கிறது ●

## 10>> இலங்கையின் இருபதாம்...

அதற்கு எதிர்வினையாக இளைஞர் இயக்கங்கள் கொள் ளையடிப்பு முதலாகப் புகையிரதப் பாதைத் தகர்ப்பு வரை யான குற்றச் செயல்களிலும் ராணுவத்தினருடனான மோத லிலும் இறங்கினர். அவ்வாறான ஒரு நிகழ்விற் பதின்மூன்று இராணுவனத்தினர் ஒரு கண்ணிவெடித் தாக்குதலிற் கொல் லப்பட்டதையடுத்துக் குடாநாட்டில் இராணுவம் ஒரு வெறி யாட்டத்தில் இறங்கிப் பல பொதுமக்களைக் கொன்றது.

ஜயவர்தனவின் கடும்போக்கு அதனுடன் திருப்தியடையவில்லை. நாட்டிலுள்ள அனைத்துத் தமிழருக்கும் ஒரு பாடம் புகட்டுகிற நோக்கில், இன வன்முறையைத் தூண்டுமாறு, கொல்லப்பட்ட படையினரின் சடலங்களை இறுதிச் சடங்குகட்கு கொழும்புக்குக் கொண்டுவருமாறு ஜயவர்தன பணித்தார். அதன் பாரிய விளைவுகளைப் பற்றிப் பிரதமர் பிரேமதாச எச்சரித்தும் ஜயவர்தன சடலங்களைக் கொழும்புக்கு வருவித்தமை சிங்கள மக்களின் கோபத்தைத் தூண்டும் நோக்குடையது. 1983ம் ஆண்டு ஜூலை வன்முறை பெருமளவும் யூ.என்.பி குண்டர்களின் மூலம் அரசாங்க ஆதரவுடன் முன்னெடுக்கப்பட்டது என்பதில் ஐயமில்லை. அத்துடன் வெலிக்கடைச் சிறையில் ஐம்பத்து நால்வர் இருவேறு நாட்களிற் கொல்லப்பட்டமையும் சர்வதேச மட்டத்தில் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

முதற் சில நாட்களில் கொழும்பில் நடந்தேறிய இனவாத வன்முறை சிலநாட்கள் கழித்தே மத்திய மாகாணத்திற்குப் பரவியது என்பதை நோக்கும்போது, அது எழுந்தமானமாக மக்களின் சினத்தால் நிகழ்ந்ததல்ல என்பது தெளிவாகும். தமிழ் மக்கள் மிகவும் நொந்து போயிருந்த சூழலில் வானொலியிலும் அப்போது ஓரளவு பரவலாகியிருந்த அரச கட்டுப்பாட்டுக்குட்பட்ட தொலைக்காட்சியிலும் சனாதிபதியும் முக்கிய அமைச்சர்களும் சிங்கள மக்களின் “நியாயமான கோபத்தை” அங்கீகரித்தனரேயொழிய நடந்த எதையிட்டும் மனவருத்தந் தெரிவிக்கவோ மன்னிப்புக் கோரவோ முன்வரவில்லை. பிரதமர் பிரேமதாசவும் ஓரிரு அமைச்சர்களும் ஒப்பிடுகையில் நிதானமாகப் பேசியமை குறிப்பிடத்தக்கது. மற்றப்படி அனைத்துச் சிங்கள, ஆங்கிலச் செய்தி ஊடகங்களும் பேரினவாத வன்முறைக்கு வலிந்து நியாயங் கற்பித்தன. தொழிற் சங்கங்களும் இடதுசாரிகளிற் பலரும் பேரினவாத வன்முறையையும் அரசின் நேரடி மறைமுக ஊக்குவிப்பையும் கண்டித்து அறிக்கை விடுத்த போதும், அதுவரை இலங்கை வரலாறு கண்டிராத பேரழிவுமிக்க அந்த வெறியாட்டம் பற்றி அரசாங்கம் துளியும் வெட்கப்படவில்லை.

அதைவிடவும், 1958, 1977 வன்முறைகளின் போது வடக்கும் கிழக்கும் தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பான புகலிடங்களாயிருந்தன. 1983இல் நாட்டின் எப் பகுதியுமே பாதுகாப்பானதாக இருக்கவில்லை.

இத்தகைய ஒரு பின்னணி இந்தியா ஏலவே திட்டமிட்டிருந்த ஒரு மேலாதிக்க குறுக்கீட்டுக்கு மிக வாய்ப்பானது. சர்வதேச ஊடகங்களில் 1983 ஜூலை நிகழ்வுகள் முக்கியம் பெற்றமை தமிழரின் புலப்பெயர்விற்குச் சாதமாகியது ●

# கொள்ளையாலும், சூறையாடலாலும் திரட்டப்பட்ட பிரித்தானியாவின் ஆரம்ப மூலதனம்



*ஞா.சிறி மனோகரன்*

கார்ல் மார்க்ஸ் மூலதனத்திற்கு பின்வருமாறு வரைவிலக்கணம் வகுத்தார்: "மூலதனம் என்பது இறந்த உழைப்பு. அது இரத்தம் குடிக்கும் பிசாசு போல வாழும். அது உழைப்பை உறிஞ்சியே வாழ்கின்றது. எவ்வளவு அதிக உழைப்பை அது உறுஞ்சுகிறதோ அவ்வளவுக்கு அதிகம் அது வாழ்கின்றது" பிரித்தானியாவே உலகில் முதலாவதாக கைத்தொழில் நாடென்று பெருமையுடன் கூறிக்கொள்பவர்கள் அந்த நாடு அதன் அதன் ஆரம்ப மூலதனத்தை எவ்வாறு பெற்றது என்பதைப் பற்றி ஏதும் கூறுவதில்லை.

இங்கிலாந்தில் ஆரம்ப மூலதனத் திரட்சி *(Accumulation of Primitive Capital)* எவ்வாறு நிகழ்ந்தது? அக்காலத்தில் நிகழ்ந்த விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களாலும் கைத்தொழில் புரட்சியாலும் இங்கிலாந்தில் முதலாளியம் தொடங்கியதாகப் பாடநூல்கள் தெரிவிக்கின்றன. தொழிற் புரட்சியும் முதலாளிய எழுச்சியும் சமகாலத்தில் நிகழ்ந்தன. அவை தனியே விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளின் விளைவாக ஏற்படவில்லை. அத்தகைய கண்டுபிடிப்புக்கள் முந்திய நூற்றாண்டுகளிலும் இடம்பெற்றன. அக் கண்டுபிடிப்புகளைப் பயன்படுத்தப் போதிய மூலதனம் இல்லாததால் அவற்றால் எதுவுமே விளையவில்லை. இங்கிலாந்தில் ஆரம்ப மூலதனத் திரட்சி பலவழிகளில் இடம்பெற்றது. அடிப்படையில் அது அப்பட்டமான கொள்ளைகள் மூலம் பெறப்பட்டது.

றொபட் கிளைவ் இந்தியச் சிற்றரசர்களைத் தோற்கடித்த சமர் தொழிற் புரட்சிக்கு முன்னர் நிகழ்ந்தமை தற்செயலானதல்ல. அக்கால இந்திய மன்னர்களும் சிற்றரசர்களும் நவாப்புகளும் பெருஞ் செல்வர்களாயிருந்தனர். அச்செல்வம் விவசாயிகள் கைவினைஞர்கள் மற்றும் உழைக்கும் மக்களிடமிருந்து கட்டாய வசூல் மூலம் திரட்டப்பட்டதாகும். அவ்வரசர்கள் பொன்னையும் வெள்ளியையும் குவியல் குவியலாக உடைமை கொண்டிருந்தனர். றொபட் கிளைவும், வறன் ஹேஸ்ற்றிங்ஸும் தமது இராணுவ நடவடிக்கையின் பின்னர் செய்த முதல் வேலை பொன்னையும், வெள்ளியையும் அப்படியே இங்கிலாந்துக்கு அள்ளிச் சென்றமையே. இது அப்பட்டமான கொள்ளையாகும்.

அக் காலகட்டத்தில் ஸ்பானிய சாம்ராஜ்யப் பொருளாதாரத்துக்கு மெக்சிக்கோவிலும், பொலிவியாவிலும் இருந்த சுரங்கங்களிலிருந்து உள்நாட்டுத் தொழிலாளர்களாலும் ஆபிரிக்க அடிமைகளாலும் அகழப்பட்ட தங்கமும் வெள்ளியும் ஆதாரமாய் இருந்தன. 1660ம் ஆண்டளவில் உள்ள பதிவுகள் 18,600 தொன் வெள்ளியும் 200 தொன் தங்கமும் முத்திரையிடப்பட்டு ஸ்பெயினை வந்தடைந்தன என்பதனை வெளிப்படுத்துகின்றன. ஸ்பானியர்கள் தங்கத்தையும் வெள்ளியையும் பெரிய கப்பல்கள் மூலம் அற்லாந்திக் சமுத்திரம் வழியே கொண்டுச் சென்றனர்.

அக்கால ஆங்கிலேயக் கடற்கொள்ளையர் சிறந்த மாலுமிகளையும் சிறுகப்பல்களையும் உடைமை கொண்டிருந்தனர். ஆங்கிலேயர், கடலில் வரும் கப்பல்களை இடைமறித்துக் கொள்ளையிட்டவற்றை இங்கிலாந்துக்கு கொண்டு சென்றனர். கடல் நாய்கள் (Sea Dogs) என அழைக்கப்பட்ட ஹோக்கின்ஸ், டிறேக் போன்றவர்கள் கடற்கொள்ளையர்களில் பிரசித்தமானவர்கள். டிறேக்கின் பின்னைய கடற் பயணங்கள் ஹோக்கின்ஸின் முன்னைய சாதனைகளை முறியடித்தன. 1577ல் அவன் தென் அமெரிக்காவைச் சுற்றிக் கடல் பயணத்தை மேற்கொண்டான். சமாதானமான போட்டியென்ற முகமூடியை அவன் அணியவில்லை. ஸ்பானிய நகரங்களைக் கொள்ளையடித்து ஸ்பானியப் புதையல் அடங்கிய கப்பல்களையும் சூறையாடினான். அவன் வடக்கே கலிபோர்னியா வரை சென்று மேற்கே திரும்பி உலகத்தைச் சுற்றினான்.

டிறேக் 1580ல் தனது 33 மாதக் கடற்பயணத்தை வெற்றிகரமாக முடித்தான். அந்தப் பயணத்திற்கு நிதி வழங்கியவர்கள் கொடுத்த ஒவ்வொரு பவுணுக்கும் பிரதியாக 47 பவுண்களைப் பெற்றனர். மகாராணியார் மூன்று இலட்சம் பவுண்களை எடுத்துக் கொண்டார். உலகைச் சுற்றி வந்த டிறேக் தேசிய வீரனானான். இங்கிலாந்து மகாராணியார் "சேர்" பட்டம் வழங்கி டிறேக்கை கௌரவித்தார். பிற்காலத்தில் நம்மவர்கள் "சேர்" பட்டம் பெற்றமைக்காகப் பெருமைப்பட்டனர். கடற்கொள்ளைக்காரரும் "சேர்" பட்டம் பெற்றனர் என்பதை நம்மவர்கள் சொல்ல மாட்டார்கள்.

இலங்கையில் பிரித்தானிய ஆட்சியாளர்கள் கண்டியச் சிங்கள விவசாயிகளிடமிருந்து காணிகளைக் கைவசப்படுத்தியதும் ஒருவகையான கொள்ளையேயாகும். அந்த நிலங்கள் பெருந்தோட்டத்துறைக்குப் பயன்படுத்தப்பட்டன. 1856ம் ஆண்டு 10ம் இலக்கக் கோவில் காணிப் பதிவுக் கட்டளைச் சட்டம், 1878ம் ஆண்டின் தானிய வரிச் சட்டம், 1897ம் ஆண்டின் தரிசு நிலச் சட்டம் என்பனவற்றின் மூலம் சிங்கள விவசாயிகள் தமது காணிகளிலிருந்து விரட்டப்பட்டனர். சிங்கள விவசாயிகள் குறித்த காணிகளிற் பரம்பரை பரம்பரையாக விவசாயம் செய்து வந்தபோதும் பிரித்தானிய ஆட்சியாளர் குறித்த விவசாயிகள் சட்ட ஆவணங்கள் எதையும் சமர்ப்பிக்கவில்லை எனக் காரணங்காட்டிக் காணிகளைச் சுவீகரித்தனர். சுவீகரித்த காணிகளை பெருந்தோட்டத் துறைக்காக பிரித்தானியத் துரைமாருக்கு ஏக்கர் ஒன்று ஐம்பது சதப்படி "விற்று" சட்டரீதியான உறுதி எழுதிக் கொடுத்தார்கள். காணிகள் சட்டப்படி விற்கப்பட்டன என்ற தோற்றத்தைக் கொடுக்கவே அவற்றை 50 சத விலைக்கு "விற்றார்கள்". பிரித்தானியத் தோட்டத்துரைமார் பெருந்தோட்டச் செய்கைக்காகக் காணிக்கு கொடுத்த விலை அதுதான்.

காணிகளை இழந்த சிங்கள விவசாயிகளுக்குப் பெருந்தோட்டத் துறையில் வேலை கொடுத்தால் அவர்கள் "விசுவாசமாய்" இருக்கமாட்டார்கள் என்பதை மனதிற் பதித்த பிரித்தானிய ஆட்சியாளர் தமது கொலனியாயிருந்த இந்தியாவிலிருந்து தொழிலாளர்களைக் கொண்டுவர ஏற்பாடு செய்தனர். ஹெறிட்டேஜ் ஒவ் பிரிட்டன் (பிரித்தானியாவின் பாரம்பரியம்) என்ற நூல், ஏழாண்டு யுத்தத்தின் (1756 முதல் 1763 வரை நடைபெற்ற போர்) வெற்றியானது பிரித்தானியா சமுத்திரங்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க உதவியதுடன் தொழிற்புரட்சிக்கும் உந்துதலைக் கொடுத்ததாகக் கூறுகிறது. பிரித்தானியாவின் புதிய செல்வமானது பாரிய அளவில் யுத்தவெற்றியால் உருவாக்கப்பட்டது. இராணுவ கட்டளைத் தளபதிகளான ஜேம்ஸ் வூல்ப், றொபேட் கிளைவ் போன்றோரின் போர்த் திறமையால் கனடாவும் இந்தியாவும் பிரித்தானியாவால் கைப்பற்றப்பட்டன. அந்த நாடுகளின் செல்வங்கள் தொழிற்புரட்சி மூலம் உருவாகிய தொழிற்சாலைகளில் முதலிடப்பட்டன.

கடல்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்ததால், பிரித்தானியா உலகின் தொழிற் சாலையானது. கொள்ளையிடப்பட்ட செல்வமே அதன் ஆரம்ப மூலதனமாகியது. பிரித்தானியக் கப்பல்களில் ஏற்றி இறக்கப்பட்ட பண்டப் பட்டியல்களில் 18ம் நூற்றாண்டில் வருடாந்தம் 85,000 அடிமைகள் கப்பல்களில் கொண்டு செல்லப்பட்டதாக சொல்லப்படுகிறது. 1771ம் ஆண்டிற்கான பதிவுகளின்படி, லண்டனிலிருந்து அடிமைகளை ஏற்றிய 58 கப்பல்கள் புறப்பட்டன. பிறிஸ்ற்றலில் இருந்து 25 கப்பல்களும் லிவர்பூலிலிருந்து 107 கப்பல்களும் புறப்படடன. இந்தக் கப்பல்களில் சாடீன் மீன்களைத் தகரப் பேணிகளில் அடைப்பது போல நெருக்காக அடிமைகள் அடைக்கப்பட்டர். எழும்பி இருப்பதற்கும் இடமேதும் இல்லாமல், 18 அங்குல அகலத் தரையில் அடிமைகள் படுக்கவைக்கப்பட்டனர். சில சமயங்களில் அமெரிக்காவின் தோட்டத்துறைக்கு அத்லாந்திக் மூலம் பயணம் செய்த அடிமைகளில் அரைவாசிப்பேரே இறுதியில் சென்றடைந்தனர் என்பது கவனிக்கத்தக்கது. அடிமைகளைக் கொடுத்து அதற்கு பதிலாக, புகையிலை, சீனி, பருத்தி என்பவற்றைப் பெற்றதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எந்த ஒரு முதலாளிய நாட்டினது பொருளியல் வரலாறும் நேர்மையாக ஆராயப்படுமாயின் அந்த நாட்டின் ஆரம்ப மூலதனத் திரட்டல் நேரடியான கொள்ளையடிப்பாலும் சூறையாடல்களாலும் பெறப்பட்டதைக் காணலாம். இன்றும் அச்சூறையாடல் பல்வேறு வடிவங்களில் தொடர்கிறது ●

# காவியிருளில் மறைந்திருக்கும் மூலதனத்தின் சர்வாதிகாரம்

ஆளும் வர்க்க ஊடகங்களால், ஒரு மசாலாக் கதாநாயகனைப் போல இந்தியா முழுவதும் மேடையேற்றப்பட்ட மோடி என்ற முப்பரிமாண ஹோலோகிராம், தனது பேராற்றல் குறித்துத் தானே கொண்ட மயக்கத்தினால், இந்தத் தேசத்தைக் காக்க வந்த மீட்பனாகத் தன்னைக் கருதிக்கொண்டு உணர்ச்சி வயப்பட்டுக் கண்ணீர் விடுகிறது. ஆனால், இந்துக் கடவுளர்களைப் போல மோடிக்கு முதுகுப் பக்கம் கை முளைத்தால் மட்டுமே, இந்தியப் பொருளாதாரத்தை தூக்கி நிறுத்தும் அற்புதத்தை நிகழ்த்த முடியும் என்று முதலாளித்துவப் பொருளாதார வல்லுநர்களே எள்ளி நகையாடுகின்றனர்.

இந்தியப் பொருளாதாரத்தின் இன்றைய நிலை என்ன? உலகப் பொருளதார மந்தத்தின் காரணமாக ஏற்றுமதி வாய்ப்புகள் சுருங்கிவிட்டதாலும், பணக்கார வர்க்கத்தையும், மேல்தட்டு நடுத்தர வர்க்கத்தையும் மையப்படுத்தி உருவாக்கப்பட்டு உள்நாட்டு நுகர்பொருள் சந்தை விரிவடைய வழியின்றித் தேங்கி நிற்பதாலும், தொழில் உற்பத்தில் துறைகள் அனைத்தும் தேங்கிக்கிடக்கின்றன. முதலாளிகளுக்கும் நுகர்வோருக்கும் குறைந்த வட்டியில் கடனை வாரி வழங்குவதற்குப் பண வீக்கம் தடையாக இருக்கிறது. வட்டி வீதத்தைக் குறைத்தால், அது பணவீக்கத்தை அதிகரிப்பது மட்டுமன்றி, அந்நிய நிதி மூலதனத்தின் வெளியேற்றத்துக்கும் வழிவகுக்கும்.

முதலாளி வர்க்கம் விரும்பும் வரிச்சலுகைகளையும் ஊக்கத் தொகைகளையும் வாரி வழங்க இயலாமல் பட்ஜெட் பற்றாக்குறை மோடியை தடுக்கும். கிரெடிட் சூயிஸ் என்ற முதலீட்டு வங்கியின் ஆகஸ்டு 2013 அறிக்கையின்டி, அரசுடைமை வங்கிகளின் வராக் கடன் 6.3 இலட்சம் கோடி ரூபாய், கடனாளிகளில் மோடியின் புரவலர்களான அதானி, அம்பானி, எஸ்ஸார், வேதாந்தா உள்ளிட்ட தரகு முதலாளிகளும் அடக்கம். தங்களுடைய கடனில் குறைந்தபட்சம் 3 இலட்சம் கோடியைத் தள்ளுபடி செய்யுமாறு கோருகிறார்கள் தரகு முதலாளிகள். அவர்களது கோரிக்கைகளை நிறைவேற்ற அந்தச் சுமையனைத்தையும் மக்களின் தலை மீது இறக்குவார் மோடி. "சப் கா விகாஸ்" (அனைவருக்கும் முன்னேற்றம்) என்பன போன்ற மோடியின் பஞ்ச் டயலாக்குகள் விரைவிலேயே நகைச்சுவைத் துணுக்குகளாகும்.

மோடிக்கும் பன்னாட்டு நிறுவனங்கள், தரகு முதலாளிகளுக்குமான புரிந்துணர்வு ஒப்பந்தம், மக்கள் நலத் திட்டங்கள் அனைத்தையும் ஒழித்துக்கட்டக் கோருகிறது. காங்கிரசு அரசால் கொண்டுவரப்பட்ட நூறு நாள் வேலைத்திட்டம் உள்ளிட்ட நலத்திட்டங்களை ரத்து செய்வது, தரகு முதலாளிகளின் நில ஆக்கிரமிப்பை எளிதாக்கும் வகையில் நிலம் கையகப்படுத்தும் சட்டத்தை திருத்துவது, சுரங்க நிறுவனங்கள் காடுகளை விழுங்குவதற்குத் தடையாக இருக்கும் சுற்றுச்சூழல் சட்டங்களை அகற்றிக் கனிமவளக் கொள்ளையைத் துரிதப்படுத்துவது, பழங்குடியினர் உதரிமைப் பாதுகாப்பு மற்றும் தொழிலாளர் நலச் சட்டங்களை ரத்து செய்வது, அரசுத்துறை வங்கி மற்றும் காப்பீட்டுத் துறைகளைத் தனியார்மயமாக்குவது என இந்தப் பட்டியில் நீள்கிறது. கடுமையான மக்கள் போராட்டங்களைச் சந்திக்காமல் இவற்றை மோடியால் நிறைவேற்றித்தர முடியாது.

> *தங்களுக்கு மானியம் வழங்குவது, பொதுச்சொத்துக்களைக் கொள்ளையிட விழியமைத்துக் கொடுப்பது, சந்தைகளை உருவாக்கிக் கொடுப்பது போன்ற பணிகளை செய்யும் பணிப்பெண்ணாக அரசு இருக்கவேண்டுமேயன்றி, தங்களை நெறிப்படுத்துகின்ற அதிகாரம்கூட அரசுக்கு இருக்கக்கூடாது என்பது தரகு முதலாளி வர்க்கத்தின் கோரிக்கைகளில் மிகவும் முக்கியமானது.*

தங்களுக்கு மானியம் வழங்குவது, பொதுச்சொத்துக்களைக் கொள்ளையிட வழியமைத்துக்கொடுப்பது, சந்தைகளை உருவாக்கிக் கொடுப்பது போன்ற பணிகளை செய்யும் பணிப்பெண்ணாக அரசு இருக்கவேண்டுமேயன்றி, தங்களை நெறிப்படுத்துகின்ற அதிகாரம் கூட அரசுக்கு இருக்கக்கூடாது என்பது தரகு முதலாளி வர்க்கத்தின் கோரிக்கைகளில் மிகவும் முக்கியமானது.

புதிய தாராளவாதத்தின் தலையாய இந்தக் கொள்கையை அம்பலப்படுத்துவதில், மோடி ஒரு புதிய பரிமாணத்தை உருவாக்கியிருக்கிறார். குஜராத் முதல்வராக இருந்தபோது உள்துறை, தொழில்துறை, மின்சாரம், பெட்ரோல், கெமிக்கல், துறைமுகம், சுரங்கம், கனிமவளங்கள் ஆகிய துறைகள் அனைத்தையும் தன் வசமே வைத்திருந்தார். இவை அனைத்தும் அதானி, அம்பானி, டாடா, எஸ்ஸார் போன்ற நிறுவனங்களின் தொழில்களோடு தொடர்புடைய துறைகள் என்பது குறிப்பிடத்தக்கது. இத் துறைகளில் முதலாளிகளைக் கட்டுப்படுத்தும் விதிமுறைகள் அனைத்தையும் காலில் போட்டு மிதித்துவிட்டு, இரண்டே நாட்களில் எல்லா தொழில்களுக்கும் உரிமம் வழங்கினார் மோடி என்பதுதான் டாடா உள்ளிட்ட தரகு முதலாளிகள் அனைவரும் மோடியைப் புகழ்வதற்கான காரணம்.

சுற்றுச் சூழல், தொழிலாளர் நலம் உள்ளிட்ட பல்வேறு துறைகளும் அவற்றின் சட்டதிட்டங்களும் காகிதத்தில் இன்னும் உயிரோடு இருக்கும்போதே, அவற்றை முடமாக்கி, முதலாளிகளின் வரைமுறையற்ற கொள்ளைக்கு வழி செய்து கொடுப்பதுதான் மோடியின் ஒற்றைச் சாளர நிர்வாக முறை. "குறைவான அரசு, அதிகபட்ச நிர்வாகம்" என்ற மோடியின் முழக்கத்துக்குப் பொருள், அமைச்சர்களின் எண்ணிக்கையைக் குறைப்பது என்பது மட்டுமல்ல, மாறாக, முதலாளிகளை மேற்பார்வையிடுவதற்கும் நெறிப்படுத்தவதற்கும் அரசு கொண்டிருக்கும் அதிகாரங்கள் அனைத்தையும் வெட்டிக் குறைப்பது என்பதுதான்.

திறமை, உறுதி, துரிதமான முடிவெடுக்கும் திறன் என்ற பெயர்களில் ஆளும் வர்க்கத்தால் சந்தைப்படுத்தப்பட்டு, அறிவிழந்த காரியவாத நடுத்தர வர்க்கத்தினரால் மெச்சிக் கொள்ளப்பட்ட மோடியின் ஆட்சி பல்லிளிப்பதற்கு அதிக காலம் தேவைப்படாது. மோடியின் தோல்விகளும் முறைகேடுகளும் அம்பலமாகத் தொடங்கியதும், ஊடகவியலாளர்கள் அமைச்சர்களின் திறமையின்மையைப் பற்றி முதலில் அங்கலாய்ப்பார்கள். பின்னர் மோடியின் எதேச்சதிகார நிர்வாக முறையை "ஆராய்ந்து கண்டுபிடித்து" ஆய்வுக் கட்டுரை எழுதுவார்கள்.

மறுபக்கம், நாட்டின் கவனத்தை ஆர்.எஸ்.எஸ். கும்பல் திட்டமிட்டே திசை திருப்பும். காஷ்மீரின் சிறப்பு அந்தஸ்தை நீக்குதல், ராமன் கோயில், வங்க தேச முஸ்லீம்கள் ஊடுருவல், பொது சிவில் சட்டம் போன்ற பிரச்சினைகளைத் கிளறுவதன் மூலம் கிளப்பப்படும் காவிப்புழுதி, மோடியின் மறுகாலனியாக்க நடவடிக்கைகளை மறைக்க பார்ப்பன பாசிசக் கும்பலுக்கப் பயன்படும். ஆயினும், பார்ப்பன பாசிசத்தின் வர்க்க அரசியல் உள்ளடகம், அதாவது, திறமையான நிர்வாகம், வளர்ச்சி என்ற மோடியின் முழக்கங்களுக்கும், இந்துத்துவக் கொள்கைக்கும் இடையிலான தொப்பூள் கொடி உறவு முன் எப்போதும் இல்லாத அளவுக்கு அம்பலமாகும் ●

நன்றி-புதிய ஜனநாயகம்

# உக்ரேனில் விழுந்த மலேசிய விமானமும் எழுகின்ற கேள்விகளும்

-உலகோன்-



விமான விபத்துக்கள் வழமையானவையல்ல. குறிப்பாக, ஒரே நிறுவனத்தின் விமானங்கள் அடுத்தடுத்து விபத்துக்குள்ளாகும் போது அவை மேலும் முக்கியமாகின்றன. அதிலும் ஒரு விமானம் சுட்டு வீழ்த்தப்படும்போது அது உலகளாவிய ரீதியில் செய்தியாகிறது.

காசா மீதான இஸ்ரேலியக் கடுந் தாக்குதல் தனது இரண்டாவது வாரத்தைத் தாண்டி, அந்த அட்டூழியங்கள் பற்றி மேலும் மேலும் ஆதாரங்கள் வெளிவந்து உலகெங்கும் பரந்தளவிலான சீற்றம் வெளிப்பட்ட நிலையில் உக்ரேன் வான்பரப்பில் பறந்துகொண்டிருந்த ஒரு மலேசிய பயணிகள் ஜெட் விமானம் (MH 17) ஏவுகணைத் தாக்குதலால் வீழ்ந்ததாகக் கூறப்படுகிறது.

விபத்துக்குச் சிலநாட்கள் முன்பு கிழக்கு உக்ரேனிய நகரங்களான டொனெட்ஸ்க்கையும் லூஹன்ஸ்க்கையும் தன்வசமாக்க ரஷ்ய சார்பு போராளிகளுக்கு எதிராக மேற்குலக ஆதரவான உக்ரேனிய அரச படைகளின் தாக்குதலுக்கு இடையே, ஒரு ரஷ்ய எல்லையோர நகரத்தின் மீது உக்ரேன் குண்டுவீசியதற்கு ரஷ்ய அதிகாரிகள் பதில் நடவடிக்கைக்குச் சூளுரைத்த நிலையில் பதற்றங்கள் அதிகரித்திருந்தன.

இவ் விபத்தை இவ்விரண்டு நிகழ்வுகளின் பின்ணணியில் நோக்க வேண்டும். புதிய உலக ஒழுங்கின் புதிய போர்க்களமான உக்ரேன் மாறியுள்ள சூழலில் உக்ரேனிய வான்பரப்பில் இவ் விபத்து நடந்தமை புதிய கேள்விகளை எழுப்புகிறது. உக்ரேனிய ஜனாதிபதி விமான விபத்தை, 9/11 பயங்கரவாதத் தாக்குதலோடு ஒப்பிட்டார். 9/11 எவ்வாறு உலகளாவிய இராணுவமயமாக்கலுக்குப் பயன்பட்டதோ அதே போல இதையும் பயன்படுத்த மேற்குலகு திட்டமிடுவதையே இது சுட்டுகிறது. விபத்திற்கான காரணமோ அதற்குப் பொறுப்பானவர்களோ அவர்களின் நோக்கங்களோ இன்னும் கண்டறியப்படவில்லை. கிடைக்கத் தொடங்கியுள்ள உறுதியான தகவல்கள், ரஷ்ய ஆதரவுப் பிரிவினைவாதிகளை அல்லாது உக்ரேனிய அரசாங்கத்தையே குற்றத்திற்குள் சிக்க வைக்கின்றன.

இருந்த போதினும், ரஷ்யாவிற்கு எதிரான தீவிர இராஜதந்திர, பொருளாதாரத் தாக்குதலை நியாயப்படுத்துவதற்கும், அணு ஆயுதமேந்திய நேட்டோ சக்திகளுக்கும் ரஷ்யாவிற்கும் இடையே முன்னர் இருந்திராத அளவில் யுத்த சாத்தியக்கூறு நிலவுகிற நிலையில், கிழக்கு-ஐரோப்பாவை மேலும் இராணுவ ஆயத்தப்படுத்தலுக்கான போலிக்காரணத்தை உருவாக்கவும், மேற்கத்திய ஊடகங்களிலும் மேற்கத்திய அரசியல் வட்டாரங்களிலும் காதைப் பிளக்கும் பலமான பிரசாரம் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. உக்ரேனில் நடந்த வலதுசாரி ஆட்சிக் கவிழ்ப்பைத் தொடர்ந்து ரஷ்யாவுடன் கிரிமியா இணைக்கப்பட்டதை ஒரு ஐரோப்பிய "9/11" சம்பவம் போன்று மேற்குலக ஊடகங்கள் புனைந்ததை இங்கு நினைவுட்டல் தகும்.

விமானம் சுடப்பட்டதற்கு ரஷ்ய ஆதரவு கிழக்கு உக்ரேனிய பிரிவினைவாதிகளையும், ரஷ்யாவையும் குற்றஞ் சாட்டி ஒபாமா தனது பிரச்சாரத்தைத் தொடங்கினார். உண்மையில் இப் பிரசாரத்திறகு எந்தவொரு அடித்தளமும் இல்லை என்பதையும் அது அமெரிக்காவை ரஷ்யாவுடன் ஒரு பயங்கர மோதலுக்கு இட்டுச் செல்கிறது என்பதையும் அவரது கருத்துக்களே கோடிட்டுக் காட்டின. இவை புதிய உலக ஒழுங்கின் புதிய அத்தியாயத்துக்கான முன்னுரையாக அமைவதை அவதானிக்க வேண்டும். உக்ரேனை ஒரு புதிய ஆப்கானிஸ்தானாக மாற்றவும் ரஷ்யாவுடன் ஒரு அணுஆயுத உலக யுத்தமாக மாறக்கூடிய ஒரு இராணுவ மோதலைத் தூண்டிவிடவும் மேற்குலக ஊடகங்கள் முயல்கின்றன.

> "எவ் விதத்திற் பார்த்தாலும், விபத்தாற் பாதிக்கப்பட்டவர்களைக் குறித்து மேற்கத்திய அரசாங்கங்களுக்கோ ஊடகங்களுக்கோ எந்தவித அக்கறையும் கிடையாது. அந்தப் பேரிடர் யுத்தப் பிரச்சாரத்தைத் தீவிரப்படுத்துவதற்கு உபயோகமான ஒரு அடித்தளம் என்றவாறே நோக்கப்படுகிறது."

சுவிற்சர்லாந்தை மையமாக கொண்ட சர்வதேச கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்கமைக்கும் வங்கியானது, மத்திய வங்கிகளதும் நிதியக் கண்காணிப்பு அமைப்புகளினதும் தற்போதைய கொள்கைகள், 2008ஐக் காட்டிலும் கடுமையான மற்றொரு பெரிய பொருளாதார நெருக்கடிக்கு இட்டுச் செல்லக்கூடுமென எச்சரித்த பின்ணணியில் இவை இடம்பெற்றுள்ளன. ரஷ்ய ஆதரவுக் கிளர்ச்சியாளர்களே விமானத்தைச் சுட்டு வீழ்த்தினர் என்பதற்கு எவ்வித ஆதரமும் அற்ற அதேவேளை, மேற்குலக ஆதரவுடைய உக்ரேனிய அரசுப் படைகளே அதைச் செய்தன என்பதற்கு வலுவான ஆதாரங்கள் உள்ளன.

உலகக் கிண்ணப் பேட்டிக்குப் பின் பிரேசிலில் நடந்த ஒரு சர்வதேச உச்சி மாநாட்டிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்த ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புட்டினின் விமானப் பாதையை MH 17 குறுகிய நேரத்திற்கு முன்னர்தான் கடந்தது என்பதும், MH 17ஐ அழித்த ஏவகணைத் தாக்குதல் புட்டினைக் குறிவைத்து நடந்திருக்கலாம் என்று வெளியான ரஷ்ய ஊடக செய்திகள் குறிப்பாக முக்கியம் பெறுகின்றன.

இவையனைத்தினதும் பின்னணியில் பின்வரும் விடயங்களைக் கருத்திற் கொள்ள வேண்டும். விமானம் உக்ரேனிய வான்பரப்பில் நுழைந்தவுடன் வழமையாகப் பறக்கிற உயரத்தினும் தாழ்வாகப் பறக்கும்படி உக்ரேனிய வான் கட்டுப்பாட்டு அதிகாரிகள் ஆணையிட்தாக மலேசிய விமான சேவை அறிவித்துள்ளது. இத்தகைய உத்தரவு ஏன் பிறப்பிக்கப்பட்டடது என்பதற்கு இதுவரை பதில் வழங்கப்படவில்லை.

விமானத்தின் பயணப்பாதையும் மாற்றப்பட்டுள்ளது. வழமையில் இவ்வாறான மாற்றங்களை வான் கட்டுப்பாட்டு அதிகாரம் தான் அறிவிக்கும். ஆனால் தாங்கள் பயணப்பாதையை மாற்றும் உத்தரவை வழங்கவில்லை என அது கூறியுள்ளது. அப்படியாயின் பயணப்பாதையை மாற்றச் சொன்னது யார்? வழமையான பயணப்பாதையில் அதே நாள் 55 விமானங்கள் பறந்துள்ள நிலையில் இவ் விமானத்துக்கு மட்டும் பயணப்பாதையை மாற்றியது ஏன்?

விமானம் பறந்த அதேநேரம் அதே வான்பரப்பில் உக்ரேனிய போர்விமானமும் பறந்ததை ஸ்பானிய விமானக் கட்டுப்பாட்டு மையம் ராடர் படங்களுடன் உறுதிப்படுத்தியுள்ளது. அவ்வாறு நிகழக் காரணம் என்ன? உக்ரேனிய போர்விமானம் MH 17ஐ வழிநடாத்தியதா? இல்லாவிடின், அதே வான்பரப்பில் MH 17க்கு அண்மையாகப் போர்விமானம் பறக்கக் காரணம் என்ன?


விமானம் சுட்டு வீழ்த்தப்பட்ட இடத்துக்கு அருகில் உக்ரேனிய அரசினுடைய கட்டுப்பாட்டுப் பகுதியில் விமான எதிர்ப்புப் பீரங்கிகள் நிறுத்தப்பட்டிருந்தமைக்கான ஆதாரங்களை ரஷ்யா வெளியிட்டுள்ளது. அவை 30,000 அடி உயரத்தில் பறக்கும் விமானங்களை இலக்கு வைக்கக்கூடிய பக் (Buk) ஏவுகணைகளாகும். பக் ஏவகணைகளாலேயே விமானம் சுட்டுவீழ்த்தப்பட்டதாகக் கூறப்பட்ட நிலையில் இத்தகவல் ஏன் பொதுவெளிக்கு வரவில்லை?

அதேவேளை, விபத்துக்குள்ளான விமானத்தில் அவுஸ்திரேலியாவில் நடைபெறும் எயிட்ஸ் மாநாட்டில் கலந்து கொள்ளும் நோக்கில் விமானத்தில் புறப்பட்ட ஆறு நிபுணர்கள் பலியாகியிருந்தார்கள். இவர்கள் நீண்ட காலமாக ஆய்விற் செயற்படுபவர்கள். இவர்களில் குறிப்பிடத் தக்கவரான Dr. Joep Lange (டொக்டர் ஜோயேப் லங்) எயிட்ஸ் நோயின் உருவாக்கமும் பரவலும் பற்றிய முக்கியமான தகவல்களைக் கொண்ட ஆய்வுக்கட்டுரைகளை எழுதியவர். அவ்வ வெளியுலகுக்குத் தெரிவிக்கலாகாது எனப் பல பல்தேசிய மருத்துவக் கம்பெனிகள் அவரை மிரட்டியதாகவும் செய்திகள் வெளியாகியுள்ள நிலையில், அவரைக் கொல்லும் நோக்குடன் இவ்விபத்து நிகழ்ந்ததா எனவும் வினாக்கள் எழுப்பப்படுகின்றன.

எவ் விதத்திற் பார்த்தாலும், விபத்தாற் பாதிக்கப்பட்டவர்களைக் குறித்து மேற்கத்திய அரசாங்கங்களுக்கோ ஊடகங்களுக்கோ எந்தவித அக்கறையும் கிடையாது. அந்தப் பேரிடர் யுத்தப் பிரச்சாரத்தைத் தீவிரப்படுத்துவதற்கு உபயோகமான ஒரு அடித்தளம் என்றவாறே நோக்கப்படுகிறது.


இவ் விபத்துக்கு ரஷ்யா மீது குற்றம் சாட்டும் அமெரிக்கா உலகெங்கும் நடப்பவற்றைச் செயற்கைக்கோள்கள் மூலம் கண்காணிக்கிறது. ஆனால் இதுவரை ரஷ்யாவின் பங்கு தொடர்பான எந்த ஆதாரத்தையும் வெளியிடாது வெறுங் காற்றில் கத்திவீசும் நோக்கங்கள் கவனத்துக்குரியன ●

## தோழர்களுக்கு செவ்வஞ்சலி




இலங்கை கம்யூனிஸ்ட் இயக்கத்தின் வடபுலத்து முக்கிய தோழர்களில் ஒருவரான தோழர் க. தங்கவடிவேல் தனது 83வது வயதில் இயற்கை எய்தினார். அவர் 1966ம் ஆண்டு ஒக்டோபர் 21ன் எழுச்சியான "சாதி அமைப்பு தகரட்டும் சமத்துவ நீதி ஓங்கட்டும்" எனும் செம்பதாகை உருவாக்கிய தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் முன்னணி தோழர்களில் ஒருவராக இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. அவரது மறைவுக்கு புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சி தனது செவ் அஞ்சலியை செலுத்துகின்றது.

வடபுலம் சாந்தை பண்டத்தரிப்பின் தோழர் இராமன் திரவியம் தனது 70வது வயதில் இயற்கை எய்தினார். பின்தங்கிய சாந்தை கிராமத்தின் முன்னோக்கியப் பயணத்திற்கு தன் னால் முடிந்தவரை மக்கள் சேவை புரிந்தவர் தோழர் திரவியம். 1978ம் ஆண்டிலிருந்து பு.ஜ.மா.லெ.கட்சியின் உறுதியான ஆதரவாளனாக செயல்பட்டு வந்தவர். அவர் சிறந்த நாடக நடிகராகவும் இருந்து மக்கள் முன்னேற்றத்திற்கு முன்னின்று பங்காற்றினார். அவரது மறைவுக்கு பு.ஜ.மா.லெ.கட்சி தனது செவ் அஞ்சலியை செலுத்துகின்றது.



# கோவில்கள்-திருவிழாக்கள்-சாதிகள்

வடபுலத்தான்



கொடிய முப்பது வருடகால யுத்தம் முடிவுற்று ஐந்து வருடங்கள் கடந்துவிட்டன. யுத்தம் விளைவித்த கொடுமைகளிலிருந்து வடக்கு மக்கள் மீளவில்லை. உயிரிழந்தோர், வீடுவாசல்களையும் தொழில் ஆதாரங்களை இழந்தவர்கள் லட்சக்கணக்கானவர்கள். இவற்றுக்கு அரசாங்கமோ பணவளம் மிக்கவர்களோ பெருமளவில் உதவுவதாக இல்லை. ஆங்காங்கே மனித நேயம் மிக்க உள்நாட்டவர்களும் புலம்பெயர்ந்தோரும் மட்டுமே தம்மாலானதை உதவி வருகிறார்கள். இவை பற்றித் தமிழர் தரப்புக் கட்சிகளிடம் எவ்வித வேலைத்திட்டமும் கிடையாது. வீழ்ந்து கிடக்கும் மக்களுக்கு கைகொடுத்து உதவ உள்நாட்டிலும் சரி, புலம் பெயர்ந்த நாடுகளிலும் சரி, திட்டமிட்டுச் செயலாற்றக்கூடிய பொது அமைப்புக்களோ தனிநபர்களோ போதியளவில் இல்லாத நிலைதான் பொதுவாகக் காணப்படுகிறது. எதுவும் இனமானத்திற்கு உட்பட்டதேயாகும்.

இத்தகைய சூழலில் கடந்த ஐந்து வருடங்களில் வடக்கு கிழக்கில் குறிப்பாக வடக்கில் இந்து சைவ சமயக் கோவில்கள் பரந்த அளவில் கட்டி எழுப்பப்பட்டு வந்துள்ளன. சிறிய நடுத்தர பெரிய கோவில்கள் பெருமளவில் எழுந்து நிற்கின்றன. அவற்றைக் கட்டுவதில் பல்லாயிரம் லட்சம் கோடிகள் என செலவு செய்யப்பட்டுள்ளன. இவற்றுக்கான பெருந்தொகைப் பணம் உள்நாட்டிலும் புலம்பெயர்ந்த நாடுகளிலும் உள்ள நம்மவர்களால் தாராளமாக அனுப்பப்பட்டுள்ளது. தொடர்ந்தும் அனுப்பப்படுகிறது. அப் பணத்தைக் கொண்டு கோவில்கள் பெருப்பிக்கப்பட்டுக் கோபுரங்கள், தேர் முட்டிகள், தேர்கள், சுற்று மதில்கள், வர்ணப் பூச்சுகள், மணிக் கோபுரங்கள் என விஸ்தாரமாக கோவில் அபிவிருத்திகள் செய்யப்படுகின்றன. அதன் பின் திருவிழாக்கள் கோலாகலமான ஆரம்பரங்களுடன் இடம்பெறுகின்றன. மேளக் கச்சேரிகள், இன்னிசை, சமயச் சொற்பொழிவுகள் என திருவிழாக்கள் ஒரே அமர்களமாகவே நடைபெறுகின்றன. இவற்றுக்கெனத் திருவிழா செய்வோர் கற்றையாகக் காசைச் செலவிடுகின்றனர்.

இத் திருவிழாக்களில் இடம்பெறும் ஒரு பெரிய அநியாயம், ஒலி பெருக்கிகளின் பெரும் ஓசை எழுப்பலாகும். கோவில் எல்லைக்கு அப்பால் கி.மீ. கணக்கில் நாலாபுறமும் குறிப்பாகப் பிரதான வீதிகளில் எல்லாம் இவ் ஒலி பெருக்கிகளின் அலறல்கள் இருக்கும். அதிகாலை நான்கு ஐந்து மணிக்கு ஆரம்பமாகும் இவ் ஒலிபெருக்கிகளின் அலறல் இரவு பத்து பதினொரு மணிவரை சில திருவிழாக்களில் நடுநிசிக்கு மேலும் தொடரும். இதில் ஒவ்வொரு திருவிழா உபயகாரரும் போட்டி போட்டுத் தமது பெயர் அந்தஸ்தை வெளிக்காட்டிக்கொள்வர். இதிலும் தமிழர் வாழ்வின் பிரதான போக்கான சுயநலம் என்பது பணம், அந்தஸ்து, பவிசு காட்டல் என்பனவற்றின் ஊடாக மேலெழுந்து நிற்கும். இவ் அமளிதுமளியால் ஒலி பெருக்கி அலறல்களால் கிராமங்களினதும் நகரங்களினதும் சூழல் பாதிக்கப்படுவது பற்றியோ மாணவர்கள், நோயாளர், சின்னஞ் சிறுவர்கள் பெரும் பாதிப்படைவது பற்றியோ கோவில் நிர்வாகங்களும் திருவிழா உபயகாரர்களும் கவலைப்படுவதில்லை. அப்படிக் கவலைப்படுவதற்குச் சமூக அக்கறையோ அன்றி சமூகசார்புச் சிந்தனையோ இருக்க வேண்டும் அல்லவா! அவை எதுவும் தமிழர்களிடம் குறிப்பாகத் தமிழ்த் தேசியம் பேசுவோரிடம் என்றுமே இருந்ததில்லை.

இக் கோவில்கள் திருவிழாக்கள் யாவும் இப்போது முற்றிலும் வணிகமயமாகியுள்ளன. கடவுள் நம்பிக்கை என்பது ஒவ்வொருவருக்கும் உள்ள தனி உரிமையாகும். ஆனால் இன்றைய சூழலில் மக்களின் அத்தகைய கடவுள் நம்பிக்கையைக் கோவில் நிர்வாகிகள், அறங்காவலர்கள், தர்மகர்த்தாக்கள் என்போர் தமக்கான பெரும் வருவாய்க்குரிய இடமாக்கி வைத்துள்ளார்கள். அத்துடன் மக்களின் நம்பிக்கையை மூடநம்பிக்கையாக மாற்றி அதன் மூலம் பெரும் சம்பாத்தியம் பெற்று வருகிறார்கள். சிறிய கோவிலில் திருநீறு பூசி நூல் கட்டுவது தொடக்கம் பெருங் கோவில்களில் நூல் கயிறு கட்டி அதனையும் பல நாட்கள் வரை பாதுகாத்து எத்தனையோ வாரங்கள் கோவிலுக்கு வருமாறு மக்கள் பணிக்கப்படுகிறார்கள். குறிப்பாக வயது வந்த இளம் பெண்கள் இந்த நம்பிக்கையில் மூழ்க வைக்கப்பட்டுள்ளனர். தலைநகரில் பெண்கள் பாற்குடப் பவனியில் வரும் நம்பிக்கை வளர்க்கப்படுகிறது. ஒரு பாற்குடத்திற்கும் அவர்கள் அணியும் ஆடைக்கும் ரூபா ஐயாயிரத்திற்கு மேல் கோவில் நிர்வாகத்தால் அறவிடப்படுகிறது. இது போன்ற பலவழிமுறைகளில் கோவில்கள் பணம் சம்பாதிக்கின்றன.

மேலும் வடபுலத்தில் இக் கோவில் திருவிழாக்கள் மூலம், ஊர், சாதி, குடும்ப தனிநபர் அபிமானங்கள் மேலோங்க வைக்கப்படுகின்றன. இக் குறுகிய நிலைப்பாடுகள் புலம் பெயர்ந்த நாடுகளில் உள்ளவர்கள் விஸ்தரிக்கப்படுகின்றன. அங்கிருந்து மேற்கூறிய குறுகிய சிந்தனை அடிப்படையில் டொலர்களும் யூரோக்களும் வந்து குவிகின்றன.

அறுபதுகளிலே ஒரே கோவிலில் எல்லாச் சாதிகளும் சமத்துவமாக நிற்பதற்கு வெகுஜனப் போராட்டம் நடத்தப்பட்டு அந்த ஜனநாயக உரிமை வென்றெடுக்கப்பட்டது. ஆனால் இன்று ஒவ்வொரு சாதியும் தனக்கான கோவில்களைப் பெருப்பிக்கின்றனர் அல்லது நாட்டார் தெய்வ வழிபாட்டிடங்களை வைதீகக் கோவில்களாக மாற்றுகிறார்கள். இவற்றில் பிராமணிய ஆகம விதிகளுடன் சமஸ்கிருத ஓதல்களும் இடம்பெறுகின்றன. இவை அனைத்திற்கும் மக்களின் கடவுள் நம்பிக்கை மூலதனமாக்கப்படுகிறது. திருவிழாக்களும் கோவில்களும் சாதிப் பெயர்களில் இடம்பெறுகின்றன. இது இந்த ஊரில் பொதுக் கோவில் என்பதற்குப் பதிலாக இது இன்ன ஊரின் இன்ன சாதியினரின் கோவில் எனச் சாதிப் பெயருடனும் சாதிப் பெருமையுடனும் பகிரங்கமாகவே பேசப்படுகிறது.

இன்று புலம்பெயர்ந்த நாடுகளில் இருந்து அனுப்பப்படும் பணம் தமிழரின் சமூக வாழ்வின் தேவைகட்குப் பயன்படாது கோவில்களில் முடங்குகிறது. அது கோபுரமாக, தேர்களாக, தேர் முட்டிகளாகக் கொடிக் கம்பங்களாக வடிவுறுகின்றது. ஒரு மேற்குலக சுற்றுலாப் பயணி கோவில் ஒன்றையும் அதன் தேர்-தேர் முட்டியையும் பற்றி விளக்கம் கேட்டபின், ஒருவருடத்தில் ஒரேயொரு நாள் இழுக்கப்படும் தேருக்கும் அதனைப் பாதுகாக்கும் தேர் முட்டிக்கும் பல கோடி ரூபாய்கள் ஏன் முடக்கப்பட்டுள்ளது என்ற நியாயமான கேள்வியைக் கேட்டார். அதற்குக் கிடைத்த பதில்: இது தமிழர்களின் பண்பாட்டுடன் சம்பந்தப்பட்டது என்பது தான். எனவே சாதி சமயமும் பெண் ஒடுக்குமுறையும் சீதனமும் சொத்து நகைகளும் குறுகிய சுயநலப் பெருமையும் தமிழ்த் தேசியத்தின் பெயரால் பாதுகாக்கப்படும் வரை, தமிழர் சமூகத்திற்கு விடிவு இருக்க முடியாது.

•••

## 05., பொதுபல சேனா பயணிக்கும் பாதை...

அதனால் அவற்றை நடைமுறைப்படுத்தும் ஆட்சிகட்கு எதிராக மக்கள் அதிருப்திக்கும் வெறுப்புக்கும் விரக்திக்கும் உள்ளாகி எதிர்ப்புத் தெரிவிப்போராக மாறி வருகின்றனர். அதேவேளை ஆட்சி அதிகாரத்தில் இருப்போர் தொடர்ந்தும் நாட்டு வளங்களை அந்நியருக்கு தாரை வார்த்தும் பல்தேசியக் கம்பனிகளின் கோரச் சுரண்டலுக்குக் குடைபிடித்தும் வருகின்றனர். தரகு முதலாளிகள் தாராளமாகவே கொழுகொழுவெனக் கொழுத்து வருகின்றனர். இந்நிலையில் அம்பலமாகிவரும் பொருளாதார அரசியல் ஏமாற்றுக்களையும் மோசடிகளையும் ஆட்சி அதிகாரத்தில் இருப்போர் மேன்மேலும் மூடி மறைக்க முடியாதபடி நெருக்கடிகள் அதிகரிக்கின்றன.

மகிந்த சிந்தனை அரசாங்கமும் அதன் தலைவரான ஜனாதிபதியும் அடுத்து மூன்றாவது தடவையாக அதிகாரத்திற்கு வர எத்தனிக்கின்றனர். எனவே அவர்களை இத்தகைய முயற்சிகளுக்கு ஆயுதப்படைகளுக்கு அப்பால் ∴பாசிசக் குழுக்களும் குண்டர்களும் வெவ்வேறு தளங்களில் தேவைப்படுகின்றன.

அத்தகைய ∴ பாசிசக் குழுக்கள், பேரினவாதத்தை வெறித்தனமாக முன்னெடுப்பவையாக இருப்பதையே அதிகாரத்தில் இருப்போர் விரும்புகின்றனர். இதனையே இப்போது பொதுபல சேனா, ராவணா பலய, போன்ற குழக்கள் பிரதிபலிக்கின்றன. பொதுபல சேனா முஸ்லிம்களை இலக்கு வைத்தே கடந்த இரண்டு வருடங்களாகச் செயற்பாட்டு வந்துள்ளது. பள்ளிவாசல்கள், மீதான தாக்குதல்களில் தொடங்கி அண்மைய அளுத்கம முஸ்லிம் மக்கள் மீதும் பள்ளிவாசல்கள் மீதுமான கொலைவெறித் தாக்குதல்கள் வரை வந்துள்ளன. மேற்கூறிய குழுக்கள் மட்டுமன்றிச் சிங்கள இனம், பௌத்த மதம், சிங்கள மக்களின் உரிமைகள் போன்றவற்றின் பெயரால் மேற்படி இனவாதக் குழுக்கள் ∴பாசிச வெறி பிடித்த பாதையில் பயணிக்கின்றன.

இவற்றின் வெறிகொண்ட செயற்பாடுகள் தமிழ், முஸ்லிம், மலையக மக்களையும் கிறிஸ்தவர்களையும் மட்டுமன்றி வெகு விரைவில் சிங்கள மக்களையும் நோக்கித் திரும்பும் என்பதில் எவ்வித ஐயமும் இருக்கமுடியாது. இப்போது முஸ்லிம்கள், அடுத்துத் தமிழர்கள், பின்பு மலையகத் தமிழர், கடைசியாகச் சிங்கள மக்கள். இவற்றுக்கான அறிகுறிகள் ஏற்கனவே வெளிவர ஆரம்பித்துவிட்டன. எனவே நாட்டின் ஜனநாயக முற்போக்கு இடதுசாரி சக்திகள் இந்த ∴பாசிசக் குழுக்களின் நடவடிக்கைளுக்கு எதிராக மக்கள் மத்தியில் தமது பணிகளை விரிவுபடுத்தி முன்னெடுப்பதில் மேலும் பன்மடங்கு வேகத்தைக் கொள்ளல் வேண்டும்.

•••





சப்பிரகமுவ பல்கலைக்கழகத் தமிழ் மாணவர்கள் மீதான இனவெறி அச்சுறுத்தல், தாக்குதல், கைது நடவடிக்கை போன்றவற்றைக் கண்டித்து அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது. இதில் பல்கலைக்கழகத்தின் பெரும்பான்மையான சிங்கள. தமிழ், முஸ்லிம் மாணவர்கள் பங்குபற்றினர். இந் இனவாத நடவடிக்கைகளுக்குப் பின்னால் அரச ஆதரவு இன, மத அடிப்படைவாத ∴பாசிசக் குழுக்களும் குண்டர்களும் இருந்து வருகின்றனர்.








# காஸாவின் அபிமன்யுக்கள்

உயிர்வாழ்ந்தவாறே இறந்து கிடப்போரிடையே
மரித்தும் வாழ்பவனை
மரணத்துள் வாழ்பவனை
மரணத்தால் வாழ்பவனை
எவ்வாறு அழைக்கலாம்?

அவன் போரை விரும்பியவனுமல்ல
அவனாகவே போரினுட் புகுந்தவனுமல்ல.
எப்போதுமே அவனைப் போர் சூழ்ந்திருந்தது.
அவன் பிறந்த இடமும்
வளர்ந்த இடமும் ஒரு போர்க்களமே.

அவனைச் சுற்றி வளைத்து நின்ற
வியூகத்தைப் பிளந்து உள்நுழையுந்
தேவை அவனுக்கு இருக்கவில்லை.
அவனைக் கருத்தரிக்கு முன்னரே
அவனது தாயை வியூகஞ் சூழ்ந்துவிட்டது.
அவன் வளரும் போது வியூகமும்
கற்சுவராகவும் இரும்பு வேலியாகவும்
கனல் வீசும் கடலாகவும் வளர்ந்து விட்டது.

முற்றுகையின் நடுவே பிறந்த அவனை
இலக்கு வைக்கவில்லை என்றே
கவச வாகனங்களிலும் உலங்கு வானூர்திகளிலும்
கடுவிசை விமானங்களிலும் போர்க் கப்பல்களிலும்
அதிவேகத் தாக்குதற் படகுகளிலும்
அமர்ந்திருந்த மாரதர்கள் ஏவுகணைகளையுங்
குண்டுகளையும் வீசியவாறும்
துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தவாறும்
வதிவிடங்களையெல்லாந் தகர்த்து
தரைமட்டமாக்கியவாறுஞ் சொன்னார்கள்.
அவர்கட்கு உடந்தையானோரும்
அதை உறுதிப்படுத்தினார்கள்.

நிராயுதபாணியாகவே பிறந்து வளர்ந்த
அவனை நிராயுதபாணியாக்குந் தேவை
எவருக்கும் இருந்ததில்லை.
முற்றுகை அவனை ஆயுதபாணியாக்கியது.
அவனது கண்ணிற்பட்ட ஒவ்வொரு கல்லும்
ஒரு அஸ்திரமாக உருமாறியது.
அவனைச் சூழ்ந்து நின்ற பகைவர்களால்
அவனை வீழ்த்த இயலவில்லை
ஏனெனில் அவன் இறந்தாலும்
அவன் இறக்கவில்லை.

முற்றுகை அலுத்துப் போனதால்
ஒரு நாள் வியூகத்தை
உடைப்பதென்று முடிவெடுத்தான்
முற்றுகைக்குட்பட்ட காஸா முடிவெடுத்தது.
வெறுங் கைகள் நெடு
மதில்களைத் தகர்த்தன.
வியூகம் உடைந்தது.
எல்லோரும் வெளியேறினர்.
வியூகத்தை உடைத்தது
வெளியேறுவதற்காக அல்ல என்பதால்
எல்லாரும் திரும்பி வந்தனர்.

இனி அவர்களை யார்
எப்படிக் கொன்றாலும்
அவர்கள் சாகப் போவதில்லை.
எனவே மரித்தும் வாழ்பவனை
மரணத்துள் வாழ்பவனை
மரணத்தால் வாழ்பவனை
அவனுடைய பேரால் அழைக்கலாம்.
அவர்களில் எவரது பேராலும் அழைக்கலாம்.

அவர்களில் எவரது பேரும்
பழக்கமில்லை என்றால்,
அபிமன்யு என்றும் அழைத்துக் கொள்ளலாம்.

சிவா

முன்னிலை சோஷலிஷக் கட்சி, புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி உட்பட இடதுசாரி ஜனநாயக சக்திகள் இஸ்ரேலின் காஸா மீதான தாக்குதலைக் கண்டித்து கொழும்பில் நடத்திய ஆர்ப்பாட்டத்தின்போது...














அளுத்கம முஸ்லிம்களுக்கு எதிரான இன வன்முறையைக் கண்டித்து சமூக நீதிக்கான வெகுஜன இயக்கம் வவுனியாவிலும், புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி யாழ்ப்பாணத்திலும் முன்னெடுத்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களின் போது...
















தேசிய கலை இலக்கியப் பேரவையின் மாத்தளைக் கிளை 17.08.2014 அன்று அதன் செங்கதிர் கலைக் குழுவின் ஓராண்டு நிறைவை முன்னிட்டு நடாத்திய மக்கள் கலை விழாவில் பெண்கள் சிறுவர்கள் என அனைவரும் ஆர்வத்துடன் பங்குபற்றியபோது...









வெளியிடுபவர்–வெ. மகேந்திரன். இல.15/4. மகிந்தாராம வீதி. கல்கிஸ்சை. அச்சிடுபவர்–கொம் பிரின்ட் சிஸ்ரம். HL1/2. டயஸ் பிளேஸ் கொழும்பு–12